விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 03 சனிக்கிழமை (16.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 119

# இலங்கையில் மனித உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## அதிக ஒத்துழைப்பை வழங்குவதாக பிரிட்டன் பிரதமர் அறிவிப்பு



(லண்டன்)

இலங்கையில் மனிதவுரிமையை வலுவாக உறுதிப்படுத்துவதற்கும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் பிரித்தானியாவால் வழங்கப்படுகின்ற ஒத்துழைப்பினை மேலும் அதிகரிக்கவுள்ளோம் என தெரிவித்துள்ள பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் மனித உரிமை தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் போக்குகளை தான் அறிந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த வாழ்த்துச் செய்தியில், பிரித்தானியாவில் வாழும் இலங்கையர்கள் உள்ளிட்ட அனைத்து இலங்கை மக்களுக்கும் தமிழ், சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்களை அவர் தெரிவித்துள்ளார்.

இலட்சக்கணக்கான மக்கள் புத்தாண்டை கொண்டாடும் வகையில் அவர்களின் அனைத்து உறவினர்களையும் சந்தித்துக் கொள்வதன் பெறுமதியை தான் அறிந்து கொண்டுள்ளேன்.

இலங்கையில் மனிதவுரிமையை உறுதிப்படுத்துவதற்கும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் பிரித்தானிய அரசு வழங்கும் ஒத்துழைப்பை மேலும் அதிகரிக்கவுள்ளோம். இரு வேறு இன மக்கள் ஒரு

23ஆம் பக்கம் பார்க்க....

## கடவை காவலாளிகளின் போராட்டம் முடிவு!

(கொழும்பு)

பாதுகாப்பற்ற புகையிரத கடவை காவலாளிகள் மேற்கொண்டிருந்த வேலை நிறுத்தப் போராட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

நேற்று பிற்பகல் 2.00 மணியுடன் வேலை நிறுத்தப் போராட்டம் நிறைவுக்கு வந்ததாக இலங்கை பாதுகாப்பற்ற புகையிரத கடவை காவலாளிகள் சங்கத்தின் செயலாளர் நிமல் சந்திரசிறி கூறினார்.

கடந்த 13ஆம் திகதி மாலை

24ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.செயலகத்துக்கு மேலதிக பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட செயலகத்திற்கு மேலதிக பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட செயலாளர் என். வேதநாயகத்தினால் விடுக்கப்பட்ட எழுத்துமூலக் கோரிக்கைக்கு அமைய பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

காணி உரிமைகளை பெற்றுத் தருமாறும், இராணுவத்தினரால் காணிகள் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை நிறுத்துமாறும் வலியுறுத்தி கடந்த திங்கட்கிழமை சிலர்

23ஆம் பக்கம் பார்க்க....

## மின்சாரத் தடை பிரதமர் உத்தரவு!

(கொழும்பு)

தமிழ்-சிங்கள புத்தாண்டின் போது நாட்டின் சில பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது தொடர்பில் நாளை மறுதினம் திங்கட்கிழமைக்குள் அதற்கான காரணத்தை தெரிவிக்குமாறு பிரதமர் ரணில்

24ஆம் பக்கம் பார்க்க....

## கிளிநொச்சி பகுதியில் கஞ்சாவுடன் இருவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கஞ்சா கடத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த பகுதிக்குச் சென்ற கிளிநொச்சி பொலிஸ் மற்றும் மது ஒழிப்பு பிரிவினர் வாகனங்களை சோதனை செய்தபோது முச்சரக்கர வண்டி ஒன்றில் கொழும்புக்கு கடத்துவதற்கு தயாராக இருந்த கஞ்சா

23ஆம் பக்கம் பார்க்க....

## அதிக வெப்பத்தால் முதியவர் மரணம்

(பனிக்கன்குளம்)

நாட்டில் நிலவி வருகின்ற அதிகமான வெப்பம் காரணமாக உடலில் இரத்த அழுத்தம் அதிகரித்தால் முதியவர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு-முள்ளியவளை கணுக்கேணி மேற்கு பகுதியைச் சேர்ந்த இளையதம்பி சுந்தரலிங்கம் (வயது 72) என்ற முதியவரே மரணமடைந்தவராவார்.

23ஆம் பக்கம் பார்க்க....

# வடக்கு அமைச்சரவையை மாற்றியமைக்க முதலமைச்சருடன் கலந்துரையாடி முடிபு

## உறுப்பினர்களிடம் சம்பந்தன் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர், அமைச்சர்கள் ஆகியோரினை மாற்றுமாறு முன் வைககப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பில் முதலமைச்சரோடு கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படுமென எதிர்க்கட்சி தலைவரும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....



# அமெரிக்காவின் அறிக்கைக்கு பதிலளிக்க கால அவகாசம் தேவை

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வதேச நாடுகளின் மனித உரிமை நிலைமை குறித்து ஆய்வு செய்யப்பட்டு அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை தொடர்பான அறிக்கை குறித்து பதிலளிக்க கால அவகாசம் தேவை என இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ஜய

24ஆம் பக்கம் பார்க்க....

# யாழ்.மண் சாதாரண மண்ணல்ல இதுவொரு புண்ணிய பூமி

## -யாழ்.இந்திய துணைத்தூதுவர்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மண் சாதாரண பூமி கிடையாது. அந்த மண்ணை சாதாரணமாக நாங்கள் கருதுவதில்லை. இதுவொரு புண்ணிய பூமி, இதுவொரு இலக்கிய பூமி. இதுவொரு சிந்தனை பூமி, இதுவொரு அறிவுடைய பூமி

23ஆம் பக்கம் பார்க்க....

## 1056 பேர் கைதாகினர்

(கொழும்பு)

மது போதையில் நிதானமின்றி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 238 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 10ஆம் திகதியிலிருந்து போதையில் வாகனம் செலுத்துபவர்களுக்கு எதிராக பொலிஸாரினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விசேட நடவடிக்கையால் குறித்த

24ஆம் பக்கம் பார்க்க....

# தமிழர்களது தனித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும்

## சிறிதரன் எம்.பி உரை

(யாழ்ப்பாணம்)

தமிழர்களாகிய எமக்கென்றொரு தனித்துவமான அடையாளங்கள் உண்டு. அவை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வி விளையாட்டு பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் யாழ் மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்திய சித்திரைப் புதுவருட சிறப்பு தாச்சி சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் மாலை 4.00 மணிக்கு உடுவில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

24ஆம் பக்கம் பார்க்க....

## ✦ பணச் சலவை குற்றச்சாட்டு
## ✦ ரக்பி வீரர் தாஜூடீன் மரணம்

## நாமல் எம்.பி விரைவில் கைது!



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச விரைவில் கைது செய்யப்படலாம் என பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. பணச் சலவை குற்றச்சாட்டு சம்பந்தமாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக

24ஆம் பக்கம் பார்க்க....

# வன்னிக் குறோஸ் கலாசார பேரவையின் ஏற்பாட்டில் முல்லை மாவட்ட கலைஞர்களுக்கான காத்தவராயன் சிந்து நடைக்கூத்துப் போட்டி

இடம் : மு/வித்தியானந்தாக் கல்லூரி, முள்ளியவளை.
காலம் : 17.04.2016 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9 மணியில் இருந்து நள்ளிரவு வரை

**தலைமை**
சி.நாகேந்திரராசா
(தலைவர், வன்னிக் குறோஸ் கலாசாரப் பேரவை)

**பிரதம விருந்தினர்**
வைத்திய கலாநிதி கௌரவ சி.சிவமோகன
(பாராளுமன்ற உறுப்பினர் - வன்னி மாவட்டம்)

**சிறப்பு விருந்தினர்**
திரு.அன்ரனி ஜெகநாதன்
(பிரதி அவைத் தலைவர், வடமாகாண சபை)

**அனுசரணை மற்றும் நிகழ்ச்சி சிறக்க வாழ்த்துவோர் :**



சி.சிவமோகன் - பாராளுமன்ற உறுப்பினர், வன்னி மாவட்டம்.
சந்திரரூபன் (தும்பியன்) - பவிதன் கட்டிட ஒப்பந்தக்காரர், கருவலயங்கண்டல்.
கே.கிருஸ்ணகுமார் - ஏசியன் கொக்கக்கோலா விநியோகத்தர், புதுக்குடியிருப்பு.
ந.விசயரூபன் - வர்த்தக நிலையம், தண்ணீருற்று.
எம்.றெஜினோல்ட் - பிரதம கணக்காளர், மாவட்ட செயலகம், முல்லைத்தீவு.
த.பரஞ்சோதி - சட்டத்தரணி, முள்ளியவளை.
த.நீதன் - கோபி ஊர்திகள் சுத்திகரிப்பு நிலையம், புதுக்குடியிருப்பு.
ச.சிவதர்சினி - ஆசிரியர், மத்திய கல்லூரி, புதுக்குடியிருப்பு.
கண்ணகி கல் உற்பத்தி நிலையம், முள்ளியவளை.
அ.கபிலன், முல்லைத்தீவு.
ஜே.அமலன், சம்மாட்டியார், அளம்பில்.
சி.சிவஜெயந்தன், கோம்பாவில்.
கி.விஜிந்தன், தமிழ் தாய் கல்வி நிலையம், முள்ளியவளை.
அ.தவபாலன், 2ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
சபா ஐயா, ஸ்ரீ பொன்னம்பலம் ஞான வேலாயுத சுவாமி, வள்ளிபுரம்.
ரி.சுதர்சசர்மா, அ பகுதி, தேவிபுரம்.
அ.சிவலிங்கம், கண்ணகி கடலுணவு வாணிபம், வட்டுவாகல்.
ம.பூலோகம், செல்வபுரம், முல்லைத்தீவு.
வி.கெங்காதரன் (ரகு), கடலுணவு வாணிபம், சிலாவத்தை.
ம.குணசிங்கம், சம்மாட்டியார், கள்ளப்பாடு.
த.ஜெகதீஸ்வரன், மாமூலை, முள்ளியவளை.
சி.பகீரதன், சம்மாட்டியார், அளம்பில்.
எம்.மதனராஜா, சம்மாட்டியார், அளம்பில்.
சிவபாதம், சம்மாட்டியார், அளம்பில்.
சி.குணசீலன், சிவா ஹாட்வெயார், முல்லைத்தீவு.
ஏ.யேசுதாஸ், அழகன் மோட்டர்ஸ், முல்லைத்தீவு.
சி.உலகநாதன், பல்பொருள் வாணிபம், முல்லைத்தீவு.
சி.சிவதர்சன், சம்மாட்டியார், அளம்பில்.
பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், புதுக்குடியிருப்பு.
முல்லை தெற்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், செம்மணல்.
முல்லை கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், முல்லைத்தீவு.
திருமதி செல்வமலர் (லண்டன்), 2 ஆம் கண்டம், வலது கரை, முத்தையன்கட்டு.
பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், முள்ளியவளை.
கி.வேந்தன் ( லண்டன்), குமிழமுனை, முள்ளியவளை.

**ஒழுங்கமைப்பு:**
வன்னிக் குறோஸ் கலாசார பேரவை- முல்லை மாவட்டம

**ஆதரவு:**
இலங்கை தமிழரசுக் கட்சி

அனைவரும் வருக! கலை இன்பம் பெறுக!!

- வன்னிக் குறோஸ் கலாசார பேரவை - முல்லை மாவட்டம்

(ரி-4349)

# மரண அறிவித்தல்

## திருமதி சுகந்தி ஜனார்த்தன்



யாழ். பருத்தித்துறை தம்பசிட்டி தம்பாவத்தையை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுகந்தி ஜனார்த்தன் அவர்கள் கடந்த 11.03.2016 வெள்ளிக்கிழமையன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் குணம்- ஈஸ்வரிதேவி தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் ஜனார்த்தன் அவர்களின் அன்பு மனைவியும் மதீசன், மதுசா, மயூரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சுந்தசாமி-செல்லம்மா தம்பதியரின் அன்புப் பேர்த்தியும் நல்லையா- புவனேந்திரராணி தம்பதியரின் அன்பு மருமகளும் சுமதி (யா/ஞானசாரியார் கல்லூரி ஆசிரியை), சுதாகர் (கனடா), பிரபாகர் (யா/ வேலாயுத மகா வித்தியாலய ஆசிரியர்), வளர்மதி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் குலேந்திரம், பாஸ்கரன், யோகசுந்தரி, யசிந்தா, புவனேஸ்வரன் (சுவிஸ்), சாந்தநாதன் (சுவிஸ்), ரவீந்திரன் (சுவிஸ்), நமிந்தன் (லண்டன்), ரஜனி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சந்தியா, கௌதமன், சிந்தியா ஆகியோரின் அன்புச் சித்தியும் பிரியந், பிருந்தா, பிரீத்தி, றொசானா, யனுஸ், நிருஷன் ஆகியோரின் அன்பு அத்தையும் தங்கராசா (லண்டன்), பாலகிருஷ்ணன் (கனடா) ஆகியோரின் மருமகளும் பரிபூரணம், சரஸ்வதி, தெய்வநாயகி ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் கிரியைகள் லண்டனில் நாளை (17.04.2016) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் (இலங்கை நேரப்படி பிற்பகல் 2.00 மணியளவில்) இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தம்பாவத்தை,
தம்பசிட்டி,
பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர்
021 222 0442, 077 951 1235,
077 314 4742.

(ரி-4350)

# நிதிக்குற்றப் பிரிவுக்கு விரைவில் மூடுவிழா!

## பிரதமர் ரணிலும் ஆதரவு

(கொழும்பு)

**ஊழல் மோசடிகள் தொடர்பில் ஆராய்வதற்காக உருவாக்கப்பட்ட நிதிக்குற்றப் புலனாய்வு திணைக் களம் விரைவில் கலைக்கப்படவுள்ளதாக உயர் மட்ட அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.**

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா உட்பட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதியிடம் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படும் அதேவேளை, இதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிதிக் குற்றப் புலனாய்வு திணைக்களம் மூடப்படும் பட்சத்தில் அதற்கு இணையாக நிதி மற்றும் பொருளாதார புலனாய்வு அமைப்பு என்ற பிரிவு நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் நிறுவப் படவுள்ளது. அதன்படி நிதிக் குற்றப் பிரிவின் பிரதானியாக செயற்படும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரவீந்திர வித்யாலங்கார இந்த புதிய அமைப்பின் பிரதானியாகவும் செயற்படுவார் எனக் கூறப்படுகிறது. (இ-5)

## மோட்டார் திருத்திய இளைஞன் தவறிக்கிணற்றினுள் விழுந்து பலி!

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை விநாயக முதலியார் வீதியில் உள்ள வீடு ஒன்றில் மோட்டார் திருத்தும் வேலையில் ஈடுபட்டிருந்த இளைஞன் ஒருவர் தவறிக் கிணற்றுக்குள் வீழ்ந்ததில் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.45 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தனபாலசிங்கம் வசீகரன் (வயது-25) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வந்த இவ் இளைஞன் வருடப்பிறப்பினை முன்னிட்டு பருத்தித்துறை விநாயக முதலியார் வீதியில் உள்ள தமது வீட்டிற்கு வந்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை தமது வீட்டுக் கிணற்றுக் கட்டில் ஏறி இருந்து மோட்டார் திருத்தும் வேலையில் ஈடுபட்டிருந்த வேளை தவறி வீழ்ந்து அவர் மரணமடை ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது இச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-60)

## தமிழர்களின் நிலத்தை தமிழரே ஆள வேண்டும்-சீமான் ஆவேசம்




(12ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்களின் மரண தண்டனையை பா.ஜ.க. தடுத்ததாம்

ஐந்து இந்திய மீனவர்களுக்கு இலங்கையில் விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனையை பாரதீய ஜனதா கட்சி தடுத்ததாக அக் கட்சியின் தலைவர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் காரணமாக தமிழக மீனவர்களின் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்துவது தடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

திருச்சிராப்பள்ளியில் இந்திய ஊடகவியலாளர்களை நேற்று சந்தித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.




அமிர்ஷா பெருமிதம்

தமிழக மாநில அரசியல் கட்சிகளுக்கு பதிலீடாக பாரதீய ஜனதா கட்சி அமையும் என அவர் தெரிவித்தார்.(இ-5)

## மூன்று இந்திய கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தில்

இந்திய அரசாங்கத்திற்கு சொந்தமான மூன்று கப்பல்கள் பயிற்சி சுற்றுலாப் பயணமாக கொழும்பு துறைமுகத்திற்கு வந்துள்ளன.

இந்த கப்பல்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததாக கடற்படையினர் கூறியுள்ளனர்.




இந்திய கடற்படையினருக்கு சொந்தமான சுஜாதா, டீர் ஆகிய கப்பல்களும், இந்திய கடலோர காவற்படையினருக்கு சொந்தமான வருண என்ற கப்பலும் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

இலங்கை கடற்படையினர சம்பிரதாய பூர்வமாக கப்பல்களை வரவேற்றுள்ளனர். இலங்கை-இந்திய கூட்டு கடற்படை பயிற்சியின் பின்னர் எதிர்வரும் 19 ஆம் திகதி இந்த கப்பல்கள் இலங்கையில் இருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளன. (இ-5)

## வெளிநாட்டு நேரடி முதலீடுகள் கிடைக்கும் நாடுகளின் வரிசையில் இலங்கை முன்னிலை

(கொழும்பு)

ஆசியாவில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் கிடைக்கும் நாடுகளின் வரிசையில் இலங்கை முன்னிலை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு வெளிநாட்டு நேரடி முதலீடுகள் கிடைக்கும் நாடுகளின் வரிசையில் முதல் பத்து இடங்களில் இலங்கை இடம்பிடித்துள்ளது.

சீனா, இந்தோனேசியா, மலேசியா, வியட்நாம், பிலிப்பைன்ஸ், மியன்மார், தாய்லாந்து, இந்தியா, பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளும் இதில் உள்ளடங்குகின்றன. தெற்காசிய வலய நாடுகளில் இலங்கையும் பங்களாதேஸூம் அதிகளவு வளர்ச்சியை பதிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.(இ-5)

## ஐ.எஸ்.தீவிரவாதிகளின் புதிய உறுப்பினர்கள் லிபியாவிற்குச் செல்வது அதிகரித்துள்ளது

### அமெரிக்க ஜனாதிபதி எச்சரிக்கை

ஈராக்கிலும் சிரியாவிலும் சந்தித்துள்ள தோல்விகள் காரணமாக ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் புதிய உறுப்பினர்கள் லிபியாவிற்கு செல்வது அதிகரித்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா எச்சரித்துள்ளார்.

சி.ஐ.ஏயின் தலைமையகத்தில் பாதுகாப்பு அதிகாரிகளை சந்தித்த பின்னர் அவர் இதனை தெரிவித்துள்ளார். புதிதாக உள்வாங்கப்பட்டுள்ள ஐ.எஸ். உறுப்பினர்கள் சிரியாவிறகும் ஈராக்கிற்கும் செல்வதை நாங்களும் எங்களது சகாக்களும் கடினமாக்கியதை தொடர்ந்து அவர்கள் தற்போது லிபியாவிற்கு செல்ல தொடங்கியுள்ளனர். இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கையை எடுப்போம் என அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## விமானங்களைச் சுட்டு வீழ்த்துவோம் ரஷ்யாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

(மொஸ்கோ)

பால்டிக் கடற்பகுதியில் அமெரிக்க யுத்தக்கப்பலிற்கு மிக அருகில் ரஷ்ய விமானங்கள் சென்று திரும்பியுள்ள சம்பவம் இரு நாடுகள் மத்தியிலான உறவுகளில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ள அதே வேளை தனது யுத்தக் கப்பலிற்கு அருகில் வரும் விமானங்களின் மீது துப்பாக் கிப் பிரயோகத்தை மேற்கொள்வதற்கான உரிமை தனக்குள்ளதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி இந்த நடவடிக்கையை கண்டித்துள்ளதுடன் இது தொடர்பாக ரஷ்யாவுடன் தொடர்பு கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.


நாங்கள் இத்தகைய செயற்பாடுகளை கண்டிக்கின்றோம், இது கண்மூடித்தனமானது, எங்களை தூண்டும் ஒரு நடவடிக்கை ஆபத்தானது. விதிமுறைகளின் அடிப்படையில் எங்களால் அந்த விமானங்களை சுட்டு வீழ்த்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா நடுக்கடலில் அச்சமடையப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## திருமலை மாணவர்களின் கொலைக்கு நீதிகோரி அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்

திருகோணமலையில் 2006ஆம் ஆண்டு அதிரடிப்படையினரால் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்ட ரஜிதர் மனோகரன் உட்பட 5 தமிழ் மாணவர்களின் மரணத்திற்கு நீதி வழங்குமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தி அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.





மேலும் 5 மாணவர்கள் கொலை செய்யப்பட்டதாக கூறப்படும் சம்பவம் உட்பட 15 மனிதவுரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக் கப்பட்ட விசேட குழு, 2009 ஆம் ஆண்டு குறித்த விசாரணை அறிக்கையை முன்னாள் ஜனாதிபதியிடம் கையளித்துள்ளது.

இந்த நிலையில் குறித்த கொலை சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில் குறித்த மாணவர்களின் பெற்றோர் தமது பிள்ளைகளின் மரணத்திற்கு நியாயம் கிடைக்கும் என மிக நீண்டகாலமாக எதிர்பார்த்து காத்துள்ளனர்.

எனவே, பொறுப்புக் கூறும் அதிகாரிகள் அநீதியான முறையில் கொலை செய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோருக்கு நியாயத்தை நிறைவேற்ற வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது. (இ-5)

# நினைவலைகள்



திதி : 16.04.2016

**திரு. சின்னத்தம்பி ஆறுமுகம்**
அன்னை மடியில் : 21.03.1935
ஆண்டவன் அடியில் : 27.10.2013

**திருமதி மகேஸ்வரி ஆறுமுகம்**
அன்னை மடியில் : 27.12.1942
ஆண்டவன் அடியில் : 20.04.2013

கருவறை சுமந்து காலச்சூழ்ச்சியில் பாடம் பகிர்ந்து
காலமெல்லாம் காத்து காப்பரணாகி நாம் உயரும் படியாகி
விதிவழி விரைந்ததனால் கண்ணயர்ந்த தாயே... எம் விழியே
மூன்றாண்டுகள் முன்நகர்ந்திங்கு போனாலும்
நலந்தேற மறுக்கிறது நம் நாடித்துடிப்பதிர்வு

பசுமை வயல்வெளியில் மிளிர்ந்த எம்மனை நிழலில்
தோப்பாக நாம் வாழ்ந்த இனிமை நாட்களிலே
எம்மினிய தேன்கூட்டின் இராணித்தேனியாகி
எம் தந்தை இரைதேட இணையற்ற துணை தந்தவரே
வாழ்வின் வசந்தத்திற்கு வழிகாட்டிய எம் உயர்வே


வாழ்க்கை பயணத்தில் நீர் பகிர்ந்த வழிமுறைகள்
வாழ்க்கை தடத்தில் என்றும் எம் வலிக்கு மருந்தாகும்
நமக்கு ஒளி தந்தவரே நாம் வணங்கும் முதற்கடவுளரே
நீர் உறங்கிப்போனாலும் உம் நினைவே எம் ஒளியாகும்.

பத்தன்மோட்டை,
கண்டாவளை,
கிளிநொச்சி.

பிரிவால் துயருறும் :
பிள்ளைகள்

(சி-4348)

# டெல்லி வெற்றி




கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியை டெல்லி டேர்டேவில்ஸ அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றது.

டெல்லி பெரோஷா கோட்லா மைதானத்தில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் டெல்லி டேர்டேவில்ஸ்அணியும், கிங்ஸ லெவின் பஞ்சாப் அணியும் மோதின. முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற டெல்லி டேர்டேவில்ஸ்அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. இதனையடுத்து களமிறங்கிய கிங்ஸ் லெவன்பஞ்சாப்அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 111 ஓட்டங்கள் எடுத்தது. இதனைத் தொடர்ந்து 112 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய டெல்லி டேர்டேவில்ஸ் அணி 13.3 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 113 ஓட்டங்கள் எடுத்து எளிதாக வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக டெல்லி அணியின் அமித் மிஸ்ரா தெரிவானார். (க)


# தேவை

எமது அச்சகத்துக்கு புத்தகம் கட்டுநர் பெண் பிள்ளைகள் தேவை. பழக ஆர்வமுள்ளவர்களும் விரும்பத்தக்கது.

**தொ.பே: 021 222 9468**

கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

# காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்திக்கு அருகில் பழனி ஆண்டவர் கோயிலுக்கு அண்மையில் பிரதான வீதியிலிருந்து 12 அடி பாதையுடன் 60 மீற்றர் தூரத்தில் 76 அடி அகலமும் 110 அடி நீளமும் ஆன 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 077 703 7058


# பாடசாலை அபிவிருத்திச் சங்க, பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

யா/மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சங்க, பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் (17.04.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு பாடசாலைப் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அக்கூட்டத்தில் நடப்பாண்டிற்கான அங்கத்தவர் தெரிவுகள் இடம்பெற இருக்கின்றது. எனவே பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்,
யா/மட்டுவில் வடக்கு,
சந்திர மௌலீச வித்தியாலயம்.

(4213)

# தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம் 34-வது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும்

காலம் : 17.04.2016 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 3.00 மணி
இடம் : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் அன்னபூரணி மண்டபம்
தலைவர் : செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்
தலைவர், ஸ்ரீ துர்காதேவி தேவஸ்தானம்.

அன்புடையீர்,
வணக்கம்

துர்க்கை அம்பாளின் திருவருளினால் எங்கள் துர்க்காபுரம் மகளிர் இல்லம் சிறப்பாக இயங்கி வருகிறது. எங்கள் இல்லத்தின் 34ஆவது ஆண்டு நிறைவு விழா அம்பாளின் அருளாலும் அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் இறைநிலை ஆசியாலும் அன்பர்களின் ஆதரவாலும் சிறப்பாக நடைபெறவுள்ளது. எமது இல்லத்தில் தற்போது 140 பிள்ளைகள் மகிழ்வுடன் வாழ்கிறார்கள். அவர்களின் எதிர்கால வாழ்வு சிறக்க இந்நாளில் நீங்கள் அனைவரும் வருகை தந்து அன்புக் குழந்தைகளை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*நிர்வாகசபை*
*துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை*

**பிரதம விருந்தினர்**
உயர்திரு.சிவஞானம் ஜெயசங்கர் அவர்கள்
(பணிப்பாளர், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம் கிழக்கிலங்கை)

**சிறப்பு விருந்தினர்**
வைத்திய நிபுணர் கேதீஸ்வரி சிவசிதம்பரம் அவர்கள்
(கதிரியக்கத்துறை, யாழ்.போதனா வைத்தியசாலை)

**கௌரவ விருந்தினர்**
Dr.சிவநந்தினி உதயகுமார் அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர், உடற்கூற்றியல்துறை, மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

**நிகழ்ச்சி விபரம்**

| | |
|---|---|
| 3.00 மணி : | கோயில் வழிபாடு |
| 3.05 மணி : | திருமுறை வழிபாடு |
| 3.10 மணி : | மகளிர் இல்ல மாணவர்களின் ஆக்கக் கண்காட்சி திறந்து வைத்தல் |
| 3.20 மணி : | வரவேற்புரை – திருமதி கலாதேவி பொன்னம்பலம் M.A அவர்கள் (நிர்வாகசபை உறுப்பினர்) |
| 3.25 மணி : | ஆசியுரை – சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள் (பிரதமகுரு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்) |
| 3.30 மணி : | தலைமையுரை– செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் அவர்கள் (தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்) |
| 3.40 மணி : | வாழ்த்துரை – திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்கள் (அதிபர், துர்க்காபுரம் மகளிர் இல்லம்) |
| 3.50 மணி : | மகளிர் இல்ல அறிக்கை – சிரேஷ்ட மாணவி செல்வி தேவரூபி ஜெயகுமார் |
| 4.00 மணி : | விருந்தினர் உரை |
| 4.40 மணி : | பரிசில் வழங்கல் |
| 5.00 மணி : | கலைநிகழ்வு |
| 6.00 மணி : | நன்றியுரை – திரு.நா.தவநாதன் அவர்கள் (நிர்வாகச் செயலாளர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்) மகளிர் இல்ல கீதம் |

*நன்றி*

(சி-4351)

# மரண அறிவித்தல்



## இளையார் அண்ணாமலை

தெல்லிப்பளை கிழக்கு சித்தியம்புளியடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளையார் அண்ணாமலை அவர்கள் நேற்று (15/04/2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இளையார் - நாகி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற எல்லுப்போலை- சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், அருளானந்தம், உமாசந்திரன், வினிதா, காலஞ்சென்ற பவணவேல் மற்றும் மோகனா, கௌதமி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மேரி, தர்ஷினி, யுகதீபன் ஆகியோரின் மாமனாரும், நிலக்ஷனின் (நிரு) அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2016) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக இருபாலை கிறிஸ்தவ மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தெல்லிப்பளை கிழக்கு,
சித்தியம்புளியடி.

தகவல்:
குடும்பத்தினர்

(4214)




# BSc (Hons) Business Management

# BSc (Hons) Software Engineering

**Associate College of Cardiff Metropolitan University - UK**

INTERNATIONAL COLLEGE OF BUSINESS & TECHNOLOGY

**ICBT CAMPUS JAFFNA**

580, Hospital Rd., Jaffna

021 - 4 777 888

National Business Excellence
2012 | 2013 | 2014 | 2015
Gold Award Winner
Education Service Sector

www.icbt.lk

(சி-4346)

### வெள்ளை வானில் வந்தோரால் அழைத்து செல்லப்பட்ட

# முன்னாள் போராளி ஜெயந்தனின் தாயார் மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி வெள்ளை வானில் வந்தோரால் அழைத்துச் செல்லப்பட்ட முன்னாள் போராளியான ஜெயந்தனின் தாயார் குறித்த சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத்தில் நேற்றைய தினம் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்துள்ளார்.

சாவகச்சேரி நுணாவிலை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை ஜெயந்தன் (வயது 31) புனர்வாழ்வு பெற்று கடந்த 2011 ஆம் ஆண்டு விடுதலையாகி யிருந்தார்.

சாவகச்சேரியில் கடந்த 10 ஆம் திகதி வரை கைது செய்த விடயம் தொடர்பாக அவரது தாயார் கருத்து தெரிவிக்கையில்,

கோவில் திருவிழாவுக்காக நுணாவிலில் அமைந்துள்ள எனது வீட்டுக்கு குடும்பமாக வந்திருந்தனர். சம்பவதினம் காலை 9 மணியளவில் வீட்டில் வேலி அடைத்துக்கொண்டு இருந்தார். 2 மோட்டார் சைக்கிள்களில் சிவில் உடையில் வந்த 4 பேர் அவரை விசாரணை செய்வதற்காக வீட்டினுள் அழைத்து வந்தார்கள்.

பேசிக்கொண்டிருக்கும் போதே எமது வீட்டை சோதனையிட்டார்கள். அப்போது வெள்ளைநிறவாகனம் ஒன்று எனது வீட்டுக்குமுன் வந்து நின்றது. அவருக்கு கையில் விலங்கு போட்டு அந்த வாகனத்தில் அவரை ஏற்றிச் சென்றுவிட்டார்கள்.

நாம் எதற்காக விசாரணை செய்கிறீர்கள்? என்ன பிரச்சினை என்று வினவிய போது, அனைத்தையும் அவரிடம் கேளுங்கள் எனத் தெரிவித்தனர்.

அவருடன் சேர்த்து வீட்டில் நின்ற இரண்டு மோட்டார் சைக்கிளையும் கொண்டுசென்றார்கள்.

நாங்கள் அவரை விடும்படி கேட்டபோது அரியாலையில் அமைந்துள்ள சிஐடி அலுவலகத்துக்கு வருமாறு சொல்லி விட்டுசென்றார்கள். நாம் உடனடியாக அங்கு சென்றபோது வவுனியாவில் உள்ள பயங்கரவாத தடுப்புபிரிவினரின் அலுவலகத்துக்கு செல்லுமாறும் அங்கு அவரை பார்க்க முடியும் எனவும் கூறினார்கள்.

நாம் அடுத்தநாள் 11 ஆம் திகதி காலை அவர்கள் கூறிய இடத்துக்கு சென்றபோது அது ஒரு பாழடைந்த வீடாக இருந்தது. அங்கு சென்றபோது ஜெயந்தனை தேடியா வந்தீர்கள் எனக் கேட்டார்கள். அங்கு எனது மகனை வீட்டில் வைத்து விசாரணை செய்தவரும் நின்றிருந்தார்.

ஆவரை பூசாவிற்கு அனுப்பியுள்ளதாகவும் உங்களுடைய வதிவிடத்தை கிராமசேவகர் ஊடாக உறுதிப்படுத்திய பின்னர் அங்கு, சென்று அவரை சந்தியுங்கள் என தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் நுணாவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்றிருந்த போது அவர்கள் எமது முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை.

எனது மகன் எந்த குற்றச்செயல்களிலும் ஈடுபடவில்லை. கைது செய்ததற்கான காரணமும் இது வரை யாரும் தெரிவிக்கவில்லை. உரிய காரணத்தை கூறி எனது மகனை மீட்டுத் தருமாறு மனித உரிமை ஆணைக்குழுவில் முறைபபாடு பதிவு செய்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## நினைவு தின நிகழ்வு

கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் ஸ்தாபர்களில் ஒருவரும் சமூக தேசிய உரிமைக்கான செயற்பாட்டாளருக்குமான அமரர் மு.சின்னராசாவின் ஓராண்டு நினைவு தின நிகழ்வு நாளை 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு உரும்பிராய் சரஸ்வதி சனசமூக நிலைய கலையரங்கில் நடைபெறும்.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளரும் யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் தலைவருமான என். இன்பம் இந்நிகழ்வுக்கு தலைமை தாங்கவுள்ளார்.

யாழ்.மாவட்டத்தின் கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் செயலாளர் சித்திரா வரவேற்புரையையும் அரசியல் மற்றும் இலக்கிய ஆய்வாளர் என்.நிலாந்தன் "நிலைமாறு காலத்தில் சமூக உரிமை" என்னும் தலைப்பில் விசேட சிறப்புரையும் ஆற்றவுள்ளார். (இ




## இரண்டு பெண்களின் தாலிக்கொடி அறுப்பு

(யாழ்ப்பாணம்)

கோவிலுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த 2 பெண்களின் தாலிக்கொடி மற்றும் சங்கிலியை இனம்தெரியாத நபர்கள் அறுத்துச்சென்றுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை 2 பெண்கள் கலட்டி அம்மன் கோவிலுக்கு சென்றுவிட்டு இரவு 10.30 மணியளவில் வீடு திரும்பிக்கொண்டிருந்த போது கலட்டி சீனியர் வீதிப்பகுதியல் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பெண்கள் அணிந்திருந்த தாலிக்கொடியையும் சங்கிலியையும் அறுத்துச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் குறித்த பெண்கள் தமது முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளனர். (இ-9)

### தற்கொலை அங்கி மீட்பு

# கைது செய்யப்பட்ட மூவர் தொடர்பாக மனிதவுரிமை ஆணைக்குழுவில் பதிவு

## இணைப்பாளர் கனகராஜ் தகவல்

சாவகச்சேரி மறவன்புலவு பகுதியில் தற்கொலை அங்கி மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் இந்த மாதத்தில் இதுவரை 3 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் சி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி முன்னாள் போராளி ஒருவர் வெள்ளை வானில் கொண்டுசெல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக அவரது தாயார் நேற்றைய தினம் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்திருந்தார். குறித்த விடயம் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி முன்னாள் போராளி ஒருவரை வானில் கொண்டு சென்றமை தொடர்பாக எம்மிடம் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான வாக்குமூலத்தை கைதுசெய்யப்பட்டவரின் தாயாரிடம் இருந்து பெற்று உடனடியாக மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளருக்கு தெரியப்படுத்தியுள்ளேன். ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

சாவகச்சேரி மறவன்புலவு பகுதியில் அண்மையில் தற்கொலை அங்கி மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டவர்கள் தொடர்பில் இந்த மாதத்தில் இதுவரை எம்மிடம் 3 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எம்மிடம் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளில் ஏனைய 2 முறைப்பாடுகளுக்கும் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டதற்கான கைதுப்பத்திரம் அவரவர் குடும்பத்தினரிடம் வழங்கப்பட்டுள்ளது என்பதற்கமைய முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆனால் நுணாவில் பகுதியில் கைது செய்யப்பட்டவர் தொடர்பாக கைதுப்பத்திரம் எவையும் குடும்பத்தினருக்கு வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளனர்.



எனவே இது தொடர்பான விசாரணைகளை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய முன்னெடுக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# பக்திப்பாடல் இறுவெட்டு வெளியீடு

இந்திய- இலங்கைக் கலைஞர்களின் கூட்டுத் தயாரிப்பாக யாழ். வண்ணை காமாட்சி அம்மன் (நாச்சிமார் கோவில்) மீது பாடப்பட்ட நினைவெல்லாம் காமாட்சி என்ற பக்திப் பாடல் இறுவெட்டின் வெளியீட்டு விழா அண்மையில் இடம் பெற்றது.

ஒலியமைப்பாளர் மினி மகாலிங்கத்தின் தயாரிப்பிலும் இசையமைப்பாளர் ஜி.சாயிதர்ஷனின் இசையமைப்பிலும் வெளிவந்துள்ள இந்த இறுவெட்டின் வெளியீட்டு விழாவிற்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமை தாங்கினார். இந்திய துணைத்தூதர் ஆ. நடராஜன் பிரதம விருநதினராகக் கலந்து கொண்டு இறுவெட்டை வெளியிட்டு வைத்தார்.



இந்நிகழ்வில் வண்ணை காமாட்சி அம்மன் ஆலயப் பரிபாலன சபைத் தலைவர் க.சிவகுமார் வரவேற்புரையையும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரையையும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் சிறப்புரையையும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் பா. அகிலன் அறிமுகவுரையையும் இசைவாணர் கண்ணன் இறுவெட்டு வெளியீடு தொடர்பான ஏற்புரையையும் இசையமைபபாளர் கோ. சத்தியன் நன்றியுரையையும் ஆற்றினர். (இ-29)

# சைவ சித்தாந்த வகுப்புக்களும் செந்தமிழ் வழிபாட்டு பயிற்சியும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சைவ மகா சபையினால் சைவ சித்தாந்த வகுப்புக்களும் செந்தமிழ் வழிபாட்டு பயிற்சி நெறியும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு பின்புறம் கல்லூரி வீதியில் அமைந்துள்ள சைவமகாசபை தலைமையகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

செந்தமிழ் வழிபாட்டு பயிற்சிகளை கற்பதன் மூலம் ஆலயங்களில் பூசை செய்வதற்கான வாய்ப்பும் புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ் வழிபாட்டு கோவில்களில் குறித்த காலம் பணிபுரிவதற்குரிய வாய்ப்பும் சைவ மகா சபையால் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

அத்துடன் சைவநெறி கூடத்தில் எதிர்வரும் ஆனி மாத இறுதியில் நடத்தப்படவுள்ள ஞானலிங்கேதீஸ்வரர் திருக்கோவில் குடமுழுக்கில் பூசை அர்ச்சகராக பங்குபற்றும் வாய்ப்பு வழங்குவதோடு வேதனமும் வழங்கப்படவுள்ளது. சடங்குகளை தமிழில் ஆற்றுவதற்குரிய புதிய செயற்றிட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளது.

செந்தமிழ் திருமுறைகள் மூலம் இறைவனை அர்ச்சிக்கும் செயற்பாடுகளில் பங்கெடுக்க விரும்புவோர் குறித்த பயிற்சி நெறிகளில் கலந்து கொள்ளுமாறும் மேலதிக தொடர்புகளுக்கு 077 071 1152 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு சைவ மகா சபையினரும் சைவநெறி கூடத்தினரும் அறிவித்துள்ளனர். (இ-9)



சேவையின் செம்மல் கூட்டுறவுப் பெரியார் முன்னைநாள் தெல்லிப்பழை பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைவரும் முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினரும் நமது ஈழநாடு இயக்குநருமான

# அமரர் சின்னத்தம்பி சிவமகாராசா

## அவர்களின் 10 ஆவது நினைவு ஆண்டில் சிலை திறப்பு விழாவும் நூல் வெளியீடும்

**இடம்: தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்**

**காலம்: 16.04.2016 இன்று சனிக்கிழமை மாலை 2.00 மணி**

**தலைமை: திரு.ந.உமாகரன் (தலைவர், தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)**

◆பிரதம விருந்தினர்
கௌரவ நீதியரசர்
❖ க.வி.விக்னேஸ்வரன் அவர்கள்
(முதலமைச்சர்,வடமாகாண சபை)

**சிறப்பு விருந்தினர்கள்**

◆கௌரவ திரு.சோ.சேனாதிராசா
(பாராளுமன்ற உறுப்பினர்,யாழ்.மாவட்டம்)

◆கௌரவ திரு.பொ.ஐங்கரநேசன்
(விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், சுற்றாடல் நீர்வழங்கல், உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்,வடமாகாண சபை)

◆உயர்திரு.நா.வேதநாயகன்
(அரசாங்க அதிபர்,யாழ்.மாவட்டம்)

◆உயர்திரு இ.இரவீந்திரன்
(கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர், வடமாகாணசபை)

**கௌரவ விருந்தினர்கள்**

◆திருமதி மதுமதி வசந்தகுமார்
(கூட்டுறவு ஆணையாளரும், பதிவாளரும் வடமாகாணம்)

◆உயர்திரு.க.சிறிமோகனன்
(பிரதேச செயலர்,வலி.வடக்கு தெல்லிப்பழை)

◆திருமதி Dr. சி.சிவராணி
(வைத்திய அதிகாரி உளநலப் பிரிவு, யாழ்..மாவட்டம்)

◆செஞ்சொற்செல்வர், கலாநிதி.ஆறு.திருமுருகன்
(தலைவர்,துர்க்காதேவி தேவஸ்தானம்,தெல்லிப்பழை)

**நிகழ்ச்சி நிரல்**

◆விருந்தினர்களை அழைத்து வருதல்

◆கூட்டுறவுக் கொடியேற்றல்

◆திருவுருவச் சிலை திரை நீக்கம் செய்தல்
கௌரவ முதலமைச்சர் வடமாகாணம் அவர்கள்

◆மறைந்த கூட்டுறவாளர்களிற்கான அஞ்சலி

◆மங்கள விளக்கேற்றல்

◆சங்க கீதம் இசைத்தல்
திருமதி ஜீவந்தினி லம்போதரன்,
செல்வி மு.ஜெயகௌரி அவர்கள்

◆வரவேற்புரை
திரு.ச.தனபாலசிங்கம்
(உப தலைவர்,தெ.ப.நோ.கூ.சங்கம்)

◆ஆசியுரை
மஹாராஜஸ்ரீ.ச.இரத்தினசபாபதிக் குருக்கள்
(ஆதீன கர்த்தா, மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம்)
சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்
(ஆதீனகர்த்தா, சுந்தர ஆஞ்சநேயர் ஆலயம், மருதனார்மடம்)
சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள்
(பிரதமகுரு, துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

◆தலைமையுரை
ந.உமாகரன்
(தலைவர் தெ.ப.நோ.கூ.சங்கம்)

◆நினைவுப் பேருரை
செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன்
(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்,தெல்லிப்பழை)

◆மலர் வெளியீடு

◆ஆய்வுரை
சிரேஷ்ட பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன்
(முன்னாள் துணைவேந்தர், சமூகவியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

◆மலராசிரியர் உரை
திருமதி.அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன்
(முன்னாள் ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்)

◆பிரதம விருந்தினர் உரை

◆சிறப்பு விருந்தினர் உரை

◆கௌரவ விருந்தினர் உரை

◆சிவமகாராசா ஞாபகார்த்த விருது-2015

◆சிற்ப கலைஞருக்கான கௌரவம் வழங்கல்

◆தெ.ப.நோ.கூ.ச.பொதுச்சபை உறுப்பினர்களைக் கௌரவித்தல்

◆தெ.ப.நோ.கூ.ச.பணியாளர்களை கௌரவித்தல்

◆நன்றியுரை கா.சிவஞானம்
(செயலாளர்,விழாக்குழு)

இந் நிகழ்வு சிறப்புற வாழ்த்துவோர்:-
பணியாளர்கள்,
தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

# விபத்தில் சிறுவன் பலி

தம்புள்ள-குருநாகலை வீதியில் தியதுரே பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளதுடன் நான்கு பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாரவூர்தி ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்ததினாலேயே குறித்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்த சிறுவன் 10 வயதானவன் எனவும் குருநாகலை- தோரயாய பிரதேசத்தில் வசிப்பவன் என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் பொல்கொல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

விபத்து தொடர்பாக பாரவூர்தி சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர். (இ-5)

# ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த மூவர் வாகன விபத்தில் சிக்கி படுகாயம்

சிறிய ரக லொறியொன்று, ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியின் குடாகமப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 04 மணியளவில் விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்துள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு, ஜாஎலப் பகுதிக்குச் சென்று மீண்டும் கொட்டகலையில் அமைந்துள்ள தமது வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த வேளையிலே இடம்பெற்ற இந்த விபத்தில் தந்தை, தாய் மற்றும் மகன் ஆகிய மூவரே படுகாயங்களுக்குள்ளாகி டிக்கோயா கிளாங்கன் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மூவரில் இரண்டு பேர், மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறித்த லொறி, வீதியை விட்டு விலகி கற்பாறையொன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)


யாரிடம் பேசுவது?

நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது.
நான் என்ன செய்வது?
என்று எண்ணுகின்றீர்களா ......

எம்முடன் பேசுங்கள்

கை கொடுக்கும் நண்பர்கள்
தினந்தோறும் காலை 9.00 முதல் பி.ப 1.00 மணிவரை
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
• மதசார்பற்றது • ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776
Sponsored by Enlightenment Circle, UK
(C-3712)



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா:11சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:O/L ஜேமன் PR<br>தொ.இ: B/5739 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 23செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/5784 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 37செவ் 4 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ் PR<br>தொ.இ: B/5743 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 96செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/5787 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 30சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: B/5744 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 14செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc, SOR<br>தொ.இ: G/5788 |
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 27<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:GAQ/அரசதொழில்<br>தொ.இ: B/5749 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 23செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:MSc/பொறியியலாளர்<br>தொ.இ: G/5789 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

# கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் 120 மூத்த பிரஜைகள் கௌரவிப்பு



(பனிக்கன்குளம்)

தமிழ் சிங்கள புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்திலுள்ள மூத்த பிரஜைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

எஸ்.கே. நாதனின் ஏற்பாட்டில் கிளிநொச்சி சாந்தபுரம் கலை மகள் வித்தியாலயத்தில் மேற்படி கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் சாந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த 120 மூத்த பிரஜைகள் கௌரவிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் இடம்பெற்ற புத்தாண்டு நிகழ்வில் கிராமத்தின் மூத்த பிரஜைகளுக்கான போட்டி நிகழ்வுகளும் இடம்பெற்றன.

குறிப்பாக வேகநடை, கெந்தி ஓடுதல், தேங்காய் துருவுதல், யானைக்குக் கண் வைத்தல் உள்ளிட்ட விளை யாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

முதியவர்கள் கைவிடப்பட்டவர்கள் அல்லஎன்பதையும் அவர்கள் நாட்டின் பொக்கிஷங்கள் என்பதையும் வலியுறுத்தும் பொருட்டு இடம்பெற்ற இந் நிகழ்வில் முதியவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் வரவேற்பு நடனமும் இடம்பெற்றது.

நிகழ்வைப் பார்வையிடுவதற்கு பெருமளவானோர் அங்கு குழுமியிருந்தனர். (3-281)

# முல்லையில் மூன்று மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு



முல்லைத்தீவு மாவட்ட அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்களின் ஒன்றியத்தின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு வட்டு இந்து வாலிபர் சங்கத்தினால் துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்களின் ஒன்றியத்தினால் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுட்குட்பட்ட அங்கத்தவர்களின் மூன்று பிள்ளைகளுக்கு அவர்களின் கல்வி நடவடிக்கையினை இலகுபடுத்த துவிச்சக்கர வண்டிகளை தந்துதவுமாறு விடுத்த கோரிக்கைகளுக்கு அமைய தலா 13 ஆயிரத்து 500ரூபா பெறுமதியான மூன்று (40500 ரூபா) புதிய துவிச்சக்கர வண்டிகள் புதுக்குடியிருப்பில் வைத்து நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. (3-15)

# காணாமற்போனோர் விசாரணைகள் வடக்கில் இந்த மாதத்திற்குள் பூர்த்தி

## கிளிநொச்சியில் 3 தினங்கள் இடம் பெறும் என்கிறார் பரணகம

காணாமற் போனவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் வட மாகாணத்திற்கான விசாரணைகள் இந்த மாதத்திற்குள் பூர்த்தி செய்யப்படுமென ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வல் பரணகம தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சி மாவட்டத்திற்கான விசாரணைகள் எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் எனவும், தொடர்ந்து மூன்று தினங்கள் விசாரணைகள் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதிவிசாரணை ஆணைக் குழுவின் காலம் எதிர்வரும் ஜூலை மாதத்துடன் நிறைவு பெறுவதினால் விசாரணைகளின் அறிக்கைகளை தயார் செய்ய வேண்டியிருப்பதனால் விசாரணைகளை முடிவுக்கு கொண்டு வரவுள்ளதாக காணாமல் போனவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும்ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வல் பரணகம தெரிவித்தார். (3)

# பனிக்கட்டி உற்பத்தி நிலையத்தை அமைக்க அமைச்சர் உறுதியளிப்பு



(பனிக்கன்குளம்)

கடற்றொழிலாளர்களின்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமுகமாக முதற்கட்டமாக பனிக்கட்டி உற்பத்தி நிலையம் ஒன்றை அமைத்துத் தருவதாக வடக்குமாகாண மீன்பிடித்துறைஅமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிமாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களை பூநகரி பள்ளிக்குடாவில் கடந்த சனிக்கிழமை 3.30 மணியளவில் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி கலந்துரையாடலில் அங்குள்ள மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சகல கூட்டுறவு சங்கங்களும் தெளிவுபடுத்தி அமைச்சருக்கு தெரிவித்த வேளை, அவர்களுக்கான பனிக்கட்டி உற்பத்தி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் மீனவர்கள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகளுக்கு மத்திய கடற்றொழில் அமைச்சரிடம் அனுகி தீர்த்துத் தருவதாகவும் தெரிவித்துள்ளார். (3-281)

# காத்தவராயன் சிந்துநடைக் கூத்து போட்டி நாளை முள்ளியவளையில்

(முள்ளியவளை)

வன்னிக்குறோஸ் கலாசார பேரவையின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட கலைஞர்களுக்கான காத்தவராயன் சிந்துநடைக் கூத்துப் போட்டி முள்ளியவளை மு/வித்தியானந்தாக்கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து நள்ளிரவு வரை நடைபெறவுள்ளது.

வன்னிக்குறோஸ் கலாசார பேரவைத் தலைவர் சி.நாகேந்திரராசா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு .விருந்தினராக வட மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெயநாதன் கலந்து கொள்ளவுள்ளார். இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆதரவில் இடம் பெறும் இந் நிகழ்விற்கு 35 இற்கும் மேற்பட்ட நிறுவனங் களும் தனிநபர்களும் அனுசரணை வழங்குவதற்கு முன்வந்துள்ளனர்.(3-310)



பூநகரி விநாசியோடை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த வாரம் கல்விக்கடவுளின் சிலை திறப்பு விழா, கலங்கரை நூல் வெளியீட்டு விழா, பரிசளிப்பு விழா என்பன இடம்பெற்றன. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கஜதீபன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.முருகவேள், கௌரவ விருந்தினர்களாக பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரத்தினம், தொழிலதிபர் வே.சிவனேஸ்வரன், நகையக உரிமையாளர் ச.உதயகுமார் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் கலந்து கொண்ட போது..

(படங்கள் :- பனிக்கன்குளம் செய்தியாளர்.)

# ஒரு கிலோ தேசிக்காய் 600 ரூபா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சந்தையில் தேசிக்காயின் விலை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது.

ஒரு கிலோகிராம் தேசிக்காய் 550 ரூபா முதல் 600 ரூபா வரை விற்பனை செய்யப் படுகின்றது.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் ஒரு கிலோ தேசிக்காய் 30 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது ஒரு தேசிக்காய் 30 ரூபாவுக்கு விற்பனையாகி றது.

அதிகளவு வெப்பநிலை காரணமாக தேசிக்காய்கள் பிஞ்சிலேயே வாடி விழுவதாலும் தண்ணீர் இறைப்பு இல்லாத தேசிக்கன்றுகளின் உற்பத்தி வீழ்ச்சியடைந்ததனாலும் இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படு கின்றது.

இதே வேளை பண்டிகைகள் மற்றும் கோவில் திருவிழாக்கள் காரணமாக இவற்றுக்கான கேள்வி அதிகரித்தமையும் இவ் விலையேற்றத்துக்கான காரணமாக இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (3-271)

# முல்லைத்தீவு மீனவர் பிரச்சினை குறித்தும் முதலமைச்சர் ஜனாதிபதியுடன் பேசுவார்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் பிரச்சினைகள் குறித்தும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுடன் பேசவுள்ளதாகத் தெரியவருகிறது.

வடக்கு மாகாண காணிப்பிரச்சினைகள் தொடர்பாக வடக்கு மாகாண சபையில் கடுமையான விமர்சனங்கள் இடம்பெற்ற நிலையில் மேற்படி விடயம் குறித்துப் பேசுவதற்கு ஜனாதிபதி அவசர அழைப்பு விடுத்துள்ளதாக முதலமைச்சர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் முல்லைத்தீவில் தென்பகுதி மீனவர்கள் அத்துமீறி குடியமர்ந்துள்ளமை மற்றும் முல்லைத்தீவு மீனவர்களின் பாரம்பரிய தொழில் நடவடிக்கைகள் பாதிப்படையச் செய்யும் வகையிலான மீன்பிடி போன்றவற்றில் அவர்கள் ஈடுபடுவதால் அங்கு பதற்றமான நிலைமை அண்மையில் ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து அங்கு விஜயம் செய்த மீன்பிடித்துறை அமைச்சர் தென்பகுதி மீனவர்களின் வருகையை படிப்படியாக குறைப்பதாக உறுதி வழங்கியிருந்தார்.

ஆனால் அதன் பின்னர் மீனவர்களின் வருகை அதிகரித்திருந்ததுடன் இதுபற்றி விசாரிக்க சென்ற கிராம சேவகர்கள் தாக்கப் பட்டனர்.

இவைகளை கருத்தில் கொண்டு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியுடன் பேசி இணக்கமான தீர்வை எட்டுவதற்கு தகவல்களைத் தருமாறு முதலமைச்சர் கோரியிருந்ததாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடனான சந்திப்பு நாளை மறுதினம் திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# வட்டு.இந்து வாலிபர் சங்கத்தினால் 28 சீமெந்து பக்கெற்றுகள் அன்பளிப்பு



(மல்லாவி

புதுக்குடியிருப்பு உடையார்கட்டு தெற்கு மூங்கிலாற்றைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு கிணறு அமைபபதற்காக இரண்டாம் கட்டமாக 23ஆயிரத்து 520 ரூபா பெறுமதியான 28 சீமெந்து பக்கெற்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

யுத்தத்தின் காரணமாக தனது கணவனை இழந்து பல இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் இவர் கிணறின்றி பல சிரமங்களை எதிர்நோக்கி வந்த வேளையில் இந்து வாலிபர் சங்கத்திடம் கிணறு கட்டுவதற்கான பொருட்களை தந்துதவுமாறு கேட்டுக் கொணடதற்கு இணங்க முதற் கட்டமாக 12 சீமெந்து பக்கெற்றுகளும் நேற்று முன்தினம் 28 சீமெந்து பக்கெற்றுகள் வட்டுக்கோட்டை இந்து வாலிபர்சங்கத் தலை வர் கு.பகீரதனால் வழங்கி வைக்கப்பட்டன. (3-15)

# மலையாளபுரம் செல்லும் வீதியை செப்பனிட்டுத் தருமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ-9 வீதியில் இருந்து அறிவியல் நகரினூடாக மலையாளபுரம் செல்லும் வீதி நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாது உள்ளது.இதனால் அவ்வீதியூடாகப் பயணிப்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

மேற்படி வீதியில் மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகம்,எஸ்.கே. முதியோர் இல்லம் உட்பட பல நிறுவனங்களும் வர்த்தக நிலையங்களும் காணப்படுகின்றன. அத்துடன் இவ் வீதியூடாக பெருமளவான மாணவர்களும் விவசாயிகளும் நாளாந்தம் பயணிக்கின்றனர்.

எனவே மேற்படி வீதியால் பயணிக்கும் ஆயிரக்கணக்கானோரின் இலகுவான போக்குவரத்துக்கு வழிசமைக்கும் பொருட்டு இவ் வீதியை தார் இட்டோ அல்லது கொங்கிறீட் வீதியாகவோ அமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (3-271)

# தேசிய சதுரங்கப் போட்டிக்கு தெரிவானோருக்கு இன்று பயிற்சிப் பட்டறையும் சான்றிதழ் வழங்கலும்

இலங்கை சதுரங்கச் சம்மேளனத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட இளையோர் சதுரங்கப் போட்டிக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டோருக்கும், சான்றிதழ் பெற தகுதி பெற்றோருக்குமாக 80 வீர, வீராங்கனைகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் , அவர்களுக்கான பயிற்சிப் பட்டறையும் இன்று 16ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியின் மாவட்ட மட்டத் தெரிவுப்போட்டிகள் முதல் முறையாக கிளிநொச்சியில் கடந்த 9, 10ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் தேசிய மட்ட இளையோர் சதுரங்கப் போட்டிக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 53 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் மேலும் 27 பேர் சான்றிதழ் பெறத் தகுதி பெற்றிருந்தனர். இவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும் பயிற்சி வழங்கலும் இன்று நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கச் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் ஆதரவுடன் இந்நிகழ்வு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அன்றைய தினம் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளோருக்கான பதிவுகளும் இடம்பெற்றுள்ளதுடன் அதற்கான போக்குவரத்து ஒழுங்குகள். தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளதால் தெரிவு செய்யப்பட்ட அனைத்து வீர, வீராங்கனைகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட சதுரங்கச் சங்கத்தின் தலைவர் தி.சிவரூபன் அறிவித்துள்ளார்.

தேசிய மட்டப் போட்டிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக இலங்கை சதுரங்கச் சம்மேளனம் அறிவித்துள்ளது. (3)




# மஹா கும்பாபிஷேகம்

திருமுறிகண்டி அருள்மிகு ஸ்ரீ முறி கண்டீஸ்வரர் தேவஸ்தான மஹா கும்பாபி ஷேகம் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இதற்கமைய கர்ம ஆரம்பக் கிரியை நாளை மறுதினம் 18 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

எண்ணெய்க்காப்பு சாத்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்று மறுநாள் கும்பாபிஷேகம் நடைபெறும். (2-3)







வவுனியா,வைரவபுளியங்குளம் ஸ்ரீ ஆதிவிநாயகர் ஆலயத்தில் கடந்த வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்ற தேர்த்திருவிழாவின் காட்சிகள்...

(படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

# விசேட சலுகை அறிவிப்பின் பின்னணியில் ஏமாற்றத்துக்குள்ளான சிறைக் கைதிகள்

புதுவருட தினத்தை முன்னிட்டு இலங்கையின் பல்வேறு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறைக் கைதிகளுக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட்டதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 13, 14ஆம் திகதிகளில் சிறைகைதிகளுக்கு இந்த விசேட சலுகைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் கடந்த 13 மற்றும் 14ஆம் திகதிகளில் காலை உணவுக்கு பாற்சோறு வழங்கப்பட்டுள்ளது.

பொதுவான நாட்களில் வெறும் சோறும் தேங்காய்ச் சம்பலும் மட்டுமே சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படுவதுண்டு.

அத்துடன் 14 ஆம் திகதி மதியம் விசேடமான முறையில் சமைக்கப்பட்ட உணவு வழங்கப்பட்டதாகவும் சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனினும் விசேட உணவு என்ற பெயரில் வழமையான உணவில் மஞ்சள் நிறம் சேர்த்ததைத் தவிர வேறெந்த மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்று கைதிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கொழும்பு சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு வீடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட புதுவருட உணவுகள் மற்றும் இனிப்புகளில் சிறைச்சாலை அதிகாரிகளும் பங்கு கேட்டிருப்பதாகவும் அறியக் கிடைத்துள்ளது.(இ-5)

# தெலுங்கானா மாநிலத்தில் வெயிலுக்கு 35 பேர் பலி

இந்தியாவில் தெலுங்கானா மாநிலத்தில் அதிகபட்சமாக இதுவரை 35 பேர் வெயில் கொடுமைக்கு பலியாகியுள்ளனர். கோடை காலம் தொடங்கி விட்டதை தொடர்ந்து நாடு முழுவதும் பல மாநிலங்களில் வெயில் கொளுத்த தொடங்கியுள்ளது. இதனால் மக்கள் மிகுந்த சிரமப்படுகினறனர்.

தெலுங்கானா மாநிலத்தில் அதிகபட்சமாக இதுவரை 35 பேர் வெயில் கொடுமைக்கு இறந்து விட்டனர். ஒடிசா மாநிலத்தில் 30 பேர் பலியானார்கள்.

தலைநகர் டில்லியில் நேற்று முன்தினம் உச்சக்கட்டமாக 106° F வெயில் கொளுத்தியது. ஒடிசா மாநிலம் தித்லகார் நகரில் 113 °Fயும, ஆந்திர மாநிலம் நல கொண டாவில் 111 °Fயும், ஐதரா பாத்தில் 109 °F அளவும் வெயில் சுட்டெரித்தது. (இ-5)

# தேர்தல் ஆணையம் நியாயமாக செயற்படவில்லை - சீத்தாராம்

இந்திய தேர்தல் ஆணையம் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் செயற்படவில்லை எனவும் ஜனநாயகத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் சீத்தாராம் யெச்சூரி குற்றம் சாட்டியுள்ளார்.

மேற்கு வங்க மாநில சட்டப் பேரவைத் தேர்தலை முன்னிட்டு கொல்கத்தா நகருக்கு நேற்று முன்தினம் சீத்தாராம் நிருபர்களிடம் கூறும் போது,

மேற்கு வங்க மாநிலத்தில் தேர்தல் ஆணையத்தின் செயற்பாடுகள் திருப்தி அளிக்கும்படி இல்லை. தேர்தலை நியாயமாகவும், அதே சமயம் வெளிப்படையாகவும் நடத்த அவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாகவும் தெரியவில்லை.

இதுபோன்ற செயற்பாடுகளால் ஜனநாயகத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று கூறினார்.

இதையடுத்து, மேற்கு வங்கத்தில் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்து மார்க்சிஸ்ட் தலைமையிலான இடதுசாரிகள் தேர்தலை சந்திக்கின்றதே என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, மக்களின் விருப்பப்படி மம்தா எதிர்ப்பு அலை வாக்குகளை ஒரே குடைகுள் கொண்டு வரவும், திரிணாமூல் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக ஒரு வலிமையான அணியை உருவாக்கவும் இரு கட்சிகளும் கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன என்று பதில் அளித்தார். (இ-5)

## தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-06

பகுதி-II

தமிழ்க் கல்விக் கழகம்

விடைகள்

(15.04.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

01.1.புதிய உலகம் படைப்பதற்கு
2.அழைப்பார்
3.வாய்மை, தர்மம் உண்டாக வேண்டும்
பொய்மை, தீமை ஒழிய வேண்டும்
4.1.உண்மை 2.சந்தோசம்/ இன்பம்
5.1.அதர்மம்
2.பழைய
6.இல்லாமல் போதல்/ ஒழிதல்/ அகற்றுதல்
7.வேண்டும்
8.தெளிந்த நீரைப்போல
02.1.அதிக ஆசை ஆபத்தில் முடியும்
2.ஒற்றுமையாக இருத்தல் பலமாகும்
3.சிறிய பறவைகளின் இனிய குரலால் சூழல் அழகு பெற்றது
4.தூணில் கட்டியிருந்த கறுப்பு மாடு புல் மேய்ந்து கொண்டிருந்தது
05.1.பாகற்காய்
2.முயற்சித்தால்
06. குற்றத்தை மறைக்கப் பார்த்தல்
07.பொறாமைப்படல்
08.ஏமாற்றுதல்
09.1.மழைவீழ்ச்சி
2.சுகயீனம்
3.மலைத்தொடர்
10 .1 பட்டங்கள் வானில் ஆடி அசைந்து பறக்கின்றன
2.நாங்கள் வீட்டுக்குச் சென்றோம்
11. 1.தீர்க்கதரிசி
2.பவளவிழா
3.சரணாலயம்
12.1. இப்போது பாதையை கடவுங்கள்
2.நீங்கள் சொல்வதை என்னால் கேட்க முடிகிறது
13. 1. Spoon
2.Mosquito
14.அம்மா எனக்குப் பசிக்கிறது
15. என்ன துவ பத்கன்ன
16.1.மரங்கள் சரிந்து வீதியின் குறுக்காக வீழ்ந்ததில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.
2.கடும் காற்றின் மத்தியிலும் வீதியின் குறுக்காக வீழ்ந்திருந்த மரங்களை அகற்றும் பணிகளில் வீதிப்பராமரிப்பு பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.
3.பலத்த காற்றினால் மின்சாரக் கம்பிகளூடான மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டதால் மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாக வேண்டிய நிலையும் ஏற்பட்டிருந்தது.

17. △= X,O =÷
18.30900
19. 1.8
2.12
20.ரூ.312.50
21.40 மாணவர்கள்
22.48 மாணவர்கள்
23.504 பென்சில்கள்
24.36cm
25.3cm
26.ரூ.350
27.28
28.25cm
29. 1.4/8
2.1/2 அல்லது 8/16
30. *4l 500 ml*
31. 4
32.1
33.1
34. 4
35. 2
36. 3
37. 3
38. 3
39. 3
40. 3
41. 2
42. 2
43. 2
44.2.
45.டி.எஸ்.சேனநாயக்க
46.சேர்.பொன்னம்பலம் இராமநாமதன்
47.அநாகரிக தர்மபாலா
48. டி.பி.ஜயா
49. 3
50. 3
51. 4
52. 3
53. 1
54. 4
55. 4
56.1
57. 3
58. 4
59. 3
60. 3

# காவிய நாயகன்

இந்த யுகத்தில் தனக்கென வாழ்பவர்களையே காணமுடிகிறது. பிறருக்காக வாழ்பவர்களைக் காணல் அரிதினும் அரிது. தன் வாழ்வை தான் பிறந்த பிரதேசத்தின் மக்களுக்காகவே அர்ப்பணித்து வாழ்ந்து காட்டியவர் அமரர் சிவ மகாராசா. தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்னணியில் திகழச் செய்த பெருமை ஒன்றே இதற்கு சான்றாகவுள்ளது.

"சேவை செய்வதே மேலான இன்பம்" என்னும் இலட்சியத் துடிப்புடன் இயங்குகின்ற உத்தம புருஷர்களில்அமரர் சி.சிவமகாராசா அவர்களும் ஒருவராவார். இவரை கூட்டு றவுத் துறையின் "கலங்கரை விளக்கு"என்று குறிப்பிடுவது சாலப்பொருத்தமானது.

இளமை முதலே சமய சமூக சேவைகளில் நாட்டங்கொண்ட இவர் தனது கிராமமாகிய கொல்லங்கலட்டியில் தொடங்கிய சமூக சேவையை வலி. வடக்கு பிரதேசம், யாழ்.மாவட்டம், அகில இலங்கை தேசிய மட்டம் வரை விஸ்தரித்திருப்பதை இன்றும் காணமுடிகிறது.1968 ஆம் ஆண்டு கூட்டுறவுத் துறையில் கால்பதிக்க தொடங்கியதில் இருந்து அவர் இறக்கும் வரை இவரது சேவை ஆற்றப்பட்டது.

இவர் தன்து கூட்டுறவுச் சேவையுடன் சமய,கலை இலக்கியப் பணிகளிலும் பெரும் பங்காற்றியமை குறிப்பிடத்தக்கது.தமிழ்



மக்கள் அனுபவிக்கும் சொல்லொணாத் துன்பத்தையும் அநீதியையும் எடுத்து உரைப்பதற்காக இரண்டு தடவைகள் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு அம்மக்களுக்காக தனது சொந்த மண்ணிலேயே சேவை செய்த மக்கள் தொண்டன் அமரர் சிவமகாராசா அவர்கள்.

கூட்டுறவுத்துறையிலே முக்கியமானவர்கள் பணியாளர்கள் அவர்களுடைய சம்பளம் மிகக்குறைந்த அளவிலேயே இருக்கின்றது. இதனால் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு பல நடவடிக்கைகளை மேற்கொண்டவர் அமரர் சி.சிவமகாராசா அவர்கள்.

கூட்டுறவுச் சங்கங்கள் தான் யுத்த காலத்திலும் இயற்கை அனர்த்தங்கள் நிகழ்கின்ற காலத்திலும் மக்களுக்கு சேவையாற்றி வருகின்றது.ஆனால் தற்போது கூட்டுறவுத்துறை ஏனைய துறைகளிலும் நலிவுற்ற துறையாக இருக்கின்றது.இதற்கு தம்மை அர்ப்பணிக்கக் கூடியவர்கள் உருவாக வேண்டும்.

அமரர் சி.சிவமகாராசா அவர்கள் இவ்வுலகை விட்டு பத்து ஆண்டுகள் கடந்த நிலையில் தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம் இவர் ஆற்றிய சேவை யினை நினைந்து இவரை போன்ற உத்தமர்கள் சாவ தில்லை. அவர்கள் மக்களுடன் வாழ்கின்றனர் என்ற நிலையினை வருங் கால சந்ததிக்கு எடுத்துரைப்பதற்கு ப.நோ. கூ.சங்க வளாகத்தில் இவருடைய உருவச்சிலை திரைநீக்கம் செய்யப்படவுள்ளது. (2016.04.16) ஆம் திகதி பணியாளர்களாகிய நாம் தமக்கென வாழாமல் பிறருக்காக வாழ்ந்த அமரர் அவர்களை காவிய நாயகனாக ஏற்று எமது சேவை யினை தொடர்வோம் என உறுதி கொள்வோம்.

கூட்டுறவே நாட்டுயர்வு

ந.அன்ரன் ஜெயராஜா
ப.நோ.கூ.சங்கம்,
தெல்லிப்பழை.

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் – 88

# புத்தாண்டு புதியன புகுதலும் புரதமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

துர்முகி பெயர்கொண்டு புதிய தமிழ்,சிங்கள புத்தாண்டு பிறந்திருக்கின்றது. புத்தாண்டு வாழ்த்துக்கள். இந்த புதுவருடத்திற்கு விசேட அம்சங்களும் உண்டு. ஒன்று பெயரில் துர்முகி எனக்கொண்டதால் நல்லது நடக்க வாய்ப்புக்கள் குறைவென்று ஒருசாராரும் பெயரிலென்ன இருக்கின்றது நாம் வாழும் வாழ்க்கையில் தானே அனைத்தும் தங்கியிருக்கின்றது என இன்னொரு சாராரும் அடித்து வாதிடுவதற்கும் இடம் விட்டிருக்கின்றது. பழையதில் அல்ல புதியதில் தான் வாழ்க்கை நெறிப்பட்டிருக்கின்றது என வாதிடுவதற்கு இந்திய நடுவர்களை வைத்து பட்டிமன்றமும் நடந்தேறியிருக்கின்றது. மற்றொன்று இரு இனங்களுக்குமான பொதுவான புத்தாண்டு கொண்டாட்டமாக காலங்காலமாக பெயரிட்டு கொண்டாடப்பட்டாலும் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வினை இன்னும் வலுவூட்ட பிறந்திருக்கின்றது எனலாம். இந்த சித்திரைப்புத்தாண்டு இரு இனங்களுக்குமான கொண்டாட்டமாக இருப்பதற்கு அர்த்தமுமுண்டு. இன ஒற்றுமையை வலியுறுத்தும் சிறப்பு பண்டிகை எனலாம். ஆனால் தமிழர்கள் வாழ்வியலை இரண்டு பஞ்சாங்கங்களும் வேறு வேறாக கணித்து கூறியிருக்கின்றன. இதில் ஒற்றுமை ஏற்படவில்லையே.

இது எமக்குள்ளேயான வேறுபாட்டை வெளிப்படுத்தும் விதமாக அமைந்திருக்கின்றது.பார்த்தீர்களா! ஒன்றே குலம், ஒருவனே தேவன், ஒருதாய் மக்கள் என அடையாளப்படுத்தியிருந்தாலும் மாற்றுக்கருத்துக்களும் உயர்ந்து ஒலிக்க தவறவேயில்லை. ஒற்றுமையை வளர்ப்போம், அனைத்து உயிர்களையும் மதிப்போம்,நல்ல எண்ணங்களை கொண்டு நல்ல செய்கைகளை செய்வோம்.

வழமைக்கு மாறாக மாலையல் பிறந்ததால் புதுவருட கொண்டாட்டங்களை ஆலயங்களில் வழிபட்டு ஆரம்பிக்க வழியும் கிடைத்திருக்கின்றது. அனைத்து ஆலயங்களும் பக்தர்களால் நிரம்பியிருந்ததை காணக்கிடைத்தது. இலங்கை வாழ் மக்களிடையே பலத்த எதிர்பார்ப்புக்களுடனும் பிறந்திருக்கின்றது. ஆனாலும் சுனாமியிலும் போரிலுமாக பாதிக்கப்பட்ட மக்களின் பல வினாக்களுக்கு விடைகாணாமலேயே. பிறந்திருக்கின்றது.

தொழிற்றுறை அபிவிருத்திக்கு வழியேதும் எட்டாமலேயே அவசரப்பட்டு பிறந்திருக்கின்றது. விவசாயத்திற்கு சற்று நெருக்கடியான காலகட்டமாக எரிக்கும் வெயிலை தந்து பிறந்திருக்கின்றது.

மறுநாள் மட்டும் இரவு சற்று குளிர்ச்சியாக இருக்கின்றது. கிளிநொச்சியில் அடித்துப்பெய்த மழை அங்கேயே நின்றுவிட்டது. இவ்வளவு இருப்பினும் நாம் எதிர்பார்க்கும் அதிசயங்கள் நிகழும் வருடமாக இவ்வருடம் இருக்கும் என நம்பலாம். அந்த நம்பிக்கை தானே நமது வாழ்க்கை.

இந்த புத்தாண்டு நிறையுணவை மக்களுக்கு கொடுக்கும் ஆண்டாக மலர்ந்து சுகமான வாழ்வைக் கொடுக்க வழிவகை செய்தல் வேண்டும். நிறையுணவில் அதிமுக்கியமாக இருக்க வேண்டிய சத்துக்கள் குறிப்பாக விற்றமின்கள், புரதச்சத்து, நார்ச்சத்து என அனைத்தும் வேண்டும்.

வளமான எதிர்கால சந்ததியை உருவாக்க வழி கிடைக்க வேண்டும். தொழிற்றுறை தொழிலநுட்பத்துறையுடன் இன்னும் இலத்திரனியல் தொழில்நுட்பத்தை உள்ளார்ந்து புத்தாக்கத்துடன் பரிணமிக்க வேண்டும். எம்மவர் கண்டுபிடிப்புக்கள் உலகை அதிசயிக்க வைத்தல் வேண்டும். எங்களுடைய இளையவர்களுக்கு உரிய வேலைகிடைத்து அவர்களின் உழைப்பு முழுவதுமாக தேசத்து வளர்ச்சிக்கு உள்வாங்கப்பட வேண்டும். ஆண் , பெண் சமத்துவம் பேணப்பட வேண்டும். பெண்களுக்கான பாதுகாப்பும் அவர்களுக்கான முன்னுரிமையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இன்னல் பட்ட மக்களுக்கான அடிப்படை உரிமைகள் கிடைக்க வேண்டும். சூதும் வாதும் வேதனை செய்யும் என்பதனை சூது செய்பவர்களுக்கு புரிய வைக்கவேண்டும். அன்பே சிவம் என்பது அழுத்தமாக உணரப்பட வேண்டும்.

விவசாயிகள் பக்கத்தில் பலத்த எதிர்பார்ப்புக்கள் இருக்கின்றன. அவற்றை அவர்கள் அடையஆவன செய்யப்படல் வேண்டும். உற்பத்தி பெருக வேண்டும். நீரின்றி பயிர்கள் வாடுவது நிறுத்தப்பட வேண்டும். சந்தைப்படுத்தல் சிக்கல்கள் களையப்பட வேண்டும். இயற்கைவழி விவசாயத்திற்கான முன்னெடுப்புக்களை இன்னும் வலியுறுத்த வேண்டும். காலநிலை மாற்றத்தினை உணர்ந்தறிந்து அதற்கேற்ப எமது விவசாயச் செய்கைகளை மாற்றியமைக்க வேணடும். உணவுற்பத்தியில் குறிப்பிட்ட பயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கலாம். நீர் அதிகம் தேவையற்ற பயிர்களுக்கு பயிர்ச்செய்கையில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். குறிப்பாக புரதச்சத்து அதிகமாக அவரைப்பயிர்களுக்கு நீர் அதிகம் தேவையில்லை. இந்த அவரைப்பயிர்கள் வரட்சியான காலத்தை தாக்குப்பிடிக்க வல்லன. மாறாக அவரைப் பயிர்களுக்கு அளவுக்கதிகமாக நீர்பாய்ச்சும் நடைமுறையை மாற்றியமைக்க வேண்டும். நிலக்கடலை தவிர்ந்த பயறு, உழுந்து, கௌப்பி, சிறகவரை, போஞ்சி, பயற்றை என பலவற்றிற்கும் நீரின் தேவை மிகக்குறைவாகும். அவரைப்பயிர்களுக்கான ஆண்டாக 2016 இனை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பிரகடனப்படுத்தியிருப்பதிலிருந்து அவரைகளின் முக்கியத்துவத்தை அனைவரும் உணர்ந்து கொள்ளலாம். புரதச்சத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க அவரைப்பயிர்களை பயிரிடலாம். அதனுடன் அவரைப்பயிர்கள் வரட்சியை தாங்கி வளரக்கூடியன. வளியிலுள்ள தழைச்சத்தை மண்ணில் நிலைநாட்டும் தன்மையை கொண்டன. மாச்சத்தினை உட்கொள்வதை குறைத்து புரதச்சத்தினை அளவாக உட்கொள்ள மருத்துவ உலகு பரிந்துரைத்திருக்கும் போது புரதச்சத்தினை தரும் அவரைப்பயிர்களை அதிகமாக பயிர்செய்து அதனை எம்மவர்களுக்கு விலை குறைந்த அளவில் கிடைப்பதற்கு வழிசெய்ய வேண்டும். அவரைப்பயிர்களை உள்ளடக்கிய உணவுப்பதார்த்தங்களை கிடைக்கவும் வழி செய்யலாம். இதற்காக மதிப்பேற்றஞ்செய்த உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய ஊக்குவிக்கலாம்.

இந்த தொழிற்றுறைக்கு பெண்களை உள்வாங்கி அவர்களுக்கான வருமானத்தை அதிகரிக்க வழிவகைசெய்து கொடுக்க வேணடும். குறிப்பாக பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களுக்கான வருமானத்தை அதிகரிக்க புதிய தொழிற்றுறைகளை உருவாக்கினாலும் பயன்தரும்.


துர்முகி வருடத்து நற்பயனகளை அறுவடை செய்ய நாமெல்லோரும் தயாராக வேண்டும். இளையவர்களை அன்பால் அரவணைத்து வழிநடத்த அனைவரும் முயற்சிக்க வேணடும்.

ஓர்மமும் வன்மமும் சண்டையும் சச்சரவுக்கும் இடமளிக்காது உயிர்களை, உணர்வுகளை, பெண்மையை மதிக்கும் இன்னும் நல்ல புரிந்துணர்வு கொண்ட இளையவர்களுக்கு இந்நாடு வேண்டும்.

இயற்கையின் சீற்றத்தை மதித்து அதனையும் புரிந்து கொண்டால் தான் இனிவருங்காலம் எமது சந்ததிக்குரியதாகும். இதற்காக நாம் எம்மை தயார்படுத்தவும் வேண்டும். நல்லது எண்ணினால் நன்மையே நடக்கும். இதில் தான் நாம் மனவுறுதி கொள்ள வேணடும்.

அணு விஞ்ஞானி அப்துல் கலாம் கூறியது போல கனவு காணவேண்டும். நல்ல கனவு அதுவும் மெய்ப்பட வேண்டும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 85




# தமிழீழ விடுதலைப் புலிகளுடனான உறவினால் தி.மு.க. அரசை பிரதமர் சந்திரசேகர் கலைத்தார்

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கொண்டிருந்த நெருக்கமான உறவு காரணமாகவே 1991 ஆம் ஆண்டில் தமிழகத்தின் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தை அப்போதைய இந்திய பிரதமர் சந்திரசேகர் கலைத்தார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் வெளியிடப்பட்டுள்ள "ப்ளையிங் இன் ஹை வின்ட்ஸ்" என்ற நூலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் கருணாநிதியின் அரசாங்கம் கொண்டிருந்த நெருங்கிய உறவு மட்டுமே அவரின் அரசாங்கத்தை மத்திய அரசாங்கம் கலைக்க காரணமாக இருந்தது என்று அந்த நூலில் கூறப்பட்டுள்ளது



சந்திரசேகரின் சிறுபான்மை கூட்டு அரசாங்கம் காங்கிரஸின் தயவிலேயே ஆட்சியமைத்திருந்தது. எனவே காங்கிரஸின் அழுத்தம் சந்திரசேகருக்கு பின்புலத்தில் இருந்து கொண்டிருந்தது.

இந்தநிலையில் ஏழு மாதங்களே அந்த அரசாங்கத்தினால் ஆட்சியை நடத்திச் செல்ல முடிந்தது. தமிழக அரசாங்கத்தை கலைப்பதற்கு சந்திரசேகர், தமிழக ஆளுநரின் அறிக்கையை எதிர்பார்க்கவி ல்லை என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. எனினும் சட்டத்தின் அடிப்படையிலேயே தாம் செயற்பட்டதாக சந்திரசேகர் தமது நடவடிக்கையை நயாயப்படுத்தியுள்ளார. 1991ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், தமிழக த்தின் முதல்வர் விடுதலைப் புலிக ளின் தமிழக தலைமையகத்துக்கு மாத்திரமல்ல, யாழ்ப்பாணத்தில் உள்ள தலைமையகத்துக்கும் சென்றமைக்கான தகவல்கள் உள்ளதாக குறிப்பிட்டிருந்தமையும் புதிய "ப்ளையிங் இன் ஹை வின்ட்ஸ்" நூலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-5)

# முதல்வர் மம்தா பானர்ஜிக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ்



தேர்தல் நடத்தை விதிகளுக்குப் புறம்பாகச் செயற்பட்டது தொடர்பாக மேற்கு வங்க முதல்வரும், திரிணாமூல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜிக்கு தேர்தல் ஆணையம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நோட்டீஸ் அனுப்பியது.

மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, அந்த மாநில அரசியல் களத்தில் அனல் பறக்கத் தொடங்கியுள்ளது. ஆளும் திரிணாமூல் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், முதல்வருமான மம்தா பானர்ஜி, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் சூறாவளி பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில், அண்மையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பேசிய அவர், மேற்கு வங்கத்தின் அசன்சோல் பகுதியை தனி மாவட்டமாக உருவாக்கப் போவதாக அறிவித்தார்.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பிறகு இத்தகைய அறிவிப்புகளை வெளியிடுவது நடத்தை விதிகளுக்குப் புறம்பானதாகும். இதையடுத்து இந்த விவகாரம் குறித்து விளக்கம் கேட்டு மம்தா பானர்ஜிக்கு தேர்தல் ஆணையம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நோட்டீஸ் அனுப்பியது.

இந்தத் தகவலை தலைமைத் தேர்தல் ஆணையர் நஜீம் ஜைதி, கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். மம்தா அளிக்கும் விளக்கத்தின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து முடிவெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

**மம்தா ஆவேசம்:** இதனிடையே, தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கையை மம்தா பானர்ஜி விமர்சித்துள்ளார். இதுகுறித்து தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் அவர் கூறுகையில், அசன்சோல் தனி மாவட்டமாக்கப்படும் என்று ஒரு முறை, இரு முறை அல்ல ஒரு லட்சம் முறை தெரிவிப்பேன். தேர்தல் ஆணையம் என்ன நடவடிக்கை எடுக்க விரும்புகிறதோ, அதை எடுக்கட்டும் என்றார். (இ-5)

# தமிழர்களின் நிலத்தை தமிழரே ஆள வேண்டும்-சீமான் ஆவேசம்

(சென்னை)

தமிழர்களின் நிலத்தை தமிழரே ஆள வேண்டும் என நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆவேசமாக தெரிவித்துள்ளார்.



தமிழக சட்டசபைத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி 234 தொகுதிகளிலும் தனித்து போட்டியிடுகிறது. இதையொட்டி நாம் தமிழர் சார்பில் தேர்தல் பிரசார பொதுக் கூட்டம் கோவையில் நடந்தது. அங்கு நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு நாம் தமிழர் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக அக்கட்சியின் தலைவர் சீமான் வாக்கு சேகரித்தார்.

அப்போது அவர் கூறுகையில், தமிழர்களின் நிலத்தை தமிழரே ஆள வேண்டும் என்ற இலட்சியத்தில் தேர்தலில் களம் இறங்கி உள்ளோம்.

இதற்கான உரிமையை கேட்டு உங்களிடம் வந்துள்ளோம். தேர்தல் அறிக்கையில் கச்சதீவை மீட்போம் என்கிறார் கருணாநிதி. கச்சதீவை கொடுத்தது தான் என்கிறது காங்கிரஸ்.

ஆனால்இர ண்டு பேரும் தேர்தலில்கூட்டு வைத்துள்ளனர்.

எல்லாம் ஏமாற்று பேச்சு என்பதை புரிந்து கொள்ள வேண்டும். என்னால் தான் மதுக்கடைகளை மூட முடியும் என்கிறார் கருணாநிதி. ஆம் அவர் தானே அதனை திறந்து வைத்தது. ஆகவே அவரால்தான் மூட முடியும்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் கிராமத்தில் உள்ளவர்கள் கல்வி, மருத்துவம், வேலை வாய்ப்புக்காக நகர்ப்புறங்களை நோக்கி வராமல் இருக்க கிராமப்புறங்களில் வளர்ச்சியை ஏற்படுத்துவோம்.

ப்சி என்ற சொல்லை தமிழர் அகராதியில் இருந்து ஒழிப்போம். படித்தவர்கள், படிக்காதவர்களுக்கும் அரசு வேலை அளிப்போம். வெளிநாட்டு குளிர்பானங்களை தடை விதிப்போம்.

நாங்கள் வெற்றி பெற்றால் தன்னலமற்ற அன்பான ஆட்சியை கொண்டு வருவோம்.

அதனால்தான் 234 தொகுதிகளிலும் புது முகங்களை, இளைஞர்களை நிறுத்தி உள்ளோம் என்றார். (இ-5)

# ஜெயலலிதா, கருணாநிதிக்கு எதிராக மக்கள் நலக்கூட்டணி வேட்பாளர் யார்?



நடைபெறவிருக்கும் சட்ட மன்றத் தேர்தலில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும் திமுக தலைவர் கருணாநிதிக்கும் எதிராக மக்கள் நலக்கூட்டணியினர் வேட்பாளர்களை களமிறக்க உள்ளனர்.

முதலமைச்சர் ஜெயலலிதா போட்டியிடும் ஆர்.கே.நகர் தொகுதியில் அவருக்கு எதிராக விடுதலை சிறுத்தைகளும், திருவாரூரில் திமுக தலைவர் கருணாநிதிக்கு எதிராக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் போட்டியிட உள்ளதாக மக்கள் நல கூட்டணி-தேமுதிக கூட்டணி தலைவர்கள் தெரிவித்தனர்.

மக்கள் நல கூட்டணியின் தொகுதி பங்கீடு குறித்த அறிவிப்பை, அக்கட்சி தலைவர்கள் வெளியிட்டுள்ள நிலையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன் கூறியதாவது,

ஆர்.கே.நகரிலும், திருவாரூரிலும் இக்கூட்டணியிலுள்ள எந்த கட்சியினர் போட்டியிடுவது என்ப தில் ஆறு கட்சிகளுக்கு நடுவேயும் கடுமையான போட்டியிருந்தது என்றார்.

6கட்சிகளுமே இவ்விரு தொகுதிகளிலும் போட்டி இடத்தான் விரும்பினர். இறுதியில், ஆர்.கே. நகரில ஜெயலலிதாவை எதிர்க்கும் வாய்ப்பை விடுதலை சிறுத்தைகளுக்கு கொடுப்பது என்று முடிவு செய்தோம்.


திருவாரூரிலும், எந்த கட்சி போட்டியிடுவது என்பதில் அனைத்து கட்சிகளுமே போட்டி போட்டன. நாங்கள்தான் முதல்வர் வேட்பா ளரை கொண்ட கட்சி. எனவே எங்களு க்கு அந்த வாய்ப்பை தாருங்கள் என்று தேமுதிகவும் கோரியது. இறுதியில் அந்த வாய்ப்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு கிடைத்தது என்றார். (இ-5)

## பாரதச் செய்தி

# ஒடுக்கப்பட்ட மக்கள் நலனுக்காக மக்கள் நலக்கூட்டணி பாடுபடும்

## விஜயகாந் தெரிவிப்பு

ஒடுக்கப்பட்ட மக்கள் நலனுக்காக தே.மு.தி.க. மக்கள் நலக் கூட்டணி பாடுபடும் என்று சென்னையில் நடந்த அம்பேத்கர் பிறந்த நாள் விழாவில் அக்கூட்டணியின் முதலமைச்சர் வேட்பாளர் விஜயகாந் உறுதியளித்தார்.



அம்பேத்கரின் 126ஆவது பிறந்த நாளையொட்டி, சென்னை கோயம்பேட்டில் உள்ள அவருடைய சிலைக்கு, தே.மு.தி.க.- மக்கள் நலக் கூட்டணி தலைவர்கள் விஜயகாந்த், வைகோ, ஜி .கே. வாசன், தொல்.திருமாவளவன், ஜி.ராமகிருஷ்ணன், இரா.முத்தரசன் ஆகியோர் நேற்று முன்தினம் காலையில், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியின்போது, விஜயகாந்த் பேசியதாவது,

ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைக்காக எப்படி அம்பேத்கர் பாடுபட்டாரோ, அதேபோன்று 6 பேர் சேர்ந்த இந்த அணி (தே.மு.தி.க.- மக்கள் நல கூட்டணி) நிச்சயம் பாடுபடும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# உடலுழைப்புக்கு உரிய ஊதியம் வழங்கக்கோரி அமெரிக்காவில் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

உடலுழைப்பு தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளமாக ஒருமணி நேரத்துக்கு பதினைந்து டொலர்கள் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி அமெரிக்காவின் பல நகரங்களில் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அமெரிக்காவில் நாடு முழுவதும் வேலை செய்யும் உடலுழைப்பு சார்ந்த தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் சம்பளம் ஒருமணி நேரத்துக்கு ஏழுரை டொலர்களாக உள்ளது.

இதன்படி ஒருநாளில் எட்டு மணிநேரம் உழைத்தால் அதிகபட்சமாக ஒருவர் 60 டொலர்களை (இலங்கை மதிப்புக்கு சுமார் 8 ஆயிரம் 500 ரூபாய்) சம்பாதிக்க முடியும் என்ற நிலை கடந்த ஆறாண்டுகளாக நீடித்து வருகின்றது.

இந்த சம்பளத்தை உயர்த்த வேண்டும் என நாடு முழுவதும் உள்ள தொழிற்சங்கங்கள் குரல் எழுப்பிவரும் நிலையில், அமெரிக்காவில் உள்ள 14 மாநிலங்களில் உள்ள பிரபல நிறுவனங்கள் மட்டும் சம்பளத்தை ஓரளவுக்கு உயர்த்தி ஒருமணி நேரத்துக்கு பத்து முதல் பன்னிரெண்டு டொலர்கள்வரை அளித்து வருகின்றன.

இந்நிலையில், இன்னும் ஆறாண்டுகள் கழித்து, வரும் 2023 ஆம் ஆண்டு வாக்கில் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய குறைந்தபட்ச சம்பளம் குறித்து நிர்ணயம்செய்ய கலிபோர்னியா மாநில ஆளுநரின் ஏற்பாட்டின் பேரில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் தொழிற்சங்க தலைவர்களுக்கு இடையில் பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

இதன் விளைவாக, கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள உடலுழைப்பு தொழிலாளர்களின் குறைந்தபட்ச புதிய சம்பளமாக ஒருமணி நேரத்துக்கு 15 டொலர்கள் நிர்ணயிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், எதிர்வரும் 2023 ஆம் ஆண்டிலிருந்து இனி இங்குள்ள ஒவ்வொரு தொழிலாளியும் தனது எட்டுமணி நேர உழைப்புக்கு 90 டொலர்களை (இந்திய மதிப்புக்கு சுமார் ஆறாயிரம் ரூபாய்) சம்பளமாக பெற முடியும்.

இது தொடர்பான மகிழ்ச்சி அறிவிப்பை கடந்த மார்ச் மாதம் 29 ஆம் திகதி வெளியிட்ட கலிபோர்னியா மாநில ஆளுநர் ஜெர்ரி பிரவுன், வரலாற்று சிறப்புமிக்க இந்த சம்பள உயர்வை அமெரிக்காவின் அனைத்து மாநிலங்களும் பின்பற்றும் என்று நம்புவதாக குறிப்பிட்டார்.

இந்த புதிய அறிவிப்பை கலிபோர்னியாவில் உள்ள பெரிய நிறுவனங்கள் எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு தொடக்கத்திலும், சிறிய நிறுவனங்கள்எதிர்வரும்2023 ஆம் ஆண்டு தொடக்கத்திலும் பின்பற்ற வேண்டும் என கலிபோர்னியா மாநில நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

இதேபோல், நியூயோர்க் மாநில நிர்வாகமும் இந்த உத்தரவை கடைப்பிடிப்பதாக கடந்தவாரம் அறிவித்தது.

கலிபோர்னியா மற்றும்நியூயோர்க்கில் அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச சம்பளத்தை பிறமாநிலங்களும் நடைமுறைப்படுத்த வேண்டும் எனற கோரிக்கையுடன் நியூயோர்க, லொஸ் எஞ்சலஸ், சிகாகோ, மியாமி உள்ளிட்ட பல பெருநகரங்களில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் நேற்று முன்தினம் பேரணியாக சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக, மெக்டொனால்ட் உணவகங்களின் அருகேயும் பிரபல வர்த்தக நிறுவனங்களின் வாசலிலும் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. (இ-5)







## வடகொரியாவின் ஏவுகணைச் சோதனை தோல்வி; தென்கொரியா தகவல் வெளியீடு

(பியாங்யாங்)

வடகொரியா நேற்று பரிசோதித்த ஏவுகணை தோல்வியை சந்தித்ததாக தென்கொரியா தெரிவித்துள்ளது.



வடகிழக்கு ஆசிய நாடுகளான தென்கொரியாவும், வடகொரியாவும் தங்களது ஆயுத பலத்தை நிலைநாட்ட பெரும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

சக்திவாய்ந்த அணுகுண்டு, ஐதரசன் குண்டு மற்றும் அணு ஆயுதங்களை நீண்டதூரம் சுமந்து சென்று தாக்குதல்நடத்தும்ஏவுகணைகள் ஆகியவற்றை வடகொரியா அவ்வப்போது பரிசோதித்து வருகிறது.

இதுதவிர, அயல் நாடான தென்கொரியாவை அச்சுறுத்தும் விதமான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறது. ஐ.நா. பாதுகாப்பு சபையின் கட்டுப்பாட்டை மீறி வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் நடந்துகொள்வதால் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகளின் எதிர்ப்பையும் சந்தித்து வருகிறார்.

இதனால் அந்த நாட்டின் மீது சில தடைகளும் விதிக்கப்பட்டது. இருந்தபோதும், பேரழிவை ஏற்படுத்தும் ஐதரசன் குண்டு சோதனை நடத்தி மேலும் பதற்றத்தை உருவாக்கியது வடகொரியா.

இதையடுத்து வடகொரியா மீது கடுமையான பொருளாதார தடைகள் விதிக்க ஐ.நா. பாதுகாப்பு சபையில் அண்மையில் ஒருமனதாக ஒப்புதல் அளித்தது. இந்த தடைகளை எல்லாம் பொருட்படுத்தாத வடகொரியா அடுத்தடுத்து கண் டம் விட்டு கண்டம் தாண்டி பாய்ந்து செல்லும் அணுஆயுத ஏவுகணைகளை கடந்த மாதம் அடுத்தடுத்து பரிசோதித்தது.

எதிரி நாடுகளின் போர் விமானங்களை தாக்கி அழிக்கும் நவீனரக ரொக்கெட்களை ஜனாதிபதி கிம் ஜாங் உன் மேற்பார்வையில் கடந்த 2ஆம் திகதி வடகொரியா பரிசோதத்தது.

மேலும், தென்கொரயா நாட்டு ஜனாதிபதி மாளிகையை ஏவுகணைகளின் மூலம் வடகொரியா தாக்கி அழிக்கும் சித்தரிப்பு வீடியோ காட்சிகளையும் வெளியிட்டது.

இதற்கிடையே, தென்கொரியா இராணுவத்துடன் அமெரிக்க படைகள் கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. தங்கள் நாட்டின் மீது தாக்குதல் நடத்தவே இந்த பயிற்சி மேற்கொள்ளப்படுவதாக வடகொரியா குற்றம்சாட்டி வருகிறது.

இந்நிலையில், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் தநதையும், அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதியுமான மறைந்த கிம் இல் சுங்கின் பிறந்தநாள் நேற்று கொண்டாடப்பட்டது. ஆண்டு தோறும் அவரது பிறந்த நாளை ஏவுகணை சோதனைகளுடன் தீபாவளிபோல் கொண்டாடி மகிழ்வது வழக்கம்.

அந்த வகையில் நேற்று வடகொரியா பரிசோதித்த ஏவுகணை தோல்வியை சந்தித்ததாக தென்கொரியா உரிய ஆதாரங்களுடன் தெரிவித்துள்ளது. (இ-5)

## வரலாறு காணாத வறட்சி; அவசரநிலை பிரகடனம்

மத்திய அமெரிக்க நாடுகளில் ஒன்றான எல்சல்வடோரில் கடுமையான வறட்சி நிலவுவதால் அந்நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக நீர் பற்றாக்குறையை காரணம் காட்டி அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பருவநிலை மாற்றத்தின் விளைவாக கடந்த ஆண்டு உருவான 'எல்நினோ' தாக்கத்தால் மத்திய அமெரிக்காவில் உள்ள சில நாடுகள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, எல்சல்வடோர் நாட்டில் மழை பொய்த்துப் போனதால் அங்குள்ள ஆறுகள், ஏரி போன்ற நீர்நிலைகள் வற்றிக் கிடக்கின்றன.

கோப்பி, சோளம், பீன்ஸ் போன்ற பயிர்களின் விளைச்சல் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தலைநகர் சான் சல்வடோர் உள்ளிட்ட பல பகுதிகள் மக்கள் குடிநீர் கிடைக்காமல் திண்டாடி வருகின்றனர். குடிநீர் கேட்டு மக்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

இதற்கிடையே, நேற்று முன்தினம பத்திரிகையாளர்களை சந்தித்த அந்நாட்டின் ஜனாதிபதி சால்வடர் சன்சேஸ் செரென், நீர் பற்றாக் குறையால் நாடு முழுவதும் வறட்சி அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவித்தார். (இ-5)

## ஜப்பான் நிலநடுக்கத்துக்கு 9 பேர் பலி; அணு உலைகளுக்கு ஆபத்து இல்லை

ஜப்பான் நாட்டின் தென்மேற்கு பகுதியில்ஏற்பட்ட பயங்கர நில நடுகத்தில் சிக்கி 9 பேர் பலியாகியுள்ளனர்.

ஜப்பானின் தென்மேற்கு பகுதியில் உள்ள கயூஷ் தீவில் நேற்று முன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது. உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் இரவு 9.26 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட டது. இந்த நில்நடுக்கமானது கயூஷில் தீவில் உள்ள குமாமோட்டோ நகரின் கிழ க்கே பூமிக்கு அடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது.

ரிக்டர் அளவுகோலில் 6.9 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப் படவில்லை.

நிலநடுக்கம் ஏற்பட்டபோது ஜப்பானில் அதிவேகமாக இயக்கப்படும் ரயில்கள்மற்றும்மெட்ரோ ரயில்சேவைகள் நிறுத்தி வைக்கப்பட்டன. நிலநடுக்கத்துக்கு பின்னர் சுமார் நூறுமுறை நில அதிர்வு ஏற்பட்ட தாக உள்ளூர்ஊடகங்கள்தெரிவித்துள்ளன.

இந்த நிலநடுக்கத்தால் சில கட்டடங்கள் மற்றும் வீடுகள் இடிந்து விழுந்தன. இடிபாடுகளில் சிக்கியவரகளை மீட்க பேரிடர் மீட்பு படையினர் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நிலநடுக்கத்தை தொடர்ந்து சில கட்டடங்கள் தீப்பிடித்து எரிந்தன. 700இற்கும்மேற்பட்ட இராணுவ வீரர்கள் மீட்பு மற்றும் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ளனர். சுமார் 44 ஆயிரம் பேர் பாதுகாப் பான பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (இ-5)

# மூன்று வீடுகளை உடைத்து யானைகள் அட்டகாசம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட் டத்தின் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வவுணதீவு, பாவற்கொடிச்சேனை கிராம சேவையாளர் பிரிவுகளில் புதுவருட தினமான நேற்று முன்தினம் யானையின் அட்டகாசம் காரணமாக 3 வீடுகளும், 4 பயிர்ச் செயகைக் குடியிருப்புகளும் சேதமடைந்துள்ளன.

நேற்று முன்தினம் அதிகாலை நேரத்தில் இக்கிராம சேவை யாளர் பிரிவுகளின் மாவிலங்கடிச்சேனை, பாரதி நகர் கிராமங்களுக்குள் புகுந்த யானை வீடுகளை உடைத்து அதனுள் இருந்த நெல், அரிசி, தானிய வகைகள், உணவுப் பொருட்களை உண்டுள்ளது.

அத்துடன், யானையின் தாக்குதல் காரணமாக வீட்டு தளபாடங்கள், சமையல் உபகரணங்கள் என பெருந்தொகைப் பொருட்களும் சேதமாகியுள்ளன. (இ-5)



## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட. அறிக்கை 15.04.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.83 | 146.63 |
| பவுண்ட் | பிரிட்டன் | 201.31 | 208.51 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 159.79 | 166.18 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 146.59 | 152.73 |
| டொலர் | கனடா | 110.74 | 115.37 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 109.10 | 114.21 |
| டொலர் | சிங்கப்பூர் | 104.65 | 108.68 |
| ரூபா | இந்தியா | 2.1605 | ------- |
| யென் | சீனா | 22.1852 | |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6774 |
| குவைத் | டினார் | 477.2011 |
| ஓமான் | ரியால் | 373.7614 |
| கட்டார் | ரியால் | 39.5167 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3728 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1607 |



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 50 | 80 | 100 | 80-100 |
| உருளைக்கிழங்கு | 100 | 70 | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 90 | 160 | 120 | 100-160 |
| தக்காளி | 100 | 100 | 160 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 | 50 | 60 |
| கோவா | 50 | 55 | 100 | 50 | 60 |
| கரட் | 100 | 80 | 160 | 100 | 80-200 |
| பூசணி | 30 | 15 | 40 | 40 | 40 |
| புடோல் | 30 | 20 | 60 | 50 | 40 |
| வாழைக்காய் | 30 | 35 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 100 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 75 | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 100 | 120 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 100 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | 120 | 100 | 80 |
| பயற்றங்காய் | 100 | 60 | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 240 | 130 | 120 |
| பீற்றூட் | 100 | 60 | 120 | 80 | 80 |
| கறிமிளகாய் | 100 | 50 | 120 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 400 | 500 | 300-500 |
| போஞ்சி | 100 | 100 | - | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | — | 80 | — |
| கீரை - 1பிடி | 10-40 | 20 | 20 | 15 | 40 |
| தேசிக்காய் | 260-320 | 250 | 500 | 300 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 20-40 | 30-40 | 40 | 50 |
| இராசவள்ளி | 250 | 100 | 120 | 160 | 140 |
| வெங்காயப்பூ | 200 | — | — | — | — |
| முள்ளங்கி | 60 | 30 | 80 | 50 | 50 |
| பொன்னாங்காணி | 60 | 20 | 30 | 25 | 30 |
| வல்லாரை | 40 | 10 | 20 | 15 | 10 |
| ஈரப்பலா | — | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ்காந்தி படுகொலை 157

இதனால் அவர் காங்கிரஸ் வேட்பாளர்களுக்குக் கைச்சின்னத்தில் வாக்களியுங்கள் என்று மட்டும் கூறி ஒரே நிமிடத்தில் பேச்சை முடித்துக் கொண்டார். ராஜீவ்காந்தி பேசிய கடைசிப் பொதுக் கூட்டம் இதுதான்.

இரவு 10.05 மணிக்கு அவரது கார் ஸ்ரீபெரும்புதூருக்குள் நுழைந்தது. அங்குள்ள இந்திரா காந்தி சிலைக்கு அவர் மாலை அணிவித்தார். தனது தாயார் சிலைக்கு அவர் மாலை அணிவித்தார்.

தனது தாயார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய அந்த நிகழ்ச்சி தான் ராஜீவ் காந்தியின் கடைசி நிகழ்ச்சி.

அங்கிருந்து காரில் ஏறி 100 அடி தூரத்தில் இருக்கும் மேடைக்குச் சென்றார். வழி நெடுகக் கூட்டம். கூட்டத்தினரை நோக்கி கையை அசைத்தபடியே சென்றார்.

### வாணவேடிக்கை

இரவு 10.15 மணி. பொதுக்கூட்ட மேடைக்குச் செல்லும் வாசல் முன்பு அவரது கார் நின்றது. காரில் இருந்து புன்னகை தவழும் முகத்தோடு ராஜீவ்காந்தி இறங்கினார். அப்போது வாண வேடிக்கை நடந்தது. ராஜீவ் காந்தி வாழ்க, வருங்கால பிரதமர் வாழ்க என்று தொண்டர்கள் முழங்கினார்கள்.

காங்கிரஸ் தலைவர்களும் பிரமுகர்களும் அவருக்கு மாலை அணிவித்தனர்.

மேடையில் சினிமா இசை அமைப்பாளர் (சங்கர்) கணேஷ் குழுவினரின் இன்னிசைக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது.

உடனே (சங்கர்) கணேஷ் மைக்கில் ராஜீவ்காந்திக்குச் சிறப்பான வரவேற்பு கொடுக்க வேண்டும். நாங்கள் ஒரு பாட்டு பாடுகிறோம். நீங்கள் அனைவரும் சேர்ந்து கைகளைத்தட்ட வேண்டும் என்று கூறிவிட்டு ராஜீவ் வாழ்கவே- எங்கள் ராஜீவ் வாழ்கவே-இந்திராவின் புதல்வர் ராஜீவ் வாழ்கவே- உன்னை விட்டால் எங்களுக்கு வேறு கதி இல்லையே என்று பாடிக் கொண்டு இருந்தார். அதற்கேற்ப கூட்டத்தினர் கைகளைத் தட்டினார்கள்.

### குண்டு வெடித்தது

ராஜீவ்காந்தி மேடை ஏற 10 அடி தூரமே பாக்கி இருந்தது.

அப்போது காங்கிரசைச் சேர்ந்த லதா கண்ணன், அவருடைய மகள் கோகிலா ஆகியோர் சிவப்பு கம்பளம் விரிக்கப்பட்டிருந்த பகுதியில் நின்று கொண்டிருந்தார்கள்.

கோகிலா கையில் ஒரு கடிதம். ராஜீவ்காந்தியைப் புகழ்ந்து இந்தியில் எழுதப்பட்ட கவிதை அது. அதைப் படித்துக் காட்டியதும் ராஜீவ் காந்தி அவர் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

அப்போது கண்ணாடி அணிந்த ஒரு பெண் கையில் சந்தண மாலையுடன் ராஜீவ் காந்தியை நெருங்கினாள். அதைக் கவனித்த சப்-இன்ஸ்பெக்டர் அனுசூயா அவளைத் தடுக்க முயன்றார். அப்போது ராஜீவ் காந்தி பரவாயில்லை அவளை விடுங்கள் என்றார்.

ராஜீவ்காந்தியை மர்மப் பெண் நெருங்கினாள்.

அப்போது இரவு 10.21 மணி. ராஜீவ் காலைத் தொட்டு வணங்க அந்தப் பெண் குனிந்தாள். அப்போது பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்தது. ராஜீவ் காந்தி நின்ற இடத்தில் அவரைக் காணவில்லை. மாறாக அந்த இடத்தில் பல உடல்கள் சிதறிக் கிடந்தன. கதறி அழுதனர்.

மேடையில் இருந்த காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியும் மேடையோரம் நின்றிருந்த கருப்பையா மூப்பனாரும் உடல்கள் சிதறிக்கிடந்த இடத்துக்கு ஓடோடி வந்தனர். எல்லா உடல்களுமே கருகிய நிலையில் கிடந்ததால் உடல்களைப் புரட்டிப் பார்த்தனர்.

அப்போது ஒரே ஒரு உடல் மட்டும் செக்கச் சிவந்த நிறத்தில் இரத்தம் வழியக் கிடந்ததைக் கிடந்த ஷூவை வைத்து அது ராஜீவ்காந்தியின் உடல் என்பதைத் தெரிந்து கொண்டனர்.

ராஜீவ்காந்தி உடலைப் பார்த்து கருப்பையா மூப்பனாரும் வாழப்பாடி ராம மூர்த்தியும் ஜெயந்தி நடராஜனும் கதறி அழுதனர்.

வெடிகுண்டு வைத்து ராஜீவ்காந்தி கொல்லப்பட்டார் என்ற செய்தி தெரிய வரவே எங்கும் பதற்றம், பீதி நிலவியது.

### வெடிகுண்டு பெண்

இந்தக் குண்டு வெடிப்பில் ராஜீவ்காந்தியுடன் சேர்த்து 18 பேர் கொல்லப்பட்டனர். வெடிகுண்டு எப்படி வெடித்தது என்பது மர்மமாக இருந்தது.

ராஜீவ்காந்திக்கு போடுவதற்காக கொண்டு வரப்பட்ட மாலைகளில் டைம் பாம் வைக்கப்பட்டு அதன் மூலம் வெடிகுண்டு வெடிக்கப்பட்டதா? அல்லது மலர் மாலையிலோ அல்லது மாலை வைக்கப்பட்டிருந்த கூடைக்குள்ளே வெடிகுண்டு வைக்கப்பட்டிருந்ததா? என்று குழப்பம் நிலவியது. ஆனால் ராஜீவ் காந்தியின் கொலைக்கு சந்தன மாலையுடன் வந்த பெண்தான் காரணம் என்ற திடுக்கிடும் தகவல் வெளிச்சத்துக்கு வந்தது.



தன் அருகே மனித வெடிகுண்டு இருப்பதை அறியாத ராஜீவ், கோகிலா படித்த கவிதையைக் கேட்டு மகிழ்கிறார்

(தொடரும்)

# மூன்று பொலிஸார் பணி நீக்கம்

மாத்தளை-லக்கல பொலிஸ் நிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் அதிகாலை சில ஆயுதங்கள் கொள்ளையிடப்பட்டமை தொடர்பில் மூன்று பொலிஸார் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பொலிஸ் அதிகாரிகளில், இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் உதவி 'அதிகாரி ஒருவருமே இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையத்திலிருந்த T56 ரக துப்பாக்கி மற்றும் 5 கைத்துப்பாக்கிகள் கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் இடம்பெற்ற தருணத்தில் லக்கல பொலிஸ் நிலையத்தில் 4 அதிகாரிகள் பணியில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சு.கவின் மே தினக் கூட்ட பிரதான ஏற்பாட்டாளர் ஒருவர் கூட்டு எதிர்க்கட்சியின் கூட்டத்தில் பங்கேற்பார் - குமார

காலியில் நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்ட பிரதான ஏற்பாட்டாளர்களில் ஒருவர், கிருலப்பனையில் கூட்டு எதிர்க்கட்சி நடத்த உள்ள மேதினக் கூட்டத்தில் பங்கேற்பார் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

தமது பெயர் ஏற்பாட்டுக் குழுவில் உள்ளடக்கப்பட்டபோதிலும், தாம் கூட்டு எதிர்க்கட்சியின் கூட்டத்திலேயே பங்கேற்பதாக அந்த சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் உறுதியளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வானொலிச் சேவை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் குமார வெல்கம இதனைத் தெரிவித்துள்ளார்.


இதேவேளை, காலியில் நடைபெறவுள்ள சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்ட ஏற்பாட்டாளர் குழுவில் குமார வெல்கம, பவித்ரா வன்னியாராச்சி, மகிந்தானந்த அலுத்கமகே உள்ளிட்டவர்களின் பெயர்களையும் ஜனாதிபதி உள்ளடக்கியிருந்தார் என அண்மையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர்



மகிந்த அமரவீர தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பசுபிக் தீவில் இலங்.கடற்படைக்கு பயிற்சி அளிக்கின்றது அமெரிக்கா





(கொழும்பு)

இலங்கை கடற் படையினருக்கு, வடமேற்கு பசுபிக் பெருங்கடலில் உள்ள குவாம் தீவில், அமெரிக்க கடற் படையினர் பயிற்சிகளை அளித்து வருகின்றனர்.

பசுபிக் பெருங்கடலில் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் உள்ள குவாம் தீவில் உள்ள அமெரிக்க கடற்படைத் தளத்திலேயே, இலங்கை கடற்படையினருக்கு பல்வேறு கட்டங்களாக பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

அமெரிக்க கடற்படையின் அதிரடிப்படை 75 சார்பில் இந்தப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

குவாம் கடற்படைத் தளத்தில், வைத்து இந்த மாத முதல் வாரத்தில் இலங்கை கடற்படையினருக்கு அமெரிக்க கடற்படையின் வெடி பொருள் அகற்றும் நடமாடும் பிரிவினால், பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

இந்தப் பயிற்சியின் மற்றொரு கட்டமாக, இலங்கை கடற்படையினருக்கு, குவாம் தீவில் உள்ள அப்ரா துறைமுகத்துக்கு அப்பால் கடலுக்குள் சுழியோடும் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

இரண்டாம் உலகப்போரில் மூழ்கடிக்கப்பட்ட ஜப்பானியக் கப்பல் ஒன்றின் சிதைவுகளுக்கு அருகே இந்தப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் மேம்பட்டுள்ள நிலையில், இலங்கை கடற்படையினருக்கு, அமெரிக்கா பயிற்சிகளை அளிக்கத் தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# துறைமுக நகர்த் திட்ட எதிர்ப்பு குறித்த நிலைப்பாட்டில் மாற்றமில்லை-ஜே.வி.பி.

துறைமுக நகர்த் திட்ட எதிர்ப்பு குறித்த நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் கிடையாது என ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

கொழும்பில் நிர்மாணிக்கப்பட உள்ள துறைமுக நகர்த் திட்டத்திற்கு தமது கட்சி எதிர்ப்பை வெளியிட்டு வருவதாக ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் பாதிப்பு குறித்த அறிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தாது இந்த அரசாங்கம் அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது.

தேர்தல் மேடைகளில் துறைமுக அபிவிருத்தி நகர்த் திட்டத்தை முழுமையாக இரத்து செய்வதாக குரல் கொடுத்த இந்த அரசாங்கமும் மீளவும் திட்டத்தை ஆரம்பிக்க உள்ளது.

இந்த அரசாங்கத்தைப் போன்று ஜே.வி.பி. இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டதல்ல.

பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா அன்று சீனாவை பொருளாதார கொலையாளி எனக் கூறியிருந்தார்.

எனினும், இன்று சீனத் திட்டங்களை நன்மை என்று பேசி வருகின்றார்.

மக்களுக்கு வேறு பல பிரச்சினைகள் காணப்படும் நிலையில் துறைமுக நக



ருக்கு பெருந்தொகை பணம் செலவிடுவது பாரிய அநியாயமாகும் என விஜித ஹேரத் சிங்கள இணையமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.(இ-5)

## இன்று ஒரு தகவல்

### பிரச்சினைகளை சமாளிக்கும் வழி

பிரச்சினை உள்ளவர்கள் ,பிரச்சினை இல்லாதவர்கள் என்று பிரிப்பதை விட பிரச்சினைகளைச் சமாளிக்கக் கூடியவர்கள், சமாளிக்கத் தெரியாதவர்கள் என்று சொல்லி விடலாம்.

பிரச்சினை அற்ற வாழ்க்கையை உப்புச் சப்பற்ற வாழ்க்கை என்று சொல்லி விடலாம். பிரச்சினைகள் நம்மை நாமே புரிந்து கொள்ளவும் நம்முடைய திறமையை நாமே உணரவும் மற்றவர்களைப் புரிந்து கொள்ளவும் ஏன் உலகைப் புரிந்து கொள்ளவும் அனுபவக் கல்வியைப் பெறவும் உதவுகின்றன என்று சொன்னால் அந்த வாதத்தை யாரால் மறுக்க முடியும்?

பிரச்சினைகள் மூன்று விதங்களில் ஏற்படுகின்றன.ஒன்று–நம் ஆசைகளால் வரக் கூடும் இரண்டு–மற்றவர்களால் வேண்டுமென்றோ அல்லது அவர்களேஅறியாமலோ நமக்கு ஏற்படக்கூடும்.

பிரச்சினை என்றவுடன் நெருப்புக் (ஆஸ்ட்ரிச்) கோழி மாதிரித் தலையை மணலுக்குள் புதைத்துக் கொள்ளக்கூடாது.விலகி ஒதுங்குவதாலோ,கண்டும் காணாமல் இருப்பதாலோ, ஓடி ஒழிவதாலோ பிரச்சினை ஒழிந்து விடுவதில்லை.அதைச் சந்தித்தே ஆக வேண்டும்.

பைசா நகரத்துக் கோபுரம் போலச் சாய்மானமோ பிடிமானமோ தேடக் கூடாது. பிரச்சினைகளைச் சுயமாகச் சந்திக்கத் திராணியில்லாமலும் தன்னம்பிக்கை இல்லாமலும் மற்றவர்களை நம்பி வாழ்பவர்கள் எந்தக் காலத்திலும் முன்னுக்கு வர முடியாது.

பிரச்சினை என்றதும் மன உளைச்சல் அடைவது, கவலைப்படுவது, குழம்புவது, பயப்படுவது,களைப்படைவது ஆகியவை முறையான பரிகாரங்களாகா.இவற்றால் நேரம் வீணாகுமே தவிர,ஒன்றும் பயன் ஏற்படாது.இப்படி நேரத்தை வீணாக்குபவர்கள் ஏற்கனவே இருக்கும் பிரச்சினை போதாதென்று தங்களுக்குத் தாங்களே பிரச்சினைகளாகுகிறார்கள்.பிரச்சினை என்று வந்து விட்டால்–

அதைத் தீர்க்க என்னவெல்லாம் வழி உண்டு என ஆற அமரச் சிந்திக்க வேண்டும். ஒவ்வொரு வழியாக முயற்சி செய்து பார்க்க வேண்டும்.பொறுமை இல்லாமலும் எரிச்சலோடும் பிரச்சினைகளை அணுகக் கூடாது.அப்படி அணுகினால் அதன் பலன்கள் தற்காலிகமானவையாக இருக்கும்.

இப்படிச் செய்திருக்கலாமே அப்படிச் செய்திருக்கலாமே என்ற நினைப்பையெல்லாம் பிரச்சினை தீர்ந்தவுடன் வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர,பிரச்சினை தீரும் முன்பே அதைப்பற்றி எண்ணிக் கொண்டு வருந்திக் கொண்டிருக்கக் கூடாது.

பிரச்சினைகளை முழுவதுமாகத் தீர்க்க முடியாவிட்டாலும் அவற்றின் தீவிரத்தைக் குறைக்கவாவது செய்யலாம்.உங்கள் முயற்சிகள் வேறு பிரச்சினையில் கொண்டு போய் விடாது என்பதையும் உறுதி செய்து கொள்ளுங்கள்.

என்ன செய்தாலும் நடக்காது என்பது உறுதியாக, அனுபவ பூர்வமாகத் தெரிந்து விட்டால் பிரச்சினைகளின் விளைவுகளைச் சமாளிக்கும் மனத்தெம்பைப் பெறுவதற்கு ஆயத்தமாக வேண்டியதுதான்.

லேனா தமிழ்வாணன்




# அரசை வென்ற புளியம்பழம்!

…ஆசைராஜாவுக்கு எதுவும் ஆர்வத்தைத்தூண்ட விலலை. ஆசையை மூட்ட வில்லை. வந்த எல்லோரும் ஏமாற்றத்தோடு திரும்பிப் போனார்கள்.

அப்போது அரண்மனைக்குத் துணி துவைக்கும் சலவைக்காரன் சலவைத் துணியைக் கொடுக்கப் போகும போது இளவரசியைப் பார்த்து விட்டார். மணம் முடித்தால் இளவரசியைத்தான் மணம் முடிக்க வேண்டும் என்று மனதில் சபதம் எடுத்துக் கொண்டான். ஆசைராஜாவின் அறிவிப்பை அவனும் கேட்டான்.

அவனும் என்னவெல்லாமோ யோசித்துப் பார்த்தான். எதுவும் பிடிபடவில்லை. இளவரசியைக் கல்யாணம் முடிக்க முடியாமல் போயவிடுமே என்று கவலைப பட்டான். கவலை அவனைப் பாடாய்படுத்தியது. அவன் மெலந்து துரும்பாகி விட்டான்.

அதைப் பார்த்த அவனுடைய பாட்டி, " ஏண்டா பேரப புள்ள என்னடா கவலை.. எதாயிருந்தாலும் சொல்லு.." என்று கேட்டாள். கடைசியில் அவன் பாட்டியிடம் தன் கவலையைச் சொன்னான்.

அவனுடைய பாட்டியும், "





அட லூசுப் பயலே, இதுக்குத தானா இம்புட்டு கவலைபபட்டே" எனறு சொல்லி அவனை அருகில அழைத்து காதில் ரகசியம் சொன னாள். அதைக் கேட்ட அவனும் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான்.

அன்று அரசவையில் வழக்கம்போல. ஆசைராஜா எரிச்சலுடன் உட்கார்ந்திருந்தார். சற்று முன்னர் அவர் முன்னால் பல்லியையும் பாச்சாவையும் கொண்டுவந்த இரண்டு பேரை சிறையில் அடைக்கச் சொல்லிவிட்டார். மூன்றாவதாக அரண்மனைச் சலவைக்காரன் போனான். அவன் கையில் எதுவும் கொண்டு போகவில்லை. மந்திரிகள் அவனிடம், "ராஜாவுக்கு என்ன கொண்டு வந்தாய்? " என்று கேட்டார்கள்.

அவன் அமைதியாக அரசவையில் உள்ளவர்களை ஒரு முறை நிதானமாகப் பார்த்தான். பின்னர் மடியிலிருந்து ஒரு புளியம்பழத்தை எடுத்து எலலோருக்கும் காண பித்து விட்டு வாயில் வைத்து ருசித்து சப்புக் கொட்டினான். அதைப பாரத்த ஆசை ராஜாவுக்கு வாயில தானாக எச்சில் ஊறியது.

அரசவையில் இருந்த மந்திரிகள் எல்லோருடைய வாயிலும் எச்சில் வழிநதது. ஆசைராஜா சிம்மாசனத திலிருந்து எழுந்து ஓடி வநதார்.

"என்னால ஆசைய அடக்க முடியல.. அடக்க முடியல.." என்று வாய் விட்டுச் சொல்லிக் கொண்டே சலவைக்காரனிடம் கையேநதினார்.

அவனும் தயாராக வைத்திருந்த இன்னொரு புளியம பழத்தை எடுத்து ஆசை ராஜாவிடம் கொடுத் தான். ஆசைராஜா முகத்தைச் சுளித்து, பல் கூச சப்புக் கொட்டி புளியம்பழத்தை ருசித்தார். மந்திரிகளும் ருசித்தார்கள்.

ஆசைராஜா சொன்ன மாதிரி பாதி நாட்டையும் கொடுத்து இளவரசியையும் கல்யாணம் செய்து கொடுத்தார். அதன் பிறகு என்ன செய்தார் தெரியுமா? நாடெங்கும் புளிய மரங்களை நட்டு வளர்த்தார். அதன் பிறகு அவருடைய ஆசைநோய் அடங்கிவிட்டது. மக்களும் அவரவர் வேலைகளைப் பார்த்துக்கொண்டு மகிழ்ச் சியாக வாழ்ந்தனர்.

(முற்றும்)

04.2016
16

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1346 - தென்கிழக்கு ஐரோப்பாவின் பெரும பகுதியை உள்ளடக்கிய சேர்பியப் பேரரசு டுசான் சில்னி என்பவனால் உருவாக்கப்பட்டது.
- 1444 - இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையில் ஐந்து ஆண்டுகள் போர் நிறுத்த ஒப்பந்தம் எட்டப்பட்டது.
- 1582 - ஸ்பானிய ஆக்கிரமிப்பாளன் ஹெர்னாண்டோ டி லேர்மா என்பவன் ஆர்ஜெண்டீனாவின் சால்ட்டா என்ற குடியேற்றத் திட்டத்தை கண்டு பிடித்தான்.
- 1853 - இந்தியாவின் முதலாவது பயணிகள் தொடரூந்து சேவை பம்பாயில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1876 - பல்கேரியாவில் ஒட்டோமான் பேரரசுக்கெதிராக புரட்சி வெடித்தது.
- 1885 - இலங்கையில் அஞ்சல் அலுவலக சேமிப்புத் திட்ட முறை அறிமுகமானது.
- 1912 - ஹறியெட் குயிம்பி என்னும் பெண் ஆங்கிலக் கால்வாயைவிமானத்தில் கடந்த முதல் பெண ஆனார்.
- 1917 - நாடு கடந்த நிலையில் பின்லாந்தில் இருந்த விளாடிமிர் லெனின் சென் பீட்டர்ஸ்பேர்க் திரும்பினார்.
- 1919 - அம்ரித்சர் படுகொலையைக் கண்டித்து மகாத்மாகாந்தி ஒருநாள் உண்ணாநோன்பு இருந்தார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: செம்படையினர் ஜேர்மனியப் படைகளுக்கெதிரான தமது கடைசிப் போரை பெர்லினைச் சுற்றி ஆரம்பித்தனர்
- 1947 - சோவியத்- ஐக்கிய அமெரிக்கா இடையேயான உறவுகளை பனிப்போர் என அமெரிக்க பொருளாதார ஆலோசகர் பேர்னார்ட பரெக என்பவர் முதன் முதலாக வர்ணித்தார்.
- 1966 - முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் ஆரம்பமானது.
- 1972 - நாசாவின் அப்போலோ 16 விண்ணுக்கு ஏவப்பட்டது.

### பிறப்புகள்

- 1844 - அனத்தோலி பிரான்ஸ், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1924)
- **1851 - சேர் பொன்னம்பலம் இராமநாதன், இலங் கையின் தேசியத்தலைவர் (இ. 1930)**
- 1867 - வில்பர் ரைட், முதன்முதலில் எஞ்சின் உந்தும ஊர்தியில் பறந்து சாதனை படைத்தவர் (இ. 1912)
- 1889 - சார்லி சாப்ளின், நடிகர் (இ. 1977)
- 1927 - திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட், கத்தோலக்க திருச்சபையின் 265ஆவது திருத் தந்தை
- 1935 - சுபத்திரன், ஈழத்து முற்போக்கு இலக்கியக் கவிஞர் (இ. 1979)
- 1957 - பெரியசாமி சந்திரசேகரன், இலங்கை வாழ் இந்தியத் தமிழர்களின் அரசியல் தலைவர், தொழிற்சங்கவாதி

### இறப்புகள்

- 1908 - அப்புக்குட்டி கிங்ஸ்பரி, யாழ்ப்பாணக் கல்லூரியின் கணிதவியல் பேராசிரியர்.
- 1972 - யசுனாரி கவபட்டா, நோபல் பரிசு பெற்ற ஜப்பா னிய எழுத்தாளர் (பி. 1899)

## சேர் பொன்னம்பலம் இராமநாதன இலங்கையின் தேசியத்தலைர்



சேர் பொன்னம்பலம் இராமநாதன் 1851 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி, யாழ்ப் பாணம், மானிப்பாயைச் சேர்ந்த இராசவால் முதலியார் (கேட் முதலியார்) அருணாசலம் பொன்னம்பலம் என்பவரின் இரண்டாவது புதல்வராக கொழும்பில் பிறந்தார். இவர் இலங்கையின் தேசியத் தலைவர்களுள் ஒருவராகக் கருதப்பட்டவர். சிங்களவரும், தமிழரும் இன வேறுபாடு பாராது அவரைத் தங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டனர்.

குமாரசாமி முதலியார், சேர் பொன்னம்பலம் அருணாசலம் ஆகியோரது சகோதரர். ஆரம்பக் கல்வியை கொழும்பு இராணிக் கல்விக்கழகத்தில் (கொழும்பு வேத்தியர் கல்லூரி) கற்றார். 13 ஆவது வயதில், பிரெசிடென்சி கல்லூரியில் கல்வி கற்பதற்காக சென்னைக்கு அனுப்பப்பட்டார். சேர் றிச்சட் மோர்கனின் கீழ் சட்டக் கலவி பயின்று 1873 இலே உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஆனார். பின்னர் சொலிசிட்டர் ஜெனரலாகப் பதவி வகித்து 1906 ஆம் ஆண்டு, பணி ஓய்வு பெற்றார்.

1911 ஆம் ஆண்டில் நடைபெற்ற இலங்கையின் சட்டசபைக்கான முதலாவது தேர்தலில் முழு இலங்கையரையும் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரே உறுப்பினராக இராமநாதன் தெரிவு செய்யப்பட்டார்.

1879 ஆம் ஆண்டு இலங்கையின் சட்டசபைக்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.1897ஆம் ஆண்டு விக்டோரியா மகாராணியாரின் 50ஆவது ஆண்டு விழாவிற்கான இலங்கையின் பிரதிநிதியாக செல்ல பொன்னம்பலம் இராமநாதன் அவர்களே தெரிவுசெய்யப்பட்டார்.

அந்த விழாவின் போது அவருக்கு பிரித்தானிய அரசினால் இலங்கையின் முழுமையான தேசியவாதி எனும் தங்கப்பதக்கம் வழங்கி கௌர விக்கப்பட்டது.1921 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசினால் பிரபுப் பட்டம் (Sir) வழங் கிக் கௌரவிக்கப்பட்டார். மிகுந்த சொல்வன்மையும் வாதத் திறமையும் வாய்க்கப்பெற்ற இவர், இலங்கையில் பிரித்தானியரின் பல நடவடிக்கை களுக்கு எதிராக வாதாடி இலங்கையரின் நலன்களைப் பாதுகாத்தார்.

# அரச படைகள் சுவீகரித்த காணிகளை மக்களிடம் மீள ஒப்படைக்க வேண்டும்

## பிரித்தானியா மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கில் இலங்கை படைகளால் கைப்பற்றப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளை இலங்கை அரசாங்கம் உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்க வேண்டும் என்று பிரித்தானியா வலியுறுத்தியுள்ளது.




இலங்கைப் படைகள் இன்னமும் 12,500 ஏக்கர் காணிகளைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வெளியிட்ட அறிக்கை தொடர்பாக பிரித்தானிய நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு, பிரித்தானியாவின் வெளிவிவகாரப் பணியக இணை அமைச்சர் ஹியூகோஸ்வயர், எழுத்து மூலம் பதிலளித்துள்ளார்.

"கடந்த ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்த பின்னர், இராணுவத்தின் வசமுள்ள தனியார் காணிகள் சிலவற்றை உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. எனினும், இன்னும் அதிகளவிலான காணிகள் ஒப்படைக்க வேண்டியுள்ளன.

இதனை பிரித்தானியா வரவேற்கிறது. எனினும் இன்னும் அதிகம் செய்ய வேண்டியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்கு வந்திருந்த போது, இலங்கை அரசாங்கத்துடனான சந்திப்புகளில் காணிகளை மீள ஒப்படைப்பது குறித்து கேள்விகளை எழுப்பியிருந்தேன்.

அத்துடன், நல்லிணக்க வாக்குறுதிகளை நிறைவேற்றவதற்கு, பிரித்தானியா உதவத் தயாராக இருப்பதாகவும் கூறியிருந்தேன்.

காணிகளை மீள ஒப்படைப்பதை நாம் தொடர்ந்து ஊக்குவிப்பதுடன், வடக்கில் கண்ணிவெடிகளை அகற்றி அதற்கு பிரித்தானியா உதவும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் வாள்வெட்டு; ஐந்துபேர் காயம்

(கொழும்பு)

மாத்தளை, கலேவெலப் பிரதேசத்தில் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது, நேற்று முன்தினம் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டில் ஐவர் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள், தம்புள்ளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாள்வெட்டுக்கான காரணம் கண்டறியப்படவில்லையெனவும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-5)

## ஆசியாவில் இலங்கையிலேயே வருடம் ஒன்றுக்கு அதிகளவு விடுமுறை நாட்கள்

போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் வருடத்தில் 25 நாட்கள் பொதுவிடுமுறை என்ற விடயம் பாரிய பாதிப்பை ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசியாவில் இலங்கையிலேயே வருடம் ஒன்றுக்கு அதிக விடுமுறை நாட்கள் வழங்கப்படுகின்றன.

சிங்கப்பூரில் 13 நாட்களே விடுமுறை வழங்கப்படுகின்றன.

ஜப்பானில் 17 நாட்கள் விடுமுறைவழங்கப்படுகின்றன.

தாய்லாந்தில் 19 மற்றும் 20 நாட்கள் விடுமுறை வழங்கப்படுகின்றன.

அமெரிக்காவில் 9 நாட்களும் அவுஸ்திரேலியாவில் 10 நாட்களும் பொது விடுமுறையாக உள்ளன.

எனினும் இலங்கையில் மதங்களின் அடிப்படையில் இந்த விடுமுறைகள் ஒதுக்கப்பட்டுள்ளமையால் அதிக விடுமுறைகளை வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பௌத்தர்கள் புனித நாளாக கருதும் 12 பௌர்ணமி தினங்கள் வருடம் ஒன்றில் விடுமுறையாக்கப்பட்டுள்ளன.

போர்க் காலத்தின் போது ஒவ்வொரு வருடமும் இலங்கையில் பல பில்லியன் டொலர்கள் செலவு ஏற்பட்டது.


இதன் காரணமாக பொருளாதாரத்துக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டது. இதனை நிவர்த்திக்கும் வகையில் தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் அதிக விடுமுறையானது இலங்கையின் பொருளாதாரத்தை மேலும் பாதிக்கும் என்று பொருளாதாரத்துறை நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 693

Search for people, places and things — Nagendram — Home

**நிஷாந்தன்**




**கருணா**

மனைவி:-என்னங்க பக்கத்து வீட்டில் பெரிய சண்டை நடக்குது. போய் ஒரு தடவை என்னண்டு பார்த்துட்டு வாங்களேன்.

கணவன்:- ஏற்கனவே ஒரு தடவை போனதுக்குத் தான் சண்டையே நடக்குது.


**மது**







**ரதி**




**அச்சு**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# SLEAS-விடய ஆய்வு அணுகு முறை

## கல்வி நிர்வாகம் தொடர்பான சம்பவக் கற்கை
## Case Study on Educational Administration

பின்வரும் பகுதியை வாசித்து அது தொடர்பான வினவப்பட்ட எல்லா வினாக்களுக்கும் விடைதருக.

மூன்று மாதங்களுக்கு முன்னர் தென்கிழக்கு மாகாணத்திலுள்ள ஹிருவாவி வலயக் கல் விப் பணிப்பாளராக திரு.சோமஸ்கந்தன் தன் கடமைகளை ஏற்றுக் கொண்டார். இவர் இலங் கை கல்வி நிர்வாக சேவை அலுவலகராக 12 வருடங்கள் சேவை யாற்றியுள்ளார். அத்துடன் அர்ப்ப ணிப்புள்ள அலுவலராக அவரது உயர் அதிகாரிகளின் நம்பிக்கையும் பெற்றிருந்தார்.

அன்றைய தினம் கிடைக்கப்பெற்ற தபால்களுடன் வந்த ஹிருவாவி வலயக் கல்வி அலுவலகப் பிரதான எழுதுவினைஞர் அவற்றை திரு. சோமஸ்கந்தனிடம் கையளித்தோடு கல்வி அமை ச்சினால் அனுப்பப்பட்ட திட்டமிடல் சம்பந்தமான ஆவணங்களைக் கொண்ட பொதி ஒன்றும் இருப்பதாகக் கூறினார். இதனைக் கேட்ட சோமஸ்கந்தன் அப்பொதியைப் பெற்று அதைப் பரிசீலனை செய்யும் நடவடிக்கையை உடனே மேற்கொண்டார். அதனுள் பாடசாலைத் திட்டமிடல் பற்றிய வழிகாட்டல் குறிப்பு, கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கல்வி அபிவிருத்திக்கான தேசிய ஐந்தாண்டுத் திட்டத்தின் இரு பிரதிநிதிகள். பாடசாலை, வலய மாகாண மட்ட ஐந்தாண்டு திட்டங்கள் தயாரித்தல் பற்றிய அறிவுறுத்தல்களைக் கொண்ட சுற்றறிக்கை மற்றும் அந்த ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய குறிப்பிட்ட தினங்கள் என்பன அடங்கி இருந்தன.

தமது வலயத்திலுள்ள பாடசாலைகளின் கல்வித் தரத்தை மேம்படுத்த இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என உணர்ந்து தமது அலுவலர்களுடன் பாடசாலைகளில் எவ்வாறு இந்தத் திட்டமிடல் செயன்முறையை அமுல்படுத்தலாம் என அத்தினமே வலயக்கல்விப் பணிப்பாளர் கலந்துரையாடினார். பாடசாலைத் திட்டமிடல் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு வலயத்திலுள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கும் அடுத்த வார இறுதியிலேயே ஒரு நாள் செயலமர்வு நடத்தப்படவேண்டும் என்பதை இக்கலந்துரையாடலின்போது சகலரும் ஏற்றுக் கொண்டனர். இத்திட்டமிடலுக்குப் பொறுப்பான பிரதிப் பணிப்பாளரிடம் செயலமர்வினை ஒழுங்கு செய்யும் பொறுப்பு வழங்கப்பட்டது. கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்புடைய பிரதிப்பணிப்பாளர், திட்டமி டலுக்குப் பொறுப்பான பிரதிப் பணிப்பாளர், கல்வி அபி விருத்திக்கு பொறுப்புடைய பிரதிபணிப்பாளர் மற்றும் கணக்காளர் என்போர் தத்தமது துறை சார்ந்த பொறுப்புக்கள் பற்றி அதி பர்களுக்கு உரையாற்ற வேண்டுமெனவும் செயலமர்வு அதிபர்களின் கருத்துக்களைப் பெறும் வகையில் கலந்துரையாடல் நடத்தப்படவேண்டுமெனவும் செய லமர்வு வடி வமைக்கப்பட்டது.

அதிபர்களுக்கான அந்த செயலமர்வு வலயத்திலுள்ள 54 பாட சாலைகளில் 48 அதிபர்கள் வரு கை தந்திருந்தனர். நால்வர் தாம் தவிர்க்க முடியாத காரணங்களி னால் வரமுடியாமை அறிவித்து தமக்குப் பதிலாக தமது பிரதி அதிபர்களை அனுப்பி வைத்தனர். ஒரு பாடசாலை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை. அத்துடன் கோட்ட த்துக்குப் பொறுப்பான நான்கு உதவிக்கல்விப் பணிப்பாளர்களும் சமுகமளித் திருந்தனர்.

செயலமர்வின் ஆரம்பத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கியதோடு எந்தவோர் அமைப்பிற்கும் திட்டமிடல் அவசியம் என்பதையும் பாடசாலைகளில் திட்டமிடலின் தேவையையும் வலியுறுத்தினர். இந்தப் பணியில் அதிபர்கள் அதிக அக்கறை செலுத்த வேண்டுமெனவும் பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்ட வழிகாட்டல் குறிப்புக்களின் படி தயாரிக்கப்பட்ட பாடசாலை அபிவிருத்தி திட்டங்கள் கோட்டக்கல்வி பணிப்பாளர்கள் ஊடாக குறிப்பிட்ட தினத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டு மெனவும் அறிவுறுத்தப்பட்டது.

அடுத்துத் திட்டமிடலுக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர் கல்வித்துறை அபிவிருத்தித்திட்டம் பற்றி விளக்கியதோடு பாடசாலை மட்ட திட்டமிடல் எவ்வாறு நிறைவேற்றப்பட வேண்டும் என்பது பற்றியும் விபரித்தார். இதற்கமைய ஐந்து வருட உபாயத் திட்டத்தினையும் ஒரு வருடத்துக்கான அமுலாக்கல் திட்டத்தி னையும் பாடசாலைகள் தயாரித்தல் வேண்டும். இத் திட்டங்களும் அவற்றின் உள்ளடக்கமும் எவ்வாறு தயாரிக்கப்பட வேண் மென்பதையும் அவர் விளக்கினார்.

கல்வித் தர அபிவிருத்திக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் பாடசாலைகள் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதில் கூடிய அக்கறை காட்ட வேண்டுமெனக் குறிப்பிட்டார். கலைத்திட்டத்தின் ஊடாக கற்றல் அடைவினை மேம்படுத்தவும் இணைப் பாட விதானத்தினூடாக தேர்ச்சிகளை விருத்தி செய்யவும் பாடசாலைத் திட்டமிடல் எவ்வாறு பயன் படுத்தப்படலாம் என்பதை அவர் எடுத்துக்காட்டினார். பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டமும் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் அமுலாக்கப்படுவது இதற்குக் கணிசமான அளவு பங்களிப்பினைச் செய்யும்.

கணக்காளர் தமது உரை யின் போது பாடசாலைகளின் கணக்கு நடைமுறைகளில் காணப்பட்ட குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினார். பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாட சாலை அபிவிருத்தி சபைகளுக்கு சில நிதி அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன எனவும் நிதி முகாமைத்துவம் வெளிப்படையான தன்மையுடன் தத்தம் செயற்பாடுகளை நடத்த வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

மதிய போசனத்துக்குப் பிறகு செயலமர்வுக்கு சமுகமளித்த அதிபர்கள் தமது கருத்துக்களைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

அதிபர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூட்டப்பட்ட இக் கூட்டமானது மிகவும் பயனுள்ளதாக இருந்ததென மகாஜன கல்லூரி அதிபர் குறிப்பிட்டார். பல வருடங்களாக அவரது கல்லூரியில் பாடசாலை அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் பாடசாலை சமுதாயத்தினரால் வழங்கப்பட்ட ஆதரவு மிகவும் பாராட்டத்தக்கதெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அடுத்து,வட்டவளை வித்தியாலய அதிபர் தமது பாடசாலையில் பல குறைபாடுகள் இருப்பதாகவும் பாடசாலை அபிவிருத்தித் திட்டமொன்றினைத் தயாரிப்பதனால் மட்டும் பாடசாலையை அபிவிருத்தி செய்துவிட முடியாதெனவும் கூறினார்.மழை பெய்யும் நாட்களில் ஒரு கட்டடத்தின் கூரையிலிருந்து நீர் ஒழுகுவதாகவும் இருபக்கமும் சுவர்கள் இல்லாத திறந்த கட்டடத்தினுள் மழை பெய்யும் போது வகுப்புக்களுக்குள் மழைத்தூறல் அடிக்கப்படுவதால் கற்பித்தல் குழப்புவதாகவும் குறிப்பிட்டார்.பாடசாலைக்குப் போதிய தளபாடம் இல்லை. எவ்வளவுதான் அறிவுரை கூறினாலும் ஆசிரியர்கள் உச்ச அளவு லீவு எடுக்கின்றனர். அவர்கள் பாடசாலைக்குப் பிந்தி வருகின்றனர். பெற்றோர்களில் அதிகமானோர் வேலைக்குச் செல்வதால் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் அவர்களது வரவு மிகக் குறைவாகும். பாடசாலையில் போதியளவு கழிவறைகள் இல்லை.தற்போதுள்ள கழிவறைகளைச் சுத்தமாக்குவதற்கு கூடசுத்திகரிப்புத் தொழிலாளி ஒருவர் இல்லை எனக் கூறிய அதிபர் வலயக்கல்வி அலுவலகத்திற்கு இத்தேவைகளைச் சுட்டிக் காட்டி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ள போதிலும் எதுவும் நடைபெறவில்லை எனவும் கூறினார்.

இவ்வாறு அதிபர் கூற,சென்ற வருடத்தில் தர உள்ளீட்டு உதவியாக எவ்வளவு தொகை பாடசாலைக்குக் கிடைத்ததெனவும் அதில் எவ்வளவு தொகை பயன்படுத்தப்பட்டதெனவும் கணக்காளர் வினவினார்.சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளுக்கமைய பணத்தைச் செலவு செய்வதென்பது கஷ்டமான காரியமெனவும் தமக்குக் கிடைத்த ரூபா 150000 இல் மீதியாக 120000 வங்கிக் கணக்கில் உள்ளதெனவும் அதிபர் பதிலளித்தார்.அடுத்த வெள்ளிக்கிழமை மதிய வேளைக்குப் பின்னர் தம்மை வலயக் கல்வி அலுவலகத்தில் சந்திக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அதிபரிடம் கூறினார்.

அடுத்துப் பேசிய கிருஷ்ணபுர வித்தியாலய அதிபர் தமது பாடசாலை ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நன்றாக நடைபெறுவதாகவும் ஆசிரியர்களின் பங்களிப்பு மிகவும் பாராட்டுக்குரியதாகும் எனவும் குறிப்பிட்டார்.இது தொடர்பாக அலுவலர்களினதும் வெளியிலிருந்து வளவாளர்களினதும் உதவியை அவர் பெறுகிறார். இந் நிகழ்ச்சித் திட்டத்தினை தமது பாடசாலைக்கு வந்து அவதானி க்கும்படி அனைத்து அதிபர்களுக்கும் அழைப்பு விடுத்தார்.

கந்தவன வித்தியாலய அதிபர் தமது பாடசாலை 36 மாணவர்களைக் கொண்ட சிறிய ஆரம்பப் பாடசாலை எனக் குறிப்பிட்டார்.தம்முடன் சேர்த்து மூன்று பேர்தான் ஆசிரியர்கள் எனவும் ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு ஆசிரியர் வீதம் மேலும் இரு ஆசிரியர்களாவது குறைந்தது நியமிக்கப்பட வேண்டுமென அவர் வேண்டிக்கொண்டார்.

மேலும் பல அதிபர்கள் தமது பாடசாலையிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியதோடு இந்த செயலமர்வை ஒழுங்கு செய்வதற்காக வலயக்கல்விப் பணிப்பாளருக்கும் ஏனைய அலு வலர்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

01)

1.ஒரு பாடசாலை அபிவிருத்தித் திட்டமிடல் செயன்முறையில் அத்தியாவசியமாக உள்ளடக்கப்பட வேண்டிய படிமுறைகள் எவை?

2.திட்டமொன்றினைத் தயாரிக்கையில் சூழ்நிலைப் பகுப்பாய்வு (Situational Analysis) என்பதனால் கருதப்படுவது என்ன எனச் சுருக்கமாக விளக்குக?

3.பாடசாலை அபிவிருத்தித் திட்டமிடலில் அடங்கும் குறிக்கோள்களில் கட்டாயமாக இருக்க வேண்டிய பண்புகள் யாவை?

4.திட்டமொன்றின் கண்காணிப்புக்கும் மதிப்பீட்டுக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை விளக்குக?

5.திட்டமிடலில் பயன்படுத்தப்படும் பின்வரும் கருவிகள் பற்றி விளக்குக?

(அ)தர்க்கரீதியான திட்டவடிவ அணுகுமுறை(Logical Framework Approach)

(ஆ) கான் வரைபடம் (Gantt Chart)

(5x5=25 புள்ளிகள்)

02)

1.ஹிருவாவி கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் பாடசாலைத் திட்டமிடல் நிகழ்ச்சித் திட்டத்தினை வெற்றிகரமாக அமுலாக்க வலயக்கல்விப் பணிப்பாளர் பயன்படுத்தக்கூடிய மூன்று உபாயங்களைச் சுருக்கமாக விளக்குக.

(15புள்ளிகள்)

2.இந்தக் கூட்டத்தில் வலயக்கல்விப் பணிப்பாளரின் புத்தி சாதுரியத்தைப் புலப்படுத்திய ஒருசந்தர்ப்பத்தைத் தருக. உங்களின் இந்த முடிவிற்கான காரணங்களை விளக்குக.

(10புள்ளிகள்)

03).வட்டவளை வித்தியாலய அதிபராக நீங்கள் நியமிக்கப்பட்டால் பின்வருவன தொடர்பாக நீங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைச் சுருக்கமாக விளக்குக.

1.ஆசிரியர்கள் அதிக அளவு லீவு எடுத்தல்

2.பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டங்களில் பெற்றோரைப் பங்குபற்றச் செய்ய முடியாமை.

3.பாடசாலையின் கழிவறைகளைத் தூய்மையாக பராமரிக்க முடியாமை

4.மழைநாட்களில் பாடசாலைக் கட்டடங்களினுள்ளே மழை நீர் புகுவதனால் கற்பித்தல் நடவடிக்கைகளுக்குத் தடை ஏற்படுதல்

5.சுற்றறிக்கை பிரமாணங்களின் படி பண்புத்தர உள்ளீட்டு நிதியினைச் செலவிட முடியாமை

(5X5=25புள்ளிகள்)

04)

1.பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி என்ற எண்ணக் கருவினை விளக்குக.

(5புள்ளிகள்)

2.பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியினை மேம்படுத்தப் பயன்படுத்தக்கூடிய மூன்று உபாயங்களைச் சுருக்கமாக விளக்குக.

(10புள்ளிகள்)

3.கந்தவன ஆரம்பப் பாடசாலை அதிபராக நீங்கள் நியமிக்கப்பட்டால் ஆசிரியர் பற்றாக் குறை பிரச்சினைக்குத் தீர்வு காண எத்தகைய நடவடிக்கைகளை எடுப்பீர்கள் என விளக்குக.

(10புள்ளிகள்)

**ஆசிரிய வாண்மை அபிவிருத்தி நிறுவகம்**

# வெளிநாட்டவருக்கான சுகாதார சட்டம் மிகவும் கடுமையாக்கப்பட வேண்டும்

## அரச வைத்தியர் வலியுறுத்து

( கொழும்பு )

இந்தியா உட்பட தொற்று நோய்கள் அதிகம் உள்ள நாடுகள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ள நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் தொடர்பில் பின்பற்றப்பட்டு வரும் சுகாதார சட்ட திட்டங்கள் மிகவும் கடுமையாக்கப்பட வேண்டும் என அரச வைத்தியர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இலங்கையில் இல்லாமல் செய்யப்பட்டுள்ள சில தொற்று நோய்கள் மற்றும் புதிய வகை நோய்கள் இந்த சுற்றுலாப் பயணிகள் மூலம் மீண்டும் நாட்டுக்குள் பரவ காரணமாகின்றன.

மலேரியா நோய்க்குட்பட்ட இந்தியர் ஒருவர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் நுவரெலியாவில் இனங் காணப்பட்டார்.

இவருக்கு இந்தியாவிலிருந்தே இந்த நோய் ஏற்பட்டுள்ளமை பிறகு தெரிய வந்துள்ளது.

இவர் இந்தியாவிலிருந்து சுற்றுலா விசாவில் இலங்கை வந்துள்ளதாகவும், இவரது விசாக்காலம் முடிவடைந்த பின்னரும் இங்கு தங்கியிருந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

எமது அயல் நாடான இந்தியாவில் பல்வேறு வகையான தொற்று நோய்கள் காணப்படுகின்றன. இதனால், அங்கிருந்து வரும் சுற்றுலாப பயணிகள் தொடர்பில் மிக அவதானத்துடன் இருத்தல் வேணடும்எனவும்அச்சங்கம்மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ-5)

# மூன்று மாதங்களில் 146 இலங்கையர்கள் சுவிஸில் அடைக்கலம் கோரி விண்ணப்பம்

இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மாத் திரம், சுவிட்சர்லாந்தில் அடைக்கலம் கோரி, 146 இலங்கையர்கள் விண்ணப்பித்திருப்பதாக அந்த நாட்டின் குடியேற்றச் செயலகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை. கடந்த ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் முதல் காலாண்டில், சுவிஸில் அடைக்கலம் கோரியுள்ளவர்களின் எண்ணிக்கை, 45 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த ஆண்டின் முதல் காலாண்டில், 8315 பேர் சுவிஸில் அடைக்கலம் கோரி விண்ணப்பித்துள்ளனர். (இ-5)

# ராணி எலிசபெத்தின் காதல் கடிதம் ஏலம்



இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் காதல் கடிதம் ஏலத்தில் விடப்படவுள்ளது.

இங்கிலாந்து ராணி எலிசபெத். இவரது கணவர் இளவரசர் பிலிப் இவர்கள் இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டனர். திருமணத்துக்கு சில மாதங்களுக்கு முன்பு அவரது 'ராயல் வெட்டிங்' என்ற பெயரில் சுயசரிதை புத்தகம் எழுதிய பெட்டி ஸ்பென்சர் என்பவருக்கு ராணி எலிசபெத் ஒரு கடிதம் எழுதினார்.

இளவரசர் பிலிப்புடன் தனக்கு ஏற்பட்ட காதல் குறித்து அதில் குறிப்பிட்டிருந்தார். அந்த கடிதம் 2 பக்கங்களில் எழுதப்பட்டிருந்தது.

ராணி எலிசபெத் கடந்த 1942 ஆம் ஆண்டில் 21 வயதாக இருந்த போது இளவரசர் பிலிப்பை காதலித்து திருமணம் செய்து கொண்டார். அக்கடிதத்தில் இளவரசர் பிலிப்புடன் நடந்த சந்திப்புகள், கேளிக்கை விருந்துகளில் பங்கேற்றது மற்றும் சுவாரஷ்யமான உரையாடல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அக்கடிதம் அடுத்த வாரம் தென் கிழக்கு இங்கிலாந்தில் உள்ள வில்ட்ஷித் சிபன் காம் மையத்தில் ஏலம் விடப்படுகிறது. இது சுமார் ஒரு இலட்சத்து 25 ஆயிரத்துக்கு (1200 பவுண்டுகள்) ஏலம் போகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-5)

# பண்டிகைக் காலத்தில் சேவையில் ஈடுபட்டபோது மோசடி; இருபது பேருந்துகளின் அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

பண்டிகைக்கால சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 20 இற்கும் அதிகமான பேருந்துகளின் போக்குவரத்திற்கான அனுமதிப்பத்திரங்களை தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இத்தகைய பேருந்துகளுக்கு எதிர்காலத்தில் தற்காலிக போக்குவரத்து அனுமதிப் பத்திரங்கள் விநி யோகிக்கப்படமாட்டாதென ஆணைக்குழுவின் தலை வர் எம்.ஏ.பீ. ஹேமசந்திர தெரிவித்தார்.

பயண முடிவிடத்திற்கு அறவிடப்படும் கட்டணத்தை இடைநடுவில் இறங்கும் பயணிகளிடமும் அறவிட்டுள்ளமை குறித்து ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

இதுதொடர்பான முறைப்பாடுகள் குறித்து மேல்மாகாண போக்குவரத்து அதிகார சபையுடன் கலந்துரையாடியுள்ளதுடன், முறையற்ற கட்டண அறவீடுகள் குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளதாகவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

விசேட சேவையில் ஈடுபட்ட பேருந்துகளில் மேலதிக கட்டணம் அறவிட்டமை விசாரணைகளில் உறுதி செய்யப்படும் பட்சத்தில் அந்த பேருந்துகளின் போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தை மூன்று மாதங்களுக்கு இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பண்டிகைக்கால விசேட சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பேருந்துகளில் மேலதிக கட்டணம் அறவிடப்பட்டிருந்தால் அதுகுறித்து 1955 என்ற தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அவசர அழைப்பு இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறியத் தருமாறு பயணிகளிடம் கேட்கப்பட்டுள்ளது. (இ-5)

# இடைநிறுத்தப்பட்ட வரி அதிகரிப்பு மீண்டும் அமுலுக்கு வருகிறது

மே மாதம் 2ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் பெறுமதிசேர் வரி (VAT) 15% ஆக அதிகரிக்கப்பட உள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னதாக, கடந்த ஏப்ரல மாதம் முதலாம் எதிகதி முதல் 15வீதமாக அதிகரிக்கப்பட வற்வரி மறு அறிவித்தல் வரும் வரை இடைநிறுத்தப்படுவதாக உள்நாட்டு இறை வரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கல்யாணி தஹநாயக்க ஏபரல் முதலாம் திகதியன்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதன்படி மறு அறிவித்தல் வரும் வரை ஏற்கனவே இருந்தது போன்று 11 வீதமாக பெறுமதி சேர் வரி இருக்கும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில் இடை நிறுத்தப்பட்டிருந்த வற்வரி அதிகரிப்பு மீண்டும் மே மாதம் 2ம் திகதி முதல் 15வீத நடைமுறைக்கு வருமென்று நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த அதிகரிப்பானது சுகாதார துறை மற்றும் தொடர்பாடல் துறைகளுக்கும் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பாராளுமன்றில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெறுமதி சேர் வரியை 15 வீதமாக அதிகரிப்பதாக தெரிவித்தார். (இ-5)

# கோஷ்டி மோதலில் ஈடுபட்ட 10பேர் வைத்தியசாலையில்

(கரணவாய்)

வல்வெட்டித்துறைப்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமரபாகுப் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் 10 பேர் காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். அப் பகுதியில் உள்ள இருதரப்பினருக்கும் இடையேஏற்பட்ட பிரச்சினை கோஷ்டி மோதலாக மாறி இரவிரவாக இருதரப்பினரும் மோதிக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வல் வெட்டித்துறைப் பொலிஸாரினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.(இ-60)

# இராசி பலன்

16.04.2016

(சித்திரை 03, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

தசமி பின்னிரவு 3.19 மணிவரை

ஆயிலியம் முன்னிரவு 9.07 மணிவரை

சுபநேரம் 3.04-4.34 மணிவரை

இராகுகாலம் 9.04-10.34 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி புத | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூராடம், உத்தராடம் பகல் 4.18 இற்கு சிங்-சந் | | சந் |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நீண்ட நாட்களாக திட்டமிட்டிருந்த காரியம் இன்று கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**மேடம்** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**மிதுனம்** கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக்கொள்வீர்கள், சந்தித்த நண்பர்களால் சந்தோசங்கள் கூடும் நாள், திருமண முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கும்பம்** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவமொன்று நடைபெறலாம், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்** பயணங்களின் மூலம் சுப செய்திகளைப் பெறுவீர்கள், பிள்ளைகள் வழியில் சிறு விரயங்கள் ஏற்படலாம், நண்பர்களின் நன்மதிப்பைப் பெறுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**மகரம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்

**சிம்மம்** விருந்தினர்களின் வருகையால் சுப செலவுகள் ஏற்படலாம், வேலைச்சுமை அதிகரிக்கும் நாள், காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும்.

**தனுசு** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

**விருச்சிகம்** புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், விருந்தினர் வருகையுண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், திடீர் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உங்களின் செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கன்னி** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நீங்கள் தேடிச் செல்ல நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

# தமிழ் சினிமா வரலாறு

139

## எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடித்த "ராஜகுமாரி" அமோக வெற்றி

. . . அவர் காந்தி எழுதிய புத்தகங்களை கருணாநிதிக்கு பரிசளிப்பார். கருணாநிதி பெரியார் எழுதிய புத்தகங்களைக் கொடுப்பார்.

ராஜகுமாரி படம் வேகமாக வளர்ந்தது. எம். ஜி.ஆர்.மீது ஏ.எஸ். ஏ.சாமி வைத்த நம்பிக்கை வீண் போகவில்லை. சிறப்பாக நடித்தார். படத்தில் எம்.ஜி.ஆரும் டி.எஸ். பாலையாவும் போடும் கத்திச் சண்டை சிறப்பு அம்சமாக இருந்தது.

**தவமணிதேவி**

இந்தப்படத்தில் வில்லியாக நடித்தவர் இலங்கை குயில் தவமணிதேவி.

படப்பிடிப்புக்காக மேக்கப் போட்டுக் கொண்டு வந்து நின்ற தவமணிதேவியைப் பார்த்து டைரக்டர் உட்பட அனைவரும் அசந்து போனார்கள். மர்லின் மன்றோவை தோற்கடிக்கும் விதத்தில் கவர்ச்சியின் சிகரமாகத் தோன்றினார்.

ஜாக்கெட் போட்டிருந்தார். ஆனால் கடைசி பட்டன்களைத் தவிர மற்ற பட்டன்களைப் போடவில்லை!

இவ்வளவு கவர்ச்சி வேண்டாம் தாயே என்று கூறினார் ஏ.எஸ்.ஏ.சாமி.

கதாநாயகனை மயக்கும் விதத்தில் நடனம் ஆடுவதற்காகத் தானே வந்திருக்கிறேன். இப்படி இருந்தால் தான் இயற்கையாக இருக்கும் என்றார் தவமணி தேவி.

கடைசியில் டைரக்டரும் தவமணிதேவியும் கலந்துபேசி ஒரு சமரச உடன்பாட்டுக்கு வந்தனர். அதன்படி ஜாக்கெட்டுக்கு மத்தியில் ஒரு காகிதப்பூ சொருகப்பட்டது!

**எம்.எம்.மாரியப்பா**

இந்தப் படத்தில் எம்.ஜி.ஆருக்கு எம். எம்.மாரியப்பா பின்னணியில் பாடினார்.

எம்.ஜி.ஆருக்கு குரல் கொடுத்த முதல் பின்னணி பாடகர் இவர்தான்.

இப்படத்தில் எம். என்.நம்பியார் நகைச்சுவை வேடத்தில் நடித்தார்.

1947 ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி ராஜகுமாரி படம் ரீலிஸ் ஆகியது. படத்தில் எம்.ஜி.ஆரின் பெயர் எம்.ஜி.ராம்சந்தர்என்று டைட்டில் காட் டப்பட்டது. வசனம் உதவி என்று கருணாநிதி பெயர் இடம் பெற்றது.

படம் சுப்பர் ஹிட்டாக அமைந்தது. மக்கள் மத்தியில் எம். ஜி.ஆர். பிரபலமானார்.



**தந்தையின் மகிழ்ச்சி**

இந்தப்படம் வெளிவந்த போது கருணாநிதியின் தந்தை முத்துவேலரின் கண் ஒளி மங்கியிருந்தது. இருப்பினும் திருவாரூரில் ராஜகுமாரி ரிலீஸ் ஆன தியேட்டருக்குச் சென்று வசனங்களைக் கேட்டு மகிழ்ந்தார்.

இந்த நிகழ்ச்சி நடந்து சில நாட்களுக் குப்பின் அவர் காலமானார்.

1950 ஆம் ஆண்டு வெளிவந்த மருதநாட்டு இளவரசியைத் தொடர்ந்து வி.என். ஜானகியை வாழ்க்கைத் துணைவியாக எம்.ஜி.ஆர். ஏற்றார்.

ராஜகுமாரிக்குப் பிறகு அபிமன்யு என்ற படத்தை ஜூபிடர் பிக்சர்சார் தயாரித்தனர். இந்தப் படத்தில் எஸ்.எம். குமரசேனும் அவருடைய ஜோடியாக யு.ஆர். ஜீவரத்தினமும் நடித்தனர்.

(தொடரும்)

# இந்திய மீனவர்கள் 24 பேர் பாக். படையினரால் கைது

குஜராத் மாநிலம், ஜகாவ கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் 24 பேரை பாகிஸ்தான் கடலோர பாதுகாப்புப் படையினர் நேற்று முன் தினம் கைது செய்தனர்.

இது தொடர்பாக தேசிய மீனவர்கள் கூட்டமைபபின் செயலர் மணீஷ் லோதாரி, ஆமதாபாதில் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

குஜராத் மாநிலம் போர்பந்தர், ஓகா ஆகிய கடலோர நகரங்களைச் சேர்ந்த மீனவர்கள் 24 பேர், சர்வதேச கடல் எல்லைப் பகுதியானஜகாவுக்குஅருகேநேற்று முனதினம் வியா ழக்கிழமை மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பாகிஸ்தான் கடலோர பாதுகாப்பு படையி னர், 24 மீனவர்களையும் கைது செய்து கராச்சி துறை முகத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அத்துடன் மீனவர்களின் 4 விசைப் ளையும் அவர்கள பறிமுதல்செய்தனர் என்று மணீஷ லோதாரி தெரிவித்தார்.

சர்வதேச கடல் எல்லைப் பகுதியில் மீன்பிடித்ததாகக் கூறி, கடந்த 3 மாதங்களில் இந்திய மீனவர்கள் 191 பேரை பாகிஸ்தான் கடலோர பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர் என்பதும், அவர்களில் 172 பேர் அண்மையில் விடுதலை செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பாகிஸ்தானில் 7 பொலிஸாரை சுட்டுக் கொன்ற தீவிரவாதிகள்

## 22 பேரை சிறை பிடித்தனர்

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் ரஞ்சன்பூர் மாவட்டத்தில் ஒரு தீவு பகுதியில் 'கோட்டு' தீவிரவாத அமைப்பினர் கைப் பற்றி அதை மறைவிடமாக பயனபடுத்தி வந்தனர். அதை அரசின் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வர அதிரடி தாக்குதல் நடத்தப்ப ட்டது. அதில ராணுவம், பொலிஸ் என 1,600 பேர் ஈடுபடுத்தப்பட டனர். அதை தொடர்ந்து இரு தரப்புக்கும் இடையே நேற்று முன்தினம் இரவு கடும் துப்பாக்கி சண்டை நடந்தது. அதில் 13 பேர் பலியாகினர். அவர்களில் 7 பேர் பொலிஸ்காரர்கள்.

அவர்களில் பெரும் பாலானவர்கள் அதிரடிப் படை கமாண்டர்கள் ஆவர். இவர்கள் தவிர 22 பேரை "கோட்டு" தீவிரவாதிகள் பணைக் கைதிகளாக பிடிததனர். அவர்களை மீட்கும் நடவடிக்கையில் ராணுவம் ஈடுபட்டுள்ளது. (இ-5)

# சட்டமன்ற தேர்தலில் போட்டியிடவில்லை

## ஜி.கே.வாசன் திடீர் அறிவிப்பு

எதிர்வரும் சட்டமன்ற தேர்தலில் போட்டியிடவில்லை என த.மா.கா. கட்சி தலைவர ஜி.கே.வாசன் திடீர் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

தமிழ் மாநில காங்கிர ஸை தொடங்கி முதன் முத லாக சட்டமன்ற தேர்தலை சந்திக்க இருந்த ஜி.கே.வாசன அதிமுக கூட்டணியில் இடம் பெற கடந்த 2 மாதங்களாக போராடி வந்துள்ளார்.

ஆனால், அதிமுக கூட்டணியில் போட்டியிட்டால் இரட்டை இலையில் தான் நிற்க வேண்டும் என நிரப்பந்தம் அளிக்கப்பட்டதால் அவர் கூட்டணி அமைக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

இதன் பிறகு, மக்கள் நலக் கூட்டணியின் அழைப்பை ஏற்ற ஜி.கே.வாசன் கடந்த வாரம் தேமுதிக மக்கள் நலக் கூட்டணியில் த.மா.கா.கட்சியை அதிகாரபூர்வமாக இணைத்துக் கொண்டார்.

பன்னர், தேமுதிக மக்கள நலக் கூட்டணியில் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சிக்கு 26 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன.

முதல் முறையாக சட்டமன்ற தேர்தலில் போட்டி யிடும் தமிழ் மாநில காங்கிரஸ் இந்த தேர்தலில் அதிக தொகுதிகளில் வெற்றி பெறும் என எதிர்ப் பார்ப்புகள் உள்ளன.

இந்நிலையில், நேற்று திடீரென தேர்தலில் போட்டியி டப் போவதில்லை என ஜி.கே.வாசன் அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

தேர்தலில் போட்டியிடாததற்கு என்ன காரணம் என ஜி.கே.வாசன் எந்த தகவலையும வெளியிடவில்லை.

ஆனால், தேமுதிக மக்கள்நலக்கூட்டணியில் இணைந்த பிறகு தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டதால் தேர்தலில் தனக்கு வாக்கு எண்ணிக்கை குறைய நேரிடுமோ என்ற சந்தேகத்தில் ஜி.கே.வாசன் போட்டியிடவில்லையா என்ற கேள்வி பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஜெயலலிதா மீண்டும் சிறை செல்வது உறுதி

## சுப்பிரமணியம் சுவாமி விடாப்பிடி



தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீதான சொத துக் குவிப்பு மேல் முறையீட்டு வழக்கில், அடுத்த மாதம் 10ஆம் திகதிக்குள் உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பு வநது விடும் என்றும், ஜெயலலிதா மீண்டும் சிறை செல்வது உறுதி என்றும் பாரதிய ஜனதா மூத்ததலைவர் சுபபிரமணியன சுவாமி தெரிவித்துள்ளார்.

டில்லியில் செய்தி யாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் ஜிகாதி தீவிரவாத அமைப்புகள் அதிகரித்து விட்டதாகவும், அவ ற்றை ஒடுக்குவதில் மாநில அரசு தவறிவிட்டதாகவும் குற்றம் சாட்டினார். இந்த விடயத்தில், திமுகவுக்கும் அதிமுகவுக்கும்எவ்வித வித்தியாசமுமில்லை என்றும் சுப்பிரமணியன் சுவாமி குற்றஞ்சாட்டினார். (இ-5)

உன்மனதில் நல்ல எண்ணங்கள் உதிக்க வேண்டுமா? தீய எண்ணங்கள் உதிக்க வேண்டுமா? உன் வீணையை மீட்டுவது உன்விருப்பமே.

– லாண்டார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii.lk

# எங்கள் இளைஞர்களை குறை கூறுவது நியாயமா?

புத்தாண்டின் பிறப்பை ஒட்டி நேற்று முன்தினம் இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து பட்டிமன்ற நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் முத்திரைச் சந்திப் பகுதியில் அமைந்துள்ள சங்கிலியன் தோப்பு வெளியரங்கில் நடைபெற்ற இப்பட்டிமன்ற நிகழ்வுக்கு இந்தியாவில் இருந்துபட்டிமன்றப் பேச்சாளர்கள் ராஜா, திருமதி பாரதி பாஸ்கர் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

பட்டிமன்றத்தை பார்ப்பதற்கு ஏகப்பட்ட மக்கள் குழுமியிருந்தமைதான் இங்கு கவனத்துக்குரிய விடயம். அதிலும் இளைஞர்களே அதிகம் என்பது மிகவும் கவனத்துக்குரியது.

இதற்கு மேலாக பட்டிமன்றத்தை பார்ப்பதற்காக வந்தவர்கள் பட்டிமன்றத்தில் பேசப்பட்ட விடயங்களை மிகவும் உன்னிப்பாக செவிமடுத் தமை தமிழகத்தில் இருந்து வந்த பேச்சாளர்களை ஆச்சரியப்படுத்தியது. இந்த ஆச்சரியம் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளுக்கும் விலக்கல்ல,

இந்த வகையில் இப்படி ஒரு ஏற்பாட்டைச் செய்த இந்தியத் துணைத் தூதுவர் ஆர்.நடராஜன் அவர்க ளும் அவர்சார்ந்த உத்தியோகத்தர்களதும் முயற் சிக்குப் பெருவெற்றி கிடைத்தது எனலாம்.

இவற்றின் மத்தியில் நாம் சொல்வதெல்லாம் எங்கள் மண்ணுக்கு இப்படியான நிகழ்வுகள், கலை வெளிப்படுத்தல்கள் தேவை என்பதுதான்.

எந்தக் கலை நிகழ்வும் இல்லாத ஒரு சூழ்நிலையில்–திறமைகளை வெளிப்படுத்துவதற்கான களங்கள் அமையாத கட்டத்தில் எங்கள் இளைஞர்களின் போக்குகள் திசைமாறும் என்பதை எவரும் மறுத்துரைக்க முடியாது.

எங்கள் இளைஞர்களுக்கான வழிப்படுத்தலை; ஆற்றுப்படுத்தலை; அறிவுரைத்தலை நாம் செய்து கொடுக்காமல் விட்டு விட்டு அவர்கள் பாதை மாறிச் செல்கின்றனர் எனக் குற்றம் சாட்டுவது எந்த வகையிலும் நியாயமாகாது.

பொதுவில் இளைஞர்களை, மாணவர்களை வழிப்படுத்துவதென்பது இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் ஊடாகவே இடம்பெற வேண்டும். அதுவே நல்ல ஊடகமாக இருக்க முடியும்.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ்த்திறன் எங்கள் இளைஞர்களை வெகுவாக ஈர்க்கக்கூடியது. இதற்குக் காரணம் எங்கள் இளைஞர்கள் அறிவுத்தேடல் மிக்கவர்கள். எதையும் வாதப்பிரதிவாதம் செய்து அதில் இருந்து ஒரு பொதுவான கருத்து நிலைக்கு வரக்கூடியவர்கள்.

இதனால்தான் யாழ்ப்பாண மண் என்று பொதுவில் கூறப்படும் ஒட்டுமொத்த தமிழர் தாயகமும் அறி வுடைப் பூமியாகப் போற்றப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில்தான் மேன்மைத்தமிழ் உள்ளது என்று தமிழகத்துப் பட்டிமன்றப் பேச்சாளர்கள் கூறியபோது பார்வையாளர்கள் மத்தியில் இருந்து எழுந்த கர்கோஷம் எங்கள் இளைஞர்களுக்கு எத் துணை பெருமையைக் கொடுத்தது.

இதுபோன்ற கலை நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி வடக்குக் கிழக்கு எங்கும் நடைபெற வேண்டும். இதன்மூலம் எங்கள் இளம் சமூகத்துக்கு நிறைந்த அறிவியல் கருத்துக்களும் ஆன்மீக சிந் தனைகளும் ஊட்டப்படும். இஃது எங்கள் இளை ஞர்களை நிச்சயம் வழிப்படுத்தும் இப்பணியை தொடர்ந்து செய்வதற்கு அகில இலங்கை கம்பன் கழகம், இந்தியத்துணைத் தூதரகம் மற்றும் கலைத்துவப் பணி செய்யும் அமைப்புகள் முன்வர வேண்டும். இவ்வாறான முன்வருகை எங்கள் மண்ணில் மிகப்பெரிய தொரு சிந்தனை எழுச்சியை உருவாக்கும் என்பது சர்வநிச்சயம். இதற்கு மேற்குறித்த நிகழ்வில் எங்கள் இளைஞர்கள் நடத்திய மங்கள வேள்வி சாட்சியமாகும்.

# சிங்கப்பூரில் திடீரென தரையிறக்கப்பட்டு ஸ்ரீலங்கன் விமானம் மீது சோதனை!

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் இருந்து இலங்கை நோக்கி புறப்பட்டு சிறிது நேரத்தில் மீண்டும் சிங்கப்பூர் ஷேங்கி சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமானம். மீண்டும் நேற்று அதிகாலை இலங்கையை வந்தடைந்துள்ளது.

யுஎல்309என்றஇலங்கை விமான சேவைக்கு சொந்தமான விமானம் நேற்று சிங்கப்பூர் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு சற்று நேரத்தில் தரையிறக்கப்பட்டது.

விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் வழங்கிய பாதுகாப்பு தொடர்பான எச்சரிக்கை அறிவிப்பை அடுத்தே விமானம் தரையிறக்கப்பட்டது.

விமானம் தரையிறக்கப்பட்ட பின்னர், சில பயணிகளிடம் சிங்கப்பூர் பொலிஸாரும், விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளும் விரிவான விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

இவர்களில் 5 பேர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் கூறியுள்ளது.

விமானத்தில் இருந்து அனைத்து பொதிகளும் இறக்கப்பட்டு மீண்டும் சோதனையிடப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் விமானம் ஒன்று விமான நிலையம் ஒன்றில் இருந்து புறப்படும் முன்னர், முழுமையாக சோதனையிடப்பட வேண்டும் என்று சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை ஒன்று இருப்பதாக ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில், விமானம் புறப்பட்டு சற்று நேரத்தில் தரையிறக்கப்பட்டு சோதனையிடப்பட்டமை தொடர்பில் சிங்கப்பூர் சிவில் விமான சேவை அதிகார சபையிடம் விளக்கம் கோரப்படும் எனவும் நிறுவனம் கூறியுள்ளது. (செ-12)

# பிரச்சினைகளை பேசித்தீர்ப்போம்

(கொழும்பு)

கடந்த வருடத்தில் இலங்கையினுள் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளதாக அமெரிக்கா வெளியிடப்பட்டுள்ள அறிக்கை தொடர்பான பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள முடியும் என நீதி இராஜாங்க அமைச்சர் லஷ்மன் யாபா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது அவர் இதனை தெரிவித்திருந்தார். (செ-12)

# மாட்டுவண்டி சவாரிப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

தமிழ் சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் விளையாட்டுத்திணைக்களமும் இணைந்து நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்தவிருந்த மாபெரும் மாட்டுவண்டிசவாரிப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

புதுவருடத்தினத்தை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை சரசாலை மாட்டு வண்டிச்சவாரித்திடலில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவிருந்த மாபெரும் மாட்டு வண்டிச்சவாரியில் பங்குபெறவிரும்புவோர் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என அறிவித்திருந்த நிலையிலேயே நேற்றைய தினம் மேற்குறித்த அறிவித்தலை செயலாளர் விடுத்துள்ளதுடன் குறித்த சவாரி இடம்பெறும் தினத்தை பிறிதொருநாளில் அறிவிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் எதிர்வரும் 19ஆம் திகதி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகமைதானத்தில் நடைபெறவிருந்தவிளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்வுகள் முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டதற்கமைய காலை 9 மணி தொடக்கம் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-9)

# மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும்தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து யாழ் பிரதேசத்தில மட்டுவில், சரசாலை, கல்வயல், தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி, சிவன் அம்மன் வீதி, கந்தர்மடம், இலுப்பையடி சந்தி, பருத்தித்துறை வீதியில் நாக விகாரையில் இருந்து பாரதியார் சிலை வரை, விக்ரோறியார் வீதி, மின்சார நிலைய வீதியில் ஒரு பகுதி, புகையிரத நிலையப் பிரதேசம், மார்டின் வீதி, யாழ் 2, 3,4ஆம் குறுக்கு தெருக்கள், ஸ்ரான்லி வீதியில் புகையிரதக் கடவையிலிருந்து இராசாவின் தோட்ட வீதி வரை, அம்பலவாணர் வீதி, அன்னசத்திர வீதி, ஆஸபத்திரி வீதியில் வேம்படி சந்தியிலிருந்து மார்டின் வீதி வரை, ஸ்ரான்லி வீதியில் ஆரியகுளத்திலிருந்து முட்டாசுக்கடை சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதியில் ஒரு பகுதி, நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆண்கள் விடுதி, டம்றோ பலாலி வீதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, AVNOR பிறைவேற் லிமிற்ரெட், மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** இரணை மடு, திருவையாறு, முறிகணடி, மத்தியவங்கி, இரணைமடு விசேட அதிரடிப்படை இராணுவ முகாம், MAS Active, யுனிச்செலா, பொறியியல் பீடம், விவசாயபீடம், North Cargill's Agri foods, 651 ஆவது படைப்பிரிவு முகாம், 652ஆவது படைப்பிரிவு முகாம், இராணுவ பாசறை I, இராணுவபாசறை II, இராணுவ பாசறை, 7வது படையணி இராணுவ முகாம ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# பனாமா ஆவணக் கசிவால் அமைச்சர் இராஜினாமா

(கொழும்பு)

வெளிநாட்டில் முறைகேடாக பணம் பதுக்கியுள்ளதாக எழுந்த குற்றச்சாட்டையடுத்து ஸ்பெயின் நாட்டின் தொழில்துறை அமைச்சர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

சர்வதேச புலனாய்வு செய்தியாளர்கள் கூட்டமைப்பின் 100 செய்தியாளர்கள் கடந்த சில ஆண்டுகளாக உலக நாடுகளின் பிரபல அரசியல் தலைவர்கள், விளையாட்டு வீரர்கள், தொழில் அதிபர்கள் முறைகேடான வழியில் பனாமா நாட்டு வங்கிகளிலும், தொழில நிறுவனங்களிலும் பதுக்கிய சொத்து மற்றும் பணம் பற்றி இரகசியமாக தகவல்களை திரட்டி வந்தனர்.

இந்த தகவல்களை ஆதாரத்துடன் ஜேர்மனி நாளிதழ் ஒன்று பனாமா ஆவணங்கள் என்ற பெயரில் வெளியிட்டு உலக அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதில் சுமார் ஒரு கோடியே 15 இலட்சம் தகவல்கள் திரட்டப்பட்டு, வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த பட்டியலில் இடம்பிடித்துள்ள ஸ்பெயின் நாட்டின் தொழில்துறை அமைச்சர்ஜோஸ்மானுவேல் சொரியா, நேற்று தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். இங்கிலாந்துக்கு சொந்தமான ஜெர்சி தீவில் தனது சகோதரரின் தொழிலில் முதலீடு செய்த தனமூலம் ஏராளமாக பணம பதுக்கி வைத்திருந்ததாக கூறப்படும் குற்றச்சாட்டை மறுத்துள்ள ஜோஸ் மானுவேல் சொரியா, காபந்து அரசாக விளங்கிவரும் அரசுக்கு தன்னால் அவப்பெயர் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக நிருபர்களிடம் தெரிவித்துள்ளார். (இ-5)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



நாம் பல பொருட்களைப் பற்றி கிளியைப் போல் பேசுகிறோம். ஆனால் செயலாக்குவதில்லை. சொல்வதும் செய்யாதிருப்பதும் நமக்கு வழக்கமாகிவிட்டன. இதன் காரணம் என்ன, உடல் பலவீனம். இவ்வித பலமற்ற மூளையால் ஒன்றையும் செய்ய இயலாது. நாம் அதைப் பலப்படுத்த வேண்டும். முதன்முதலில் நமது இளைஞர்கள் ஆற்றல் மிக்கவர்களாக வேண்டும். ஞானம் பின்னால் வரும். கீதையைப் படிப்பதன்மூலம் கிடைப்படை விட காற்பந்தாட்டத்தால் அதிகமாக சொர்க்கத்தை நெருங்கமுடியும். கைத்தசையும் பிற தசையும் வலிமை மிகுந்தால் கீதையை முன்னைவிட நன்றாக உங்களால் அறியமுடியும். உமது இரத்தத்தில் ஒரு சிறிது பலம் கூடுவதால் கண்ணபிரானது அறிவாற்றலையும் முன்னைவிட நன்கு அறியலாம். உங்கள் உடல் உறுதி பெற்று உள்ளே ஆண்மை உணர்ச்சி கிளரும்போது உபநிடதங்களின் பொருளையும் ஆன்மாவின் பெருமையையும் முன்வைிட நன்கு அறியலாம்.

விரிவடைய முயலுங்கள், உயிருக்குஒரே அறிகுறி. அசைவே, வளர்ச்சியே என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

# திருநெல்வேலி சி.சி. அணி

## கீழ் பிரிவு இறுதிப்போட்டிக்கு தெரிவு



கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணத்திற்காக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் 1991 ஆம் ஆண்டிலிருந்து 24 வருடங்களாக நடத்தி வரும் 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் 4 ஆவது கால் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடை பெற்றது.

இப்போட்டியில் திருநெல்வேலி சி.சி.அணி, கிறாஸ்கொப்பர்ஸ் அணியை 6 இலக்குகளால் வெற்றி பெற்று கீழ்ப்பிரிவு இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பாட்டத்தில் களமிறங்கிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 28 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 173 ஓட்டங்களை பெற்றது. மதூஸன்-15, காந்தசீலன்-67, கோகுலதாஸ்-30, ரசிகரன் ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களைபெற்றனர்.

களத்தடுப்பில் களமிறங்கிய திருநெல்வேலி சி.சி. அணி சார்பாக சுரேந்திரன்-02, சதீஸ்-02, விதுன்-04, சுரேஸ்-01 இலக்கினை கைப்பற்றினர். பதிலுக்கு களமிறங்கிய திருநெல்வேலி சி.சி. அணிசார்பாக அசோக்- 10, லவகாந்-58, சுரேஸ்-33, சிவராஜ் ஆட்டமிழக்காது 46 ஓட்டங்களை பெற்றனர். மதூஸன், கபில், அஜித், யசிந்தன் தலா ஒரு விக்கெட்டினை கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற திருநெல்வேலி சி.சி.அணி 17.04.16 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற இருக்கும் கீழ்ப் பிரிவு இறுதிப்போட்டியில் சென்றலைட்ஸ் அணியை எதிர்கொள்வர். இப்போட்டியில் சென்றலைட்ஸ் அணியை எதிர்கொள்வர். இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 7வருடங்களாக நடத்திவரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித்தெரிவு நிகழ்விற்கு (தர வரிசை பட்டியல்) கிறாஸ்கொப்பர்ஸ் அணி 2.12 புள்ளிகளையும் திருநெல்வேலி சி.சி.அணி 6.33 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன. (க)

## கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணம்-2016 மேற்பிரிவு இறுதிப்போட்டி நாளை







கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணத்திற்காக கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் கிரிக்கெட் போட்டியின் மேற்பிரிவுஇறுதிப்போட்டிநாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கே.சி.சி.சி. அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஸ் அணி மோதவுள்ளது.

இப்போட்டியில் வெற்றி பெறும் அணியும் தோல்வி பெறும் அணியும் தொடரின் அரையிறுதியில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)


சித்திரை புத்தாண்டை முன்னிட்டு

# முல்லை.செந்தமிழ் வி.கழக உதைபந்து சுற்றுப் போட்டி

## செம்மலை உதய சூரியன் சம்பியன்







சிங்கள தமிழ் சித்திரைத் புத்தாண்டை முன்னிட்டு முல்லைத்தீவு வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக்கழகத்தினரால்நடத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் வியாழக்கிழமை (2016.04.14) செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் செம்மலை உதய சூரியன் விளையாட்டுக்கழகமும் செல்வ புரம்சந்திரன் விளையாட்டுக்கழகமும்மோதியதில் செம்மலை உதய சூரியன் விளையாட்டுக்கழகம் 1:0 என்ற வகையில் கோல்களைப் போட்டு வெற்றிக்கிண்ணத்தை தட்டிக் கொண்டது. இரண்டாம் இடத்தை செல்வ புரம் சந்திரன் விளையாட் டுக்கழகம் பெற்றுக்கொண்டது. (க)

# வடக்கு இராணுவ சூழலை குறைக்க இராணுவத்தினருடன் பேசத்தேவையில்லை

## ஜனாதிபதி, பிரதமர் முடிவிலேயே தீர்வுள்ளது - சுரேஷ்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் ஏற்பட்டுள்ள இராணுவ மயப்படுத்தப்பட்ட சூழ்நிலை தொடர்பில் யாரும் இராணுவத்தைச் சந்தித்து பேசவேண்டிய அவசியம் இல்லை.

இங்கு காணப்படுவது அரசியல் பிரச்சினை, இதனை ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ தான் தீர்க்க முடியும்.

அரசாங்கம் தீர்மானித்தால் இராணுவத்தை இங்கிருந்து வெளியேற்ற முடியும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று மதியம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கில் தற்போது என்றும் இல்லாதவாறு கைதுகள், பௌத்த கோவில்கள் அமைப்பு, சிங்கள குடியேற்றங்கள் அதிகரித்து காணப்படுகின்றது.

இதன்மூலம் தமிழ் மக்களது இனப்பரம்பல் முழுமையாக அழிப்பதற்கான திட்டங்கள் அரங்கேற்றப்படுகின்றன.

ஒரு பக்கம் தேசிய இனப்பிரச்சினையை தீர்க்க போகின்றோம், நல்லிணக்கம் என்றெல்லாம் கூறிக்கொண்டு மறுபக்கம் காணி அபகரிப்பு, சிங்கள மயமாக்கல், பௌத்த மயமாக்கல், முன்னாள் போராளிகள் மீண்டும் கைதுகள் என தமிழ் மக்களுக்கு எதிரான அனைத்தையும் சத்தமில்லாமல் செய்து வருகின்றது.

கடந்த ஆட்சியில் சிவில் நிர்வாகத்தில் இராணுவ தலையீடுகள் இருந்ததை போன்றே தற்போதும் காட்டாட்சி தொடர்கின்றது.

இதனை தான் முல்லைத்தீவில் கிராம சேவகர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் காட்டுகின்றது.

இவை எல்லாம் இராணுவ ஆட்சி நடப்பதையே எடுத்துக் காட்டுகின்றது. தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டி இராணுவம் இங்கு நிலை கொண்டுள்ளது.

வடக்கின் பொருளாதாரம் மற்றும் மதத்தினை சிதைப்பதற்கான நோக்கத்திற்காகவே இராணுவம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு என்றால் என்ன? இலங்கை மீது இன்னொரு நாடு படையெடுத்து வரப்போகின்றதா? பின்பு என்ன தேசிய பாதுகாப்பு?



தேசிய பாதுகாப்பிற்கு பிழையான அர்த்தம் கற்பிக்கப்படுகின்றது.

தேசிய பாதுகாப்பை காரணம் காட்டி நிலை கொள்ளச் செய்யப்படுகின்ற பாதுகாப்புத் தரப்பினர் இங்குள்ள எமது மக்களது அடையாளங்களை சிதைப்பதற்கும் எமது மக்கள் மீது மீண்டும் ஒரு வலிந்த யுத்தத்தை தொடர்வதற்குமே முயற்சி வருகின்றனர்.

நுணாவிலில் முன்னாள் போராளி ஒருவர் யாரென்று தெரியாதோர்களால் கடத்தப்படுகின்றார். பின்னர் தான் கூறுகின்றனர் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்ததாக, தற்போது அவசரகால சட்டம் ஒன்றும் இல்லை.

ஏன் இவர்கள் நீதிமன்றம் ஊடக இதனை அணுகவில்லை. இவர்கள் மீண்டும் எம்மை அடககி ஆள பார்க்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சி தலைவர் பதவியை கொண்டுள்ளது, மாவட்ட அபிவிருத்தி பதவிகளையும் கொண்டுள்ளது.

இன்னும் சில அரச பதவிகளையும் கொண்டுள்ளனர். இந்த பதவிகளால் தமிழ் மக்களுக்கு செய்த சேவைகள் என்ன? இந்த பதவிகளால் தற்போது இடம்பெறும் காணி அபகரிப்பு, கடத்தல் மற்றும் சிங்கள மயமாக்கலை தடுத்து நிறுத்த முடிகின்றதா? ஒன்றுமே செய்ய இயலவில்லை.

இந்த நிலையில் இவ்வாறான பதவிகள் எதற்கு? என காட்டமாக அவர் தெரிவித்தார். மேலும் தற்போது உள்ள யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத்தளபதி ஓரளவு நல்லவராக உள்ளார். அவருடன் கதைத்து பார்க்கலாமே என ஒரு கொழும்பு ஊடகவியலாளர் இதன் போது கருத்து தெரிவித்தார்.

இதனை மறுத்த சுரேஷ் பிரேமச்சந்திரன், இது தொடர்பில் இராணுவத்தைச் சந்தித்து பேச வேண்டிய தேவை இல்லை. இது அரசியல் பிரச்சினை. அரசில் உள்ளவர்கள் நினைத்தால் இங்குள்ள இராணுவத்தை குறைத்து கொளள முடியும்.

வடக்கில் இந்த எண்ணிக்கையில் இராணுவம் தேவை என நினைத்தால் அதனை அரசால் செய்ய முடியும். மாறாக இராணுவத்தோடு இராணுவத்தை குறைக்குமாறும் அவர்களோடு பேச வேண்டிய தேவை இல்லை என்றார் அவர். (செ-4)

### கிளிநொச்சி...

வுடன் முச்சக்கர வண்டி சாரதி உட்பட இவரை நேற்று இரவு 7.30 மணியளவில் உருத்திரபுரம் எள்ளுக்காடு பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர்.

உருத்திரபுரம் எள்ளுக்காடு பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட 29 வயதான சந்தேக நபரிடமிருந்து 805 கிராம் கஞ்சா பொதி மற்றும் 2 கிலோ 55 கிராம் கஞ்சா பொதி ஆகிய இரண்டு பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

பொலிஸாரின் முதலாம் கட்ட விசாரணைகளில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பை சேர்ந்த 29 வயதான நபர் மற்றும் உருத்திரபுரம் கிளிநொச்சியை சேர்ந்த முச்சக்கர வண்டி சாரதி எனவும் தெரியவருவதோடு பிரதான சந்தேக நபரான முதலாவது நபருக்கு கஞ்சா தொடர்பான முறைப்பாடுகள் யாழ் பொலிஸ்நிலையத்திலும் இருபதாகவும் தெரிய வருகிறது

இந்நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை அண்மைக்காலமாக இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் அதிகளவான இளைஞர்கள் கஞ்சா கடத்தலில் ஈடுபட்டு பின்னர் பொலிஸார் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். குறிப்பாக நேற்றுக் காலையும் கிளிநொச்சி கிருஸ்ணபுரம் பகுதியிலும் இரண்டு இளைஞர்கள் 10 கிராம் கேரள கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-12)


### மரண அறிவித்தல்



திருமதி

**தியாகராஜா சரஸ்வதி**

ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா சரஸ்வதி அவர்கள் நேற்று (15.04.2016) இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2016) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்லுண்டாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை. (C-4218)

தகவல் :
குடும்பத்தினர்


### யாழ்.மண் சாதாரண மண்ணல்ல...

என இந்தியத் துணைத் தூதுவர் ஆர்.நடராஜன் தெரிவித்துள்ளார்.

சுதந்திர இந்தியாவில் சட்டம் மற்றும் நீதித்துறைக்கான முதலாவது அமைச்சர் கலாநிதி பி.ஆர். அம்பேத்கார் அவர்களது 125 ஆவது பிறந்த தினத்தினையும், தமிழ் சித்திரைபபுத்தாண்டை கொணடாடும் முகமாகவும் யாழ். இந்திய துணைத்தூதரகம் மற்றும் வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற புத்தாண்டு பட்டிமன்ற நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். நல்லூர் சங்கிலியன் தோப்பில் யாழ். இந்திய துணைத் தூதுவர் ஆர்.நடராஜன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், புகழ்பூத்த இலக்கிய வாதிகளையும் சமயப் பெரியார்களையும் தன்னகத்தே என்றும் கொண்டிருக்கின்ற யாழ்.மண்ணை நாங்கள் என்றைக்கும் போற்றுகிறோம்.

எமக்கிடையே நீண்டதொரு தொப்புள்கொடி உறவு காணப்படுகிறது.

அந்த தொப்புள் கொடி உறவுதான் நாம் பேசும் தாய் மொழி நம் தமிழ்மொழி. அந்த வகையில் நாங்கள் தமிழர்கள் என்று சொல்லிக்கொள்வதில் தலைநிமிர்ந்த பெருமையடைய வேண்டும்.

எங்கள் நாட்டிலுள்ளவர்கள் பேசும் தாய்மொழி தமிழை விட பிழையின்றி உச்சரிக்க கூடியவர்கள் யாழ்ப்பாணத் தமிழர்கள் மட்டுமே என இந்தியத் துணைத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த இந்தப் பட்டிமன்ற நிகழ்வின் போது இந்தியாவில் இருந்து வருகை தந்த புகழ்பூத்த பட்டிமன்ற பேச்சாளர்களான ராஜா மற்றும் திருமதி பாரதி பாஸ்கர் ஆகியோர் நடுவர்களாக பங்குபற்றியிருந்தனர். (செ-12)

### இலங்கையில் மனித உரிமை...

நாட்டுக்குள் ஒரே நாளில் ஒன்றான ஒரு பண்டிகையை கொண்டாடி மகிழ்வது உறுதியான பிணைப்பை தொடரவாய்ப்பளிக்கும்.

இலங்கையின் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் தற்போது அடைந்திருக்கும் குறிப்பிடத்தக்க விருத்தியை நான் அறிந்து கொண்டு வருகின்றேன்.

மேலும் பாதிக்கப்பட்ட சமூக மக்கள் தமது வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளும் வகையிலானபொறிமுறைகளும் அங்கு அமைக்கப்பட வேண்டும் என தனது வாழ்த்துச் செய்தியில் பிரிட்டன் பிரதமர் தெரிவித்துள்ளார். (செ-12)

### அதிக வெப்பத்...

முல்லைத்தீவு கடற்கரை சிறுவர் பூங்காவிற்கு அருகாமையில் உள்ள வீதியில் குறித்த வயோதிபர் உயிரிழந்த நிலையில் சடலமாக நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டிருந்தார்.

சம்பவ இடத்திற்கு சென்ற முல்லைத்தீவு நீதவான்சடலத்தை பார்வையிட்டதுடன் மருத்துவ பரிசோதனைக்காக சடலத்தை மாவட்ட வைத்திய சாலைக்கு அனுப்பும்படியும்பணித்தார்.

இதன்படி மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையின் முடிபில் மரணத்திற்கான காரணம் வெயிலன் தாக்கத்தால் ஏற்பட்ட அதிக இரத்த அழுத்தமே என மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளின் பின்ணா நேற்று அதிகாலை 4 மணிக்கு உறவினர்களிடம் சடலம் கையளிக்கப்பட்டுள்ளது. (செ-281)

### யாழ்.செயலக...

முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் மாவட்ட செயலகத்திற்குள் அத்துமீறி பிரவேசிக்க முயற்சித்திருந்த வேளை மாவட்ட செயலாளர், பின்கதவால் வெளியேறிய சம்பவமும் பதிவாகியிருந்தது.

இந்த சம்பவம் இடம்பெற்ற தருணத்தில் மாவட்ட செயலகத்தில் ஒருசில பொலிஸ் அதிகாரிகளே பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகவும், அதனால் தற்போது பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டதாகவும் மாவட்ட செயலாளர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதனை கவனத்திற்கொண்ட பொலிஸ் தலைமையகம் யாழ். மாவட்ட செயலகத்திற்கு மேலதிக பொலிஸ் பாதுகாப்பை வழங்க முன்வந்துள்ளது. (செ-12)

## அமெரிக்காவின்...

நாத் ஜயவீர தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கை பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த போதிலும், இலங்கையில் கடந்த ஆண்டில் பாரிய மனித உரிமை மீறல் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

துன்புறுத்தல்கள், கடத்தல்கள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்கள் உள்ளிட்ட 11 மனித உரிமை குற்றங்கள் பாதுகாப்பு பிரிவினரால் இழைக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் கிளிநொச்சியில் 3 வயது சிறுமி கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் அவரது பெற்றோர் மற்றும் சகோதரர்கள் பொலிஸாரால் அழைத்து செல்லப்பட்டு துன்புறுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீரவிடம் வினவிய போதே, இந்த அறிக்கை குறித்து பதிலளிக்க கால அவகாசம் தேவை என குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிக்கை தொடர்பில் முழுமையாக ஆராய்ந்து பாதுகாப்பு செயலாளருடனும் கலந்துரையாடல்களை நடத்தி நாளை மறுதினம் 18ஆம் திகதி இதற்கு பதிலளிப்பதாக அவர் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, ஓமந்தை சோதனை சாவடி மூடப்பட்டமை, ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர்கள் இலங்கைக்கு வருகைத் தருவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல், புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் நபர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டமை ஆகியன வரவேற்கக் கூடிய விடயங்கள் என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், கடந்த ஆண்டில் 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நிறைவேற்ற கிடைத்தமையும் வரவேற்கக்கூடிய ஒரு விடயம் என அந்த திணைக்களத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (செ-12)

## பணச் சலவை...

விசாரணைகளை நடத்தி வருவதுடன் பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் மரணம் தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை நடத்தி வருகிறது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை கைது செய்ய பரிந்துரைக்கும் அளவிற்கு ஏதுவான காரணங்கள் இருப்பதாக பொலிஸ் உயர்மட்ட தரப்பு தகவல்கள் கூறுகின்றன.

பணச்சலவை தொடர்பில் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக ஊழலுக்கு எதிரான முன்னணி செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையை பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸிடம் சமர்பித்துள்ளது.

அதேவேளை நாமல் ராஜபக்ச தலைமையிலான கவர்ஸ் கோப்ரேட் பிரைவட் லிமிட்டட் நிறுவனம், ஹலோ கோர்ப் நிறுவனத்தின் 125 மில்லியன் பெறுமதியான பங்குகளை கொள்வனவு செய்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் மாகாண சபை உறுப்பினர் வசந்த சமரசிங்க கடந்த வருடம் முறைப்பாடு செய்திருந்தார். இதனிடையே வசிம் தாஜுதீன் மரணம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வு திணைக்களம் சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை தற்போது ஆரம்பித்துள்ளது.

சந்தேக நபர்களில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் மெய்ப்பாதுகாவலர் கப்டன் திஸ்ஸ உள்ளிட்ட சந்தேக நபர்கள் அதில் அடங்குகின்றனர். கொழும்பு மேலதிக நீதவான், சந்தேக நபர்களை கைது செய்வதற்கான அனுமதியை குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு வழங்கியுள்ளதாக கூறப்படுகிறது. சம்பவம் தொடர்பான அடுத்த தவணை வழக்கு விசாரணைகளுக்கு முன்னர் சந்தேக நபர்கள் கைது செய்யப்படலாம் என கூறப்படுகிறது.(செ-12)

## வடக்கு...

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த எதிர்க்கட்சி தலைவர் கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்டோருடன் பல உள்ளக சந்திப்புக்களை நடத்தியிருந்தார். இதன் போது வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்களையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

வடக்கு மாகாண அமைச்சர்களை மாற்றக்கோரி மாகாண சபையின் பதினாறு உறுப்பினர்கள் கையெழுத்திட்டு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் மகஜர் ஒன்று கையளித்திருந்தனர். இந்த விடயம் தொடர்பில் மாகாண சபை உறுப்பினர்கள் கட்சித் தலைவரிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

வடக்கு மாகாண சபையின் முதலாவது தேர்தல் 21.09.2013 அன்று நடைபெற்றது. 11.10.2013 அன்று சத்திய பிரமாணம் செய்து பதவியேற்று கொண்டோம். 11.04.2016 அன்று இரண்டரை வருடங்களை பூர்த்தி செய்துள்ளோம். மிகுதி இரண்டரை வருடங்களை சிறப்பாக கடப்பதற்கு மேற்படி மாற்றங்களை ஏற்படுத்தி தருமாறு கோரியும் முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையில் உள்ள நான்கு அமைச்சர்களும் மாற்றப்பட்டு அதே தகுதியுடைய ஏனைய நான்கு பேருக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்பட வேண் டும். இவ்வாறு அமை ச்சு பதவிகள் வழங் கப்படும் போது, நான்கு கட்சிக ளினது பிரதி நிதிகளுக்கும் வழ ங்கப்பட வேண்டும்.

மேற்படி மாற்ற ங்களுக்கு தேவை ஏற்படின் அவைத்தலை வர், பிரதி அவைத்தலைவர் பதவிகளையும் புதியவர்களுக்கு வழங்க முடியும், இறுதி யுத்தத்தில் கடுமையாக பாதிக்கப்பட்ட முல் லைத் தீவு மாவட்டத்திற்கு அமைச்சு பதவி வழங்கப்பட வேண்டும். தேர்தல் முடிந்த கையோடு புதிய அமைச்சர்களின் தெரிவின் பின்னர்,

பொறுப்புக்கூறல் பதவிகள் பிரித்து கொடுக்கப்பட்டன, எனினும் இந்த துறைகள் சிறப்பாக இயங்காத நிலையில் அவற்றை நீக்குமாறு தங்களுக்கு (முதலமைச்சருக்கு) அறிவித்தும் புதிய துறைகள் பிரித்து வளங்கப்படனவே தவிர நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. இவற்றை சிறப்பாக இயங்க வைக்க முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். என கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. இந்த கோரிக்கைகள் நேற்றைய தினமும் சம்பந்தனிடம் முன்வைக்கப்பட்டது. இது தொடர்பில் தனியே கட்சி முடிவெடுக்க முடியாது எனவும் முதலமைச்சரிடம் பேசியே நடவடிக்கை எடுக்க முடியும்.

எனினும் மாகாண சபை உறுப்பினர்கள் விரும்பினால் அது தொடர்பில் நாம் சாதகமாகத்தான் பரிசீலனை செய்ய வேண்டும். எனினும் முதலமைச்சரிடம் கலந்துரையாடிய பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் என சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

மேலும் வடக்கு மாகாண சபையின் தீர்வு திட்டம் சிறந்த முறையில் காணப்பட்டால் அதனை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளும் எனவும் அவர் தெரி வித்துள்ளார். (செ-4)

## தமிழர்களது...

மேற்படி போட்டி யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத் தலைவர் செ.சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தனது உரையில் மேற்படி கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

அவர் தனது உரையில் மேலும் குறிப்பிடுகையில்,

தமிழர்களது பாரம்பரியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் அவை எமது இனத்தின் அடையாளங்களாகக் காணப்படுகின்றன.

எமக்கென்றொரு தனித்துவமான பண்பாடு உண்டு. கலாசாரம் உண்டு. எமக்கென்றொரு தனித்துவம் உண்டு.

தமிழர்களது பாரம்பரிய விளையாட்டுக்கள் தமிழர் திருநாள்களில் சிறப்பாக இடம் பெறுவது வழக்கம்.

ஆனால் அவை தற்போதைய காலங்களில் மழுங்கடிக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. இருந்த போதிலும் எமக்குரிய பாரம்பரிய கலைகளை, விளையாட்டுக்களை கிராமங்களில் தற்போதும் கட்டிக்காத்து தமிழர் திருநாள்களில் கடைப்பிடிக்கப்புடுவதனை காணமுடிகின்றது.

சித்திரைப் புத்தாண்டு தினத்திலே வட மாகாண கல்வி கலாசார பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சுடன் இணைந்து யாழ். மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்திய தாச்சிப் போட்டியானது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

இதில் பங்குபற்றிய கழகங்களைச் சேர்ந்த வீரர்கள் வெற்றி தோல்வி என்பதற்கப்பால் மிகவும் சிறந்த முறையில் விளையாடித் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தார்கள்.

இந்த விளையாட்டினைப் பார்வையிட்ட மக்கள் மத்தியில் மனமகிழ்ச்சியும் கவலைகளை மறந்த நிலையும் ஏற்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

விளையாட்டுக்கள் வெற்றி தோல்வி என்பதற்கப்பால் மனிதர்களது உடல், உள, ஆரோக்கியத்திற்கும் உறுதுணையாக அமைகின்றன.

அதனால்தான் எமது முன்னோர்கள் உரிய கால நேரம் பார்த்து உரிய விளையாட்டுப் போட்டிகளையும் ஆடல் பாடல் கூத்துக் கலைகளையும் நிகழ்த்தி ஆரோக்கியமான வலிமை பொருந்தியவர்களாக நீண்ட காலம் சிறப்பாக வாழ்ந்தார்கள்.

எனவே தமிழர்களாகிய நாம் எமது இனத்தின் பாரம்பரியங்களைப் பேணிக் கொள்வதுடன் ஆரோக்கியமான சமூகமாக நாம் வாழ்ந்து எமக்கான இலக்குகளை நேர் வழிகளில் அடைவதற்கு உழைத்து வெற்றி பெறுவதற்கு எமக்கிடையே நல்ல ஒற்றுமையும் விட்டுக்கொடுப்பும் சகிப்புத் தன்மையும் ஏற்பட வேண்டும். அதற்கு இப்படியான விளையாட்டுக்கள் வழிவகுக்கின்றன என்றார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சர் த.குருகுலராசா மற்றும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் ஆர்.குருபரன், வட மாகாண சபை உறுப்பினர் இ. ஆனோல்ட், உடுவில் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் போன்றோரும் கலந்து கொண்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-281)

## கடவை காவலாளி...

6.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டம் இன்று மாலை 6.00 வரை இடம்பெற இருந்தது.

இந்நிலையில் போக்குவரத்துப் பிரதியமைச்சர் அசோக அபேசிங்கவினால், பாதுகாப்பற்ற புகையிரத கடவை காவலாளிகளின் ஊதியத்தை அதிகரிப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டமையினால் வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர தீர்மானித்ததாக நிமல் சந்திரசிறி கூறியுள்ளார். (செ-12)

## மின்சாரத் தடை...

வக்கிரமசிங்க குறித்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்-சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் மின்சாரம் துண்டிக்கப்பட கூடாது என உத்தரவிடப்பட்டிருந்தும் நேற்று முன்தினம் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருந்ததாக பிரதமருக்கு பொதுமக்களிடம் இருந்து முறைப்பாடு கிடைக்கப் பெற்றிருந்தது.

குறித்த முறைப்பாட்டை தொடர்ந்து பிரதமர், மின்சார அமைச்சகம் மற்றும் மின்சார சபை அதிகாரிகளுக்கு குறித்த மின்சாரத் தடை தொடர்பில் தமக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.(செ-12)

## 1056 பேர்...

தினதில் இருந்து நேற்று வரை 1056 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்டவர்களில் அதிகமானவர்கள் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.(செ-12)


வேலையாட்கள் தேவை

சைவ உணவகத்துக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை

- ரீ-மேக்கர் (தேநீர் தயாரிப்பவர்)
- உணவு பரிமாறுபவர்
- பார்சல் கட்டுபவர்
- மரக்கறி வெட்டுபவர்
- றொட்டி தயாரிப்பாளர்

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

(4217)

தொடர்பு:- 076 622 8879

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532




விற்பனைக்கு

சங்கரத்தை சந்தி, வட்டுக்கோட்டையில் 5பரப்பு காணி விற்பனைக்குள்ளது.

தொடர்பு:
077 328 8795, 076 995 1740

(4192)





இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.